**கவனிக்க.-** 20.07.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1769 - 2012 ජූලි මස 27 වැනි සිකුරාදා - 2012.07.27

1769 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை


(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1068 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | 1069 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2008 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (யூலை-செத்தெம்பர்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஓகத்து மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஹக்மன பிரதேச சபை

துணை விதி

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 1952 ஆம் ஆண்டின் 06 ஆவது உள்ளூராட்சி நிறுவனத்தின் (மேலதிக துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்படி உள்ளூராட்சிமன்ற பொறுப்பமைச்சினால் தயாரிக்கப்பட்டு 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும். 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி சட்டத்தின் 2 (3) பிரிவின் படி தென் மாகாண உள்ளூராட்சி சபைகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இலக்கம் 1162, 2000.12.08 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேலதிக துணைவிதியில் இலக்கம் 21 ஐ தவிர இலக்கம் 01 தொடக்கம் 42 வரையான துணைவிதிகளை அவ்வாறே ஏற்றுக்கொள்ளவும் இலக்கம் 21 அருவருக்கத்தக்க ஆபத்தான வியாபாரம்.

துணைவிதியின் அட்டவணையில் கீழே காட்டப்பட்டுள்ள வியாபாரங்களை உட்படுத்தி ஏற்றுக்கொள்வதற்கு இந்த அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த 2012.03.27 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்ட இலக்கம் 12-1 இன் கீழ் நடத்தப்பட்ட சபைக்கூட்டத்தில் சபைத் தலைவர் சீ. பீ. எச். ஹல்பகே அவர்களால் தீர்மானித்து டபிள்யூ. எஸ். பீ. கே. அமரசேகர அவர்களினால் உறுதிப்படுத்தி சபை மூலம் ஏகமனதாக தீர்மானித்துள்ளதென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

சீ. பீ. எச். ஹல்பகே,
தலைவர்,
ஹக்மன பிரதேச சபை.

ஹக்மன பிரதேச சபை அலுவலகம்,
2012, ஏப்பிறல் 09.

### அட்டவணை

01. கற்குழி இயந்திர கல் ஆலை நடத்தல்.
02. கற்கல் உடைத்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
03. மர ஆலையொன்று நடத்துதல்.
04. பெற்றோல் டீசல் மண்ணெண்ணெய் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
05. ஆலையொன்று நடத்துதல்.
06. தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்று களஞ்சியமொன்று நடத்துதல்.
07. அச்சகமொன்று நடத்தல்.
08. கை இயந்திர அச்சகமொன்று நடத்தல்.
09. மரங்கள் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
10. மோட்டார் வாகனம் கராஜ் நடத்தல்.
11. மோட்டார் வாகனம் சேர்விஸ் செய்யும் நிலையம் நடத்தல்.
12. மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி சேர்விஸ் செய்யும் நிலையம் நடத்தல்.
13. எல். பீ. எஸ். கேஸ் விற்கும் நிலையம் நடத்தல்.
14. விவசாய இரசாயனப் பொருட்கள் மொத்த விற்பனை நிலையம் நடத்தல்.
15. மாணிக்கக் கற்கள் தோண்டும் நிலையம் நடத்தல்.
16. இரும்பு வேலைத்தளம் நடத்தல்.
17. வேல்டின் வேலைத்தளம் நடத்தல்.
18. அமில வாயுவினால் ஒட்டு (வேல்டின்) வேலைத்தளம் நடத்தல்.
19. இயந்திரங்கள் மூலம் மிளகாய் சரக்கு விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
20. இயந்திரங்கள் மூலம் மர ஆலை செய்யும் நிலையம் நடத்தல்.
21. மர ஆலை செய்யும் நிலையம் நடத்தல்.
22. கொப்பரா உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
23. தீப்பெட்டி உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
24. கண்ணாடி உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
25. சாயம் வார்னிஸ் டிஸ்டெம்பர் களஞ்சியப்படுத்தி உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்.
26. அஸ்பெஸ்டஸ் தகடுகள் விற்பனை செய்யும் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
27. வளு இயந்திரங்கள் மூலம் பிடவை நெய்யும் நிலையம் நடத்தல்.
28. விற்பனைக்காக தேயிலை களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல்.
29. ரப்பர் பால் ஒன்று சேர்த்தும் ரப்பர் சீட் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல்.
30. நேர்முக மிருக வளர்ப்பு நிலையம் நடத்தல்.
31. கோழி வளர்ப்பு நிலையம் நடத்தல்.
32. மொத்த விற்பனை நிலையமும் பழுதடையும் உணவுவகைகளும்.
33. வீட்டுத் தளபாடங்களும் உற்பத்தி செய்தல்.
34. டயர் டியூப் வோல்கனயிஸ் நிலையம் நடத்தல்.
35. குளிர்பானங்கள் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல்.
36. ஐஸ்கிரீம் குளிர்பானம் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல்.

**கேகாலை நகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கம் கொண்ட களியாட்ட விடுதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் சட்டம்*

**6 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்**

*இங்கு கீழ் உப அட்டவணையில் காணப்படும் பெயர் குறிப்பிட்டுள்ளவரது பெயருக்கு முன்னால் குறிக்கப்பட்டுள்ள களியாட்ட விடுதியை அந்த இடத்தில் நடாத்திச் செல்வதற்கு 2013 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பப்பத்திரம் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் சட்டமூலத்தின் 6 ஆம் இலக்க பிரதிக் கிளையின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*இக்களியாட்ட விடுதிக்கண்மையிலோ, களியாட்ட விடுதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்துக்கண்மையிலோ வதியும் ஒருவரால் அந்தக் களியாட்ட விடுதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கப்படுமாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து நான்கு (04) வாரங்களுக்குள் தமது ஆட்சேபனைக்கான காரணத்தை எழுத்துமூலம் அறிவிப்பதோடு அதனை இரு பிரதிகளுடன் என்னிடம் சமர்ப்பிக்குமாறு இத்தால் வேண்டிக் கொள்ளப்படுகிறது.*

*ஜீ. கே. சமரசிங்ஹ*
*தவிசாளர்,*
*கேகாலை நகர சபை.*

*நகர சபை அலுவலகம்,*
*கேகாலை,*
*2012.07.09.*

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் முகவரி | களியாட்ட விடுதியின் தவிசாளர்/ செயலாளர் | களியாட்ட விடுதியின் பெயர் | களியாட்ட விடுதியின் புதிய நடவடிக்கைகளுக்கான அதிகாரமும் /இடமும் |
|---|---|---|---|
| விதான ஹேனயலாகே சிரில் 167/28, ஒலகம, கேகாலை | தவிசாளர் | புளூலைட் ட்ரேடர்ஸ் அன்ட் ரெஸ்டுரண்ட் | இல. 152, கலகல்ல மாவத்தை, கேகாலை |

*7-758*

# துணை விதிகள்

**கிழக்கு மாகாண மாகாண சபை**

*கிழக்கு மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு மீள் குடியேற்றம், கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் என்ற விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 123(1) மற்றும் (2) உடன் சேர்ந்து வாசிக்கப்படும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான) சட்டங்களினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு தெகியத்தகண்டிய பிரதேச சபையினால் ஆக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் துணைவிதியை இத்தால் அங்கீகரித்து இதன்கீழ்க் குறிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்படியாக பகிரங்கப்படுத்தவும் கட்டளையிடுகின்றேன்.*

*சிவனேசதுரை சந்திரகாந்தன்,*
*முதலமைச்சரும்*
*நிதி மற்றும் திட்டமிடல்,*
*உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம்,*
*கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டம் மற்றும் ஒழுங்கு,*
*பிராந்திய நிருவாகம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சரின் செயலகம்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை,*
*வரோதய நகர்,*
*திருகோணமலை,*
*2012, ஆனி 25.*

***தெஹியத்தகண்டிய பிரதேச சபை***

***திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணை விதிகள்***

*தெஹியத்தக்கண்டிய பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் போது உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல, கொண்டு செல்லல், இடம் மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுக்கோப்பான முறையில் திண்மக் கழிவை வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு விதி என்பவற்றுக்கான ஒரு துணை விதி.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93இனாலும் பிரிவுகள் 122 மற்றும் 126(ix) விடயம் (ஆ) வின் கீழும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமையவாக 1989ஆம் ஆண்டின் 12ம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விலைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமைவாகவும் தெஹியத்தக்கண்டிய பிரதேச சபையின் 2012.03.30 ஆந் திகதிய கூட்டத்தின் 10/03/i ஆம் இலக்க தீர்மானத்துக்கமையவும் இத்துணை விதிகள் ஆக்கப்படுகின்றன.*

**பொதுவானவை**

*1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. இத்துணைவிதி தெஹியத்தக்கண்டிய பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில்,தனிப்பட்ட வளாகங்களில், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் உருவாக்கப்படும் "திண்மக் கழிவை" அகற்றுதல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடமாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல், வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல்,மற்றும் அச்செயல்களுக்கு இடைநேர்விலைவான நடவடிக்கைகளுக்குமாக ஆக்கப்படுகின்ற ஓர் துணைவிதியாகும*

*3. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றியும் ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.*

*4. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் வளாகத்திற்குள்ளேயே கழிவினை சேகரித்தல், வகைப்படுத்தல், சேகரிப்பதற்கும், கொண்டு செல்லுதலுக்கும் மற்றும் அகற்றுதலுக்கும் ஏற்றவகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாதல் வேண்டும்.*

*5. (i) வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைமையின் மூலம் சேகரிக்க முடியும்.*

*(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட்ட கழிவினை துணை விதிகளின் முன்னரான உப பிரிவுகளுக்கமைவாகவும் இதனகத்துப்பின்னரான 8 தொடக்கம் 21 வரையான ஏற்பாடுகளுடனும் இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும்.*

*(iii) 8 தொடக்கம் 20 வரையான துணை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேகரிப்பிற்காக போடப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்கு உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் பயன்படுத்தப்படும் பை, கைப்பிடியற்ற பை, வாளி அல்லது ஏனைய கொள்கலன்கள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் விவரணம் மற்றும் தரத்திற்கமைவாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவை கழிவு சேகரிப்பை போடுவதற்கு முடியாத நிலையில் கிழிந்து,சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டில்லாது நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும்*

*(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக சொல்லப்பட்ட கொள்கலன்களை பிரதேச சபைமுழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மானிய அடிப்படையில் வழங்கலாம்.*

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கப்பட்ட கழிவை பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையிலுள்ள சேகரிப்பு முறை மற்றும் நேர அட்டவணைகளை பொது அறிவித்தல் மூலம் அறிவித்ததற்கமைவாக உப பிரிவு (i)இன் ஏற்பாடுகளுக்கிணங்கி அகற்ற முடியும்.

(vi) அயலவர், குடியிருப்பாளர், விருந்தாளிகள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு தீங்கை அல்லது காயத்தை ஏற்படுத்தும் கழிவு மூலங்களை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு அல்லது சேகரிக்க, களஞ்சியப்படுத்த அல்லது அகற்ற முடியாது.

(vii) துணைவிதிகள் 8, 9, 10, 11, 12, 13, 15, 18 மற்றும் 19 வரை விபரிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணங்களை கீழ்க்காட்டப்படுமாறு செலுத்துதல் வேண்டும்:-

(அ) மாதாந்தம் செலுத்துவோர் அடுத்துவருகின்ற மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ஒருவருடத்திற்கான சேவைக்கட்டணத்தை வருட ஆரம்பத்தில் செலுத்துவோர் குறித்த வருடத்தின் மாசி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

6. (i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ,பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ,சாலையிலோ ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை அகற்ற முடியாது.

(ii) எவரேனும் நபர் பிரதேச சபைக்குள் உள்ள திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7ஆம் துணை விதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கோ,வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ, பரிகரிப்பதற்கோ 7வது துணை விதியின் கீழ் அனுமதிபெற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் துணை விதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் கழிவு வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii)இன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக் கழிவுவகை 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்காட்டப்படுபவை தவிர ,அத்தகைய வளவிற்குள் கழிவுகளை அகற்றலாம் :-

(அ) பிரதேச சபையினால் அத்தகைய கழிவுகள் அகற்றப்பட முடியாதென தடைசெய்யப்பட்ட இடங்கள் அல்லது

(ஆ) பிரதேச சபை மூலம் குறிப்பாக தடைசெய்யப்பட்ட சில வகைக் கழிவுகள்

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டும் கருவிகள் அல்லது உலைகள் மூலம் எரிக்கலாம் அல்லது பிரதேச சபை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதாவது வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நடைமுறைக்குப் பொருந்தக்கூடியதும், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான முறையில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை அந்த வளாகத்தினுள்ளேயே பரிகரிக்கலாம் அல்லது பதப்படுத்தலாம். அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பிரதேச சபைஅகற்றப்படும் திண்மக்கழிவின் தன்மையைக் கவனத்திற் கொண்டு காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் ஒரு சேவைக்கட்டணத்தை பிரதேச சபைக்கு வழங்கி பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் அத்தகைய திண்மக் கழிவுகளை ஒப்படைக்கலாம்.

(iv) எவரேனும் ஒரு நபர் பிரதேச சபை செயலாளருடனான முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள், வீதி ஓரத்தினுள், அல்லது பொதுவழியொன்றின் ஓரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை பிரதேச சபையின் கழிவு சேகரிக்கப்பவரிடம், அகற்றப்பட வேண்டிய கழிவின் அடிப்படையில் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தை கொடுப்பனவு செய்து கையளிக்கலாம்.

(v) ஒவ்வொரு நபரும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள விலங்குகள் வீதியொன்றின் பொது வழியில் அல்லது பொது இடத்தில் மலசலங்களை வெயியேற்றுவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளுடன் இணங்கும் வகையில் அந்த நபரே அம்மலசலங்களை தூய்மைப்படுத்தவும் அகற்றவும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(vi) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து பிரதேச சபைக்குள்ளமைந்துள்ள வீதிக்குள், பாதைக்குள் பொதுவீதிக்குள் அல்லது பொதுஇடங்களுக்குள் எவ்வகையான கழிவுகளையும் வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vii) வீடு அல்லது ஏதேனும் கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்மந்தமான நிகழ்ச்சி நிரலொன்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

**8.குடியிருப்பு வளவுகள்**.- (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய முறை மூலமாகவோ பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சேதனக்கழிவு.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரித்து பைகளில், வாளிகளில் அல்லது ஏனைய கொள்கலன்களில் இட்டு அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும். உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள்,அல்லது விலங்குகளின் மலசலம் என்பன வற்றைத் தாமதிக்காது பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) ஒவ்வொரு குடியிருப்பாளரும் உபபிரிவு (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத்தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

9. (i) பலதரப்பட்ட வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்டு பல் மாடிக்குடியிருப்புக் கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும்,செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களை தம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i) இல் குறிப்பிடப்பட்ட ஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள் (i) மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில்அக் கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோஅல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட

காரணமக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ செயலாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையுமாகும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒருமாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத் துணை விதியின் உபபிரிவு (I) விடயம் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும். அத்தகைய கழிவுகள்அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை விடயம் (இ) மற்றும் (ஈ)களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*10.* **கடைகளும் அலுவலகங்களும்**.- (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்பட வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின்உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும் செயலாளரின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவைப் இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv) ல் குறிக்கப்பட்டவாறான ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் எந்த உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளைபிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையிலான கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களைப் பராமரிப்பதும் கழிவகற்றுவதும் மற்றும் அத்தகைய கடை, அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதும் ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

வேறு வகையில் தேவைப்படுததப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக:

"குடியிருப்பாளர்" என்பது ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

"அலுவலகம்" என்பது 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக்கொண்டிருக்கும்.

"கடை" என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம் என்பதுடன் உணவு அல்லது குடிபானவகை ஆகியவற்றை வியாபாரத்திற்காக வைத்திருக்கும் இடம் அடங்கலாக மற்றும் முடி திருத்தும் கடை அல்லது அழகு நிலையம் நடத்தும் இடம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

11. **உணவகங்கள்**.- (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக செய்யப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iii) இந்தத் துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) உபவிரிவு (i) இல்காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் இத்துணை விதியின் உபபிரிவு (iv) இன் கீழ் கையளிக்கப்படாத விடத்து பிரதேசசபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"உணவகம்" என்பது உறங்குவதற்குரிய வசதியுடன் கூடிய அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபான உணவுகள் அல்லது மதுவகை என்பன வழங்கப்படும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும் :-

12. **மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள்**.- (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியத்திற்கு பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட ஒரு கொள்கலனில் பிரித்து வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் போடப்பட வேண்டும்.

(iii) இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணை விதியின் நோக்கத்திற்காக

"மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்" என்பது மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது காட்சிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

*13. **மீன், கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்**.*- (i) மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும் :-

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) கீழ் பிரிக்கப்பட்ட விடயம் (அ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், விடயம் (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலுமான ஒரு கொள்கலனினுள் போட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறாக ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணை விதியின் நோக்கத்திற்காக

“மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடை” என்பது விற்பதற்கான நோக்கில் அல்லது காட்சிப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

*14. **நடைபாதை வியாபாரம்**.*- (i) பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதைவியாபாரியும் நடைபாதை வியாபாரத்திலும் ஈடுபட முடியாது

(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழான தேவைபாடுகளுக்கமைவாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை செயலாளர் அறவிட்டுக்கொண்டு ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார் என்பதுடன் உத்தேசவியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.

(iii) உப பிரிவு (i) கீழான அனுமதிக்கால முடிவில் செயலாளர் உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (iii) கீழ் அறவிடப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.

(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தை நடத்தும்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.

(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தை தடைசெய்யும் வகையில் ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(vii) அத்தகைய கழிவுவகைகளை ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் பொருத்தமான வெவ்வேறு வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்படுதல் வேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக வாளி அல்லது

கொள்கலனுள் எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உற்புகாவண்ணம் போடப்பட்டு உள்ளேவைத்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கழிவுகள் போடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டால் அது மூடியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத்துணைவிதியின் உபபிரிவு (iv) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடமோ அல்லது பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடமோ ஒப்படைக்க முடியும்.

(xi) எந்தவொரு நடைபாதை வியாபாரியும் கழிவுகளுடன் கூடியகொள்கலனை வியாபாரம் நடைபெறாத போது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ வைக்கக் கூடாது.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"**நடை பாதை வியாபாரி**" என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்று அல்லது ஒரு சேவை வழங்கி வரும் ஒரு நபரைக் குறிக்கும்.

15. **தொழிற்சாலைகள்**.- (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள்ளே பின்வருமாறு பிரித்தெடுக்கவேண்டும்.

(அ) உயிரியல் சேதனக்கழிவு ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு.

(ii) இத் துணைவிதியின் (i) உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"தொழிற்சாலை" என்பது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

16. **அகழ்வு, நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**.- (i) ஏவரேனும் ஒரு நபரால் ஏதாவதொரு வீதி, தெரு அல்லது ஏதாவதொரு பொது இடம் அகழ்தெடுக்கப்படுவதினால் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பினால் அல்லது தகர்த்தலினால் உருவாக்கப்படும் அத்தகைய கழிவை ஒரு பொருத்தமான முறையில் அந்த வளவிலிருந்து அகற்றும் வரைக்கும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது வளவினுள் சேர்த்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) ல் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்தை செயலாளரிடம் கொடுப்பனவு செய்வதன் மூலம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது தகர்க்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும்" என்பது ஒரு வேலைகொள்வோனால் அத்தகைய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கும்

"கழிவு" என்பது பூமி, களி, தூசி, கட்டட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு மற்றும் ஏதாவது கட்டட நிர்மாணிப்பு அல்லது அழிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு என்பவற்றை உள்ளடக்கும்.

*17. (i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற வசதிகள் அல்லது ஏதேனும் பொது அடிப்படை வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக ஏதாவதொரு பொது இடம் அல்லது வீதி, தெரு என்பவற்றை அகழ்கின்ற ஏதேனும் நபர் செயலாளரிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்பித்து இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்காக முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நபரின் அத்தகைய செயலால் உருவாக்கப்படும் கழிவகற்றல் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட வேலை முடிவடைந்த பின் பொது இடத்தில் அல்லது வீதியில் தற்ாகலிகமாக வைத்திருக்கக் கூடிய கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்கான செலவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை பணத்தை கழிவகற்றல் முற்பணமாக விண்ணப்பதாரி செயலாளரிடம் செலுத்துதலும் வேண்டும்.*

*(ii) ஏதேனும் ஒரு நபர் உபபிரிவு (i)இன் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுகுவதில் அலட்சியமாக இருந்தால் செயலாளர் அத்தகைய அங்கீகாரமொன்றை வழங்குவதற்கு முன் விண்ணப்பதாரியை, பிரதேச சபையால் அந்நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்திற்கு சமமான ஒரு தொகையை வைப்புச் செய்யக் கோர செயலாளருக்கு அதிகாரமுண்டு.*

*(iii) உபபிரிவு (i) அல்லது (ii) இன் கீழ் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் செயலாளரால் தீர்மர்னிக்கப்படும் விதத்தில் அத்தகைய கழிவுகள் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறான செலவீனம் உபபிரிவு (i) இன் கீழ் வைப்புக் கழிவகற்றல் முற்பணத்திலிருந்து சரிசெய்யப்படும்.*

*18. **வைத்தியசாலைகள்**.- (i) அனைத்து வைத்தியசாலைகளும் பிரதேச சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையின் உரிமையாளர் அந்த வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும் :-*

*(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;*
*(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;*
*(இ) பயன்பாடற்ற கழிவு ;*
*(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு.*

*(ii) உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உபபிரிவு (ை)விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்க வேண்டும் என்பதுடன் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கவோபடுதலும் வேண்டும்.*

*(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகர்ரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.*

*வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக :*

*"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்தியசாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வுகூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.*

*"தீங்குவிளைவிக்கும் சுகாதாரபராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.*

*19. **அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை**.- (i) எவரேனும் ஒருவர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.*

*(ii) இத்துணைவிதியின்உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான*

*நிபந்தனைகள் மற்றும் இரத்தம் குடல் மற்றும் மனித உணவிற்காக எடுக்கப்படாத மற்றைய உடற்பாகங்கள் மற்றும் பிரதேச சபையினால் சரியானதென தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கு அமைவாதல் வேண்டும்.*

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் (இதன் பின்னர் அனுமதிக்கப்பட்டவர் என அழைக்கப்படும்) அவருங்களது திண்மக் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்.

(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு.

(iv) பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும். இத்துணை விதியின் உபபிரிவு (iii) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொள்கலனில் இட்டு சூழலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலான முறையிலும் வைத்திருக்க வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாரான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின் போது வெளியேற்றப்படும் நீர்க்கழிவை 1980ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தூய்மைப்படுத்த வேண்டும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக :

"அறுவை மடுவங்கள்" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 272) அர்த்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்த்தத்தையே உள்ளடக்கும்.

20. **ஏனைய வளவுகள்**.- (i) துணை விதிகள் இலக்கம் 8 தெர்டக்கம் 19 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொது மக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய சமூக கலச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவை பின்வருமாறு வகைப்படுத்தலாம் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) உபபிரிவு (i) இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் பிரதேச சபைக்கு முன்னரே அறிவிக்க வேண்டும். ஆகவே அத்தகைய செயற்பாட்டிலிருந்து வரும் கழிவை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட முடியும். அத்தகைய விடயங்களில் கழிவு சேகரிப்பு காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்க அமையலாம்.

(iii) பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்படும்.

(iv) இத்துணைவிதியின் உபபிரிவு (i) ல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக்காலம் தீர்மானிக்கப்படுவதற்கமைய சேவைக்கட்டணமொன்றை பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்வதன் மூலம் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

*21. **வீதிகளும் பொது இடங்களும்.**- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும் :-*

(அ) *பிரதேச சபை பிராந்தியத்துள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வாகனப்போக்குவரத்து சாலைகள், பொது வடிகான்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றில் தூய்மையை மற்றும் சுத்திகரிப்பு நிலையை பராமரிப்பதற்கு.*

(ஆ) *அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவகற்றல் கொள்கலன்களை வழங்குதல், பொருத்துதல் சரியான முறையில் பராமரித்தல்.*

(இ) *விழாக்களில், விசேட நிகழ்வுகளில் பொது இடங்களில் பாவிப்பதற்காக அல்லது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்ட வாறான ஏதாவதொரு நிகழ்விற்கு அவ்வாறு செய்வதற்கு பிரதேச சபையால் முடிவெடுக்கப்பட்டால் அல்லது விசேட நிகழ்வுகள் மீதான அத்தகைய விழாக்களின் அமைப்பாளர்களிடமிருந்து எழுந்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து நடமாடும் கழிவு வாளிகளை வழங்குவதற்கு.*

(ஈ) *சுத்திகரிப்பு நிலையைப் பராமரிப்பதற்கு குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை பொருத்துவதுடன் அவற்றுள் போடப்படும் கழிவை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு அவை ஒரு தொல்லையாவதற்கு முன் அகற்றுவதற்கு.*

(உ) *மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏதாவது முறைப்பாட்டை விசாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.*

(ii)*எந்த நபரும் பிரதேச சபையால் வழங்கப்பட்ட ஏதாவது கழிவு வாளியினுள் வீட்டுப்பொருள், வர்த்தக, தொழிற்சாலை அல்லது ஏனைய கழிவுகள் விசேடமாக வைக்கோல், குப்பை போன்ற சிதறுகின்ற கழிவுகளைப் போடக்கூடாது.*

*22. **பிரதேச சபையின் கடமைகள்.**- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும் :-*

(அ) *கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவிப்பதற்கு,*

(ஆ) *கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேரித்து வைத்தல், அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பாக ஊடகங்களினுடாக மக்களுக்கு விழிப்புணர்வையும் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு ;*

(இ) *கழிவை குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கு சிறு முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு ;*

(ஈ) *கழிவை குறைத்தல், மீண்டும் பாவித்தல், சுழற்சி முறையாக பாவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குவதற்கு ;*

(உ) *மாறுபட்ட கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ;*

(ஊ) *பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் விவரணம் என்பனவற்றிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டதும், தேவைக் கேற்ற எண்ணிக்கையானதுமான பைகள், சாக்குகள், வாளிகள், மற்றும் கொள்கலன்களை வினைத்திறமையுடன் கூடிய கழிவுகளை பிரித்தல், சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நோக்கத்துக்காக உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர் களுக்கு வழங்குதல் ;*

(எ) *பிரதேச சபையின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட கழிவு வகைகளுக்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப் பட்டவாறான ஒரு கழிவு சேகரித்தல் அட்டவணை, சேகரிப்பு தினங்களை குறித்தல், நேரங்கள், முறைகள் மற்றும் சேவைக்கட்டணங்களைத் தயாரிப்பதற்கு அது பொது விடுமுறை தினங்களிலும் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம் ;*

(ஏ) *தனியாக அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக் கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு ;*

(ஐ) *அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவை சுத்தமான முறையில் எடுத்துச் செல்வதற்கு ;*

(ஒ) *செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் குறிப்பிடப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் ஏனைய கழிவு வகைகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகான்களை, பொது இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், பிரதேச சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளையும் ஒப்படைத்தல் ;*

(ஓ) செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் கூடியளவு நடைமுறைக்குகந்தவாறு அனைத்து உணவுகள் அல்லது அதன் பகுதிகளை பரிகரிக்கப்படுகின்ற, பதப்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய உயிரியல் சேதனக்கழிவு, மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி உள்ளாக்கக்கூடிய கழிவு மற்றும் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றின் அழித்தல் தொடர்பான ஒழுங்குகள் அடங்கலாக, பிரதேச சபையின் கழிவு சேகரிப்பவர்களால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட கழிவுகளுடன் தொடர்புபட்ட மிகச்சரியான அளவுகளை எடுத்தல் ;

(ஔ) மத்திய சூழல் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளையும் அழிப்பதற்கு ;

(ஃ) 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு மற்றும் ஒரு சுத்திகரிப்பு நில மடுவை பராமரிப்பதற்கு அல்லது கழிவை எரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு;

(க) கழிவை கூட்டுதல், சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகப்பொருத்தமான உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு ;

(ங) நிர்மாணிப்பு அல்லது புதுப்பித்தலின் போது உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை அழிக்கும் விதம் பற்றிய விபரங்களை மற்றும் ஒரு வீடு அல்லது ஏனைய வளாகங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தலுக்காக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் ஆரம்ப கட்டம் முடியும் தறுவாயில் உடைந்த கல்லுகளை அகற்றல், பயன்படுத்தல், சேர்த்துவைத்தல் தொடர்பான விடயங்களை அங்கீகரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும் ;

(ச) பிரதேச சபைக்காக ஒரு உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு ;

(ஞ) திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தேசிய உபாயங்களுடன் இணங்கிப் போகும் வகையிலான ஒரு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம் விபரமாக ஆகக்குறைந்தது ஒரு வருடத்தை தழுவிய வகையிலும் இறுதி அழித்தல் நடவடிக்கை மூன்று வருடம் முன்னோக்கியதாகவும் இருக்கும் வகையிலும் அத்தகைய திட்டம் பிரதேச சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வகையில் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் ;

(ட) உட்பிரிவுகள் (அ) தொடக்கம் (ஞ) வரை குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தலைவருக்கும் செயலாளருக்கும் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் விசாரிப்பதற்கும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் பதினான்கு நாட்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும்.

23. **அனுமதிப்பத்திரங்கள்**.- (i) பிரதேச சபையானது கழிவை மீள்பாவனை அல்லது சுழற்சி முறைப் பாவனை அல்லது உரம், உயிர் வாயு அல்லது ஏனைய தயாரிப்பில் ஈடுபடும் நபர் ஒருவருக்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அந்த நபர் :-

(அ) பிரிவு (I) ஏற்பாடுகளின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரம் மீளப்பெறப்பட்டிருக்கும் போது எவரும் கழிவைப் பெறவோ, சேகரிக்கவோ முடியாது.

(ஆ) பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இத்துணை விதியின் உட்பிரிவுகளின் படி இந்தப் பிரதேச சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராக,

(இ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராக,

(ஈ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் இணங்கும் வகையிலாக நிர்மாணிக்கப்பட்ட இடத்தைக் கழிவு சேகரிப்பிற்கு ஒதுக்கீடு செய்தல்,

(உ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லை இல்லாமலும் சுத்தமாக, சேகரிக்கப்பட்ட கழிவை கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்குபவராகவும்,

(ஊ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, பிரதேச சபைக்கு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் ஏதாவது கழிவை அல்லது கழிக்கப்பட்டதை அல்லது மீளவும் பாவிப்பதை பிரதேச சபை எல்லைக்குள் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கட்டணத்தை வழங்குவதன் மூலம் ஒப்படைப்பதற்கு உடன்படுகின்றவராகவும்,

(எ) பிரதேசசபையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

(ஏ) செயலாளர் அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவுகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி, ஏனைய நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும்.

(ஐ) செயலாளர் வழங்கியஅனுமதிப்பத்திரத்தை இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i)ன் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் இந்தத் துணைவிதியின் கீழ் மீளப்பெறலாம்.

**24. கழிவை அழிக்கும் பகுதிகள்.-** (i) அதிகாரமற்ற நபர் எவரும் பிரதேச சபையால் கழிவகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஏதாவது பொருளை, மூலங்களை அல்லது குப்பையை அகற்ற அல்லது அப்பகுதியுள் நுழைய, அலைந்து திரிய, பொருட்களை வைக்க, குழப்ப முடியாது. அந்த நோக்கத்திற்காக குறித்த சில நிபந்தனைகளுக்கிணங்க பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட குப்பையை வைத்திருக்க முடியாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அங்கீகாரத்தின் ஏதாவது நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் எந்தவொரு நபரும் ஏதாவது காணியைப் பயன்படுத்த அல்லது வழங்குவதற்கு, செயற்படுத்த அல்லது அந்தக் காணிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவை வைத்திருப்பதற்கான வசதியை அல்லது பிரதேசசபை எல்லைக்குள்ளான வசதிகளைபெற முடியாது.

**25. ஏனையவை**

(i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரத்திலும் இந்தத் துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தேவைப்படுத்தப்படும் தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் இந்தத் துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் தடை செய்ய முடியாது.

(iv) இந்தத் துணைவிதிகளை அமுல்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் எவராவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உதவியாளர் ஆகியோருக்கு காலத்திற்குக் காலம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட முடியும்.

(v) இந்தத் துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவார்.

**26. மீறல்களும் தண்டனைகளும்.-** (i) இப்பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத்துணைவிதிகளில் 3 தொடக்கம் 20 வரையான மற்றும் 23 தொடக்கம் 25 வரையான ஏற்பாடுகள் எதனையாவது மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்:-

(அ) ஏதாவது ஒரு அத்தகையமீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750.00) தண்டப்பணம்

(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணம் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250.00)

27. **பொருள் கோடல்**.- இந்தத் துணை விதிகளின் நோக்கத்திற்காக, இந்தக் கைநூல் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதாகும்.

"வாளி அல்லது வேறு கொள்கலன்கள்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றைக் குறிப்பதாகும்.

"உயிரியல் சேதனக் கழிவு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிப்பதாகும்.

"சேகரிப்பு" என்பதன் கருத்து கொண்டு செல்தல், மீள்பாவனை, பயன்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிகளுக்காக பிரதேச சபை கழிவு சேகரிப்பவரால் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் வைத்திருக்கப்படும் அனுமதியாகும்.

"கூட்டெரு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளம்படுத்தும் ஒரு பசளையாகும்.

"அகற்றல" என்பதன் கருத்து ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.

"அழித்தல்" என்பதன் கருத்து நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.

"கட்டணம்" என்பதன் கருத்து பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.

"உணவுக் கழிவு" என்பதன் கருத்து நுகர முடியாத அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"தோட்டக் கழிவு" என்பதன் கருத்து செடிகள் அல்லது மரங்களிலிருந்து அகற்றப்பட்டவை, வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டவை.

"தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு" என்பதன் கருத்து நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கழிவு.

"தொற்றை ஏற்படுத்தும் கழிவு" என்பதன் கருத்து உபகரணங்கள் கருவிகள் குடுவைகள் மற்றும் நோய் கடத்தும், அழிக்க வேண்டிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"விசேட கழிவு" என்பதன் கருத்து பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் என கொள்ளப்படும்

"உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக அட்டோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர் என்பதற்குள் அடங்காத வாடகையாளர் ஆகியோரைக் குறிக்கும்.

*"பிரதேசசபை" என்பது தெஹியத்தகண்டிய பிரதேச சபையைக் குறிக்கும்.*

*"பிரதேச சபை பகுதி" என்பது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி.*

*"பிரதேச சபை கழிவு சேகரிப்பவர்" என்பது பிரதேச சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.*

*"பொது இடம்" என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.*

*"சுழற்சிக்கழிவு" என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.*

*"பயன்பாடற்ற கழிவு" என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை/சுழற்சி கழிவாகக் கருதப்படாதவையாகும்.*

*"மீள்பாவனைக்கழிவு" என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீழ்பாவனை செய்யக் கூடியது.*

*"சுத்திகரிப்பு நிலக்குழி" என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.*

*"செயலாளர்" என்பது பிரதேசசபைக்காக 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபையின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேசசபையின் செயலாளரைக் குறிக்கும் என்பதுடன் பிரதேசசபையின் செயலாளராக அல்லது அத்தகைய உத்தியோகத்தராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட எந்தவொரு நபரும் இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு செயலாளரின் அதிகாரம், கடமை, செயற்பாடுகளை பிரயோகிக்க, பயன்படுத்த எவ்வளவு தூரம் அனுமதிக்கப்படுகிறதோ அவ்வளவிற்கு பயன்படுத்த அதிகாரமுடையோர்.*

*"வகைப்படுத்தல்" என்பது இத்துணைவிதிகளின் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.*

*"சேவைக் கட்டணம்" என்பது பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.*

*"திண்மக் கழிவு" என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.*

*"வீட்டுக் கழிவு" என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.*

*"களஞ்சியப்படுத்தல்" என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.*

*"இடமாற்றல் நிலையம்" என்பது பிரதேச சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.*

*"போக்குவரத்து" என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.*

*"பரிகரித்தல்" என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.*

**அட்டவணை 01**

**சேவைக் கட்டணங்கள்**

| சேவைக்கட்டண விபரம் | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை | | | உபவிதிகள் 10, 11,12,13, 15,18 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை |
|---|---|---|---|---|
| | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் சமுர்த்தி (ரூபா) | |
| ஒரு மாதத்திற்கான சேவைக்கட்டணம் | 50 | 75 | 30 | *- |
| ஒரு வருடத்திற்கான சேவைக்கட்டணம் | 600 | 900 | 360 | *- |
| வருடத்தின் மாசி மாதத்திற்கு 28 ஆம் திகதிக்கு முன் செலுத்தப்படும் சேவைக் கட்டணம் 10% கழிவுடன் | 540 | 810 | 325 | *- |

*-வெளியேற்றப்படும் கழிவின் அளவைக் கருத்திற்கொண்டு சராசரி அடிப்படையில் பிரதேச சபை காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும்.

வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி, இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"சமுர்த்தி" என்பது உரிய பிரதேச செயலாளரினால் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதும் அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டடத்தின் கீழ் உதவியளிக்கப்படும் உள்ளடக்கி அர்த்தப்படுத்தப்படும்.

7-644/5

---

**கிழக்கு மாகாண மாகாண சபை**

கிழக்கு மாகாண மாகாண சபை முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு மீள் குடியேற்றம், கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் என்ற விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 123(1) மற்றும் (2) உடன் சேர்ந்து வாசிக்கப்படும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான) சட்டங்களினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு ஆலையடிவேம்பு பிரதேச சபையினால் ஆக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் துணைவிதியை இத்தால் அங்கீகரித்து இதன்கீழ்க் குறிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்படியாக பகிரங்கப்படுத்தவும் கட்டளையிடுகின்றேன்.

சிவனேசதுரை சந்திரகாந்தன்,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,
உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம்,
கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டம் மற்றும் ஒழுங்கு,
பிராந்திய நிருவாகம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்,
கிழக்கு மாகாண மாகாண சபை.

முதலமைச்சரின் செயலகம்,
கிழக்கு மாகாண சபை,
வரோதய நகர்,
திருகோணமலை,
2012, ஆனி 25.

*ஆலையடிவேம்பு பிரதேச சபை*

*திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணை விதிகள்*

*ஆலையடிவேம்பு பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் போது உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடம் மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுக்கோப்பான முறையில் திண்மக் கழிவை வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு விதி என்பவற்றுக்கான ஒரு துணை விதி.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93இனாலும் பிரிவுகள் 122 மற்றும் 126 (ix) விடயம் (ஆ) வின் கீழும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமையவாக 1989ஆம் ஆண்டின் 12ம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமைவாகவும் ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2011. 11.24 ஆந் திகதிய கூட்டத்தின் 06 ஆம் இலக்க தீர்மானத்துக்கமையவும் இத்துணை விதிகள் ஆக்கப்படுகின்றன.*

**பொதுவானவை**

*1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. இத்துணைவிதி ஆலையடிவேம்பு பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில்,தனிப்பட்ட வளாகங்களில், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றுதல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடமாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல், வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல்,மற்றும் அச்செயல்களுக்கு இடைநேர்விளைவான நடவடிக்கைகளுக்குமாக ஆக்கப்படுகின்ற ஓர் துணைவிதியாகும்.*

*3. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றியும் ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.*

*4. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் வளாகத்திற்குள்ளேயே கழிவினை சேகரித்தல், வகைப்படுத்தல், சேகரிப்பதற்கும், கொண்டு செல்லுதலுக்கும் மற்றும் அகற்றுதலுக்கும் ஏற்றவகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாதல் வேண்டும்.*

*5. (i) வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைமையின் மூலம் சேகரிக்க முடியும்.*

*(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட்ட கழிவினை துணை விதிகளின் முன்னரான உப பிரிவுகளுக்கமைவாகவும் இதனகத்துப்பின்னரான 8 தொடக்கம் 21 வரையான ஏற்பாடுகளுடனும் இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும்.*

*(iii) 8 தொடக்கம் 20 வரையான துணை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேகரிப்பிற்காக போடப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்கு உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் பயன்படுத்தப்படும் பை, கைப்பிடியற்ற பை, வாளி அல்லது ஏனைய கொள்கலன்கள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் விவரணம் மற்றும் தரத்திற்கமைவாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவை கழிவு சேகரிப்பை போடுவதற்கு முடியாத நிலையில் கிழிந்து,சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டில்லாது நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும்*

*(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக சொல்லப்பட்ட கொள்கலன்களை பிரதேச சபைமுழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மானிய அடிப்படையில் வழங்கலாம்.*

*(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கப்பட்ட கழிவை பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையிலுள்ள சேகரிப்பு முறை மற்றும் நேர அட்டவணைகளை பொது அறிவித்தல் மூலம் அறிவித்ததற்கமைவாக உப பிரிவு (i)இன் ஏற்பாடுகளுக்கிணங்கி அகற்ற முடியும்.*

*(vi) அயலவர், குடியிருப்பாளர், விருந்தாளிகள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு தீங்கை அல்லது காயத்தை ஏற்படுத்தும் கழிவு மூலங்களை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு அல்லது சேகரிக்க, களஞ்சியப்படுத்த அல்லது அகற்ற முடியாது.*

(vii) துணைவிதிகள் 8, 9, 10, 11, 12, 13, 15, 18 மற்றும் 19 வரை விபரிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணங்களை கீழ்க்காட்டப்படுமாறு செலுத்துதல் வேண்டும் :

(அ) மாதாந்தம் செலுத்துவோர் அடுத்துவருகின்ற மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ஒருவருடத்திற்கான சேவைக்கட்டணத்தை வருட ஆரம்பத்தில் செலுத்துவோர் குறித்த வருடத்தின் மாசி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

6.(i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ, பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ,சாலையிலோ ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை அகற்ற முடியாது.

(ii) எவரேனும் நபர் பிரதேச சபைக்குள் உள்ள திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7ஆம் துணை விதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கோ,வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ, பரிகரிப்பதற்கோ 7வது துணை விதியின் கீழ் அனுமதிபெற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் துணை விதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் கழிவு வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii) இன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக் கழிவுவகை 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்காட்டப்படுபவை தவிர ,அத்தகைய வளவிற்குள் கழிவுகளை அகற்றலாம்.:-

(அ) பிரதேச சபையினால் அத்தகைய கழிவுகள் அகற்றப்பட முடியாதென தடைசெய்யப்பட்ட இடங்கள் அல்லது

(ஆ) பிரதேச சபை மூலம் குறிப்பாக தடைசெய்யப்பட்ட சில வகைக் கழிவுகள்

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டும் கருவிகள் அல்லது உலைகள் மூலம் எரிக்கலாம் அல்லது பிரதேச சபை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதாவது வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நடைமுறைக்குப் பொருந்தக்கூடியதும், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான முறையில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை அந்த வளாகத்தினுள்ளேயே பரிகரிக்கலாம் அல்லது பதப்படுத்தலாம். அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பிரதேச சபைஅகற்றப்படும் திண்மக்கழிவின் தன்மையைக் கவனத்திற் கொண்டு காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் ஒரு சேவைக்கட்டணத்தை பிரதேச சபைக்கு வழங்கி பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் அத்தகைய திண்மக் கழிவுகளை ஒப்படைக்கலாம்.

(iv) எவரேனும் ஒரு நபர் பிரதேச சபை செயலாளருடனான முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள், வீதி ஓரத்தினுள், அல்லது பொதுவழியொன்றின் ஓரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை பிரதேச சபையின் கழிவு சேகரிக்கப்பவரிடம், அகற்றப்பட வேண்டிய கழிவின் அடிப்படையில் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தை கொடுப்பனவு செய்து கையளிக்கலாம்.

(v) ஒவ்வொரு நபரும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள விலங்குகள் வீதியொன்றின் பொது வழியில் அல்லது பொது இடத்தில் மலசலங்களை வெளியேற்றுவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளுடன் இணங்கும் வகையில் அந்த நபரே அம்மலசலங்களை தூய்மைப்படுத்தவும் அகற்றவும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(vi) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து பிரதேச சபைக்குள்ளமைந்துள்ள வீதிக்குள், பாதைக்குள் பொதுவீதிக்குள் அல்லது பொது இடங்களுக்குள் எவ்வகையான கழிவுகளையும் வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vii) வீடு அல்லது ஏதேனும் கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்மந்தமான நிகழ்ச்சி நிரலொன்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

*8.* ***குடியிருப்பு வளவுகள்***.- (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய முறை மூலமாகவோ பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சேதனக்கழிவு ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரித்து பைகளில், வாளிகளில் அல்லது ஏனைய கொள்கலன்களில் இட்டு அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும். உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள், அல்லது விலங்குகளின் மலசலம் என்பனவற்றைத் தாமதிக்காது பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) ஒவ்வொரு குடியிருப்பாளரும் உபபிரிவு (i)விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

*9.* (i) பலதரப்பட்ட வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்டுபல் மாடிக்குடியிருப்புக்கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) உபபிரிவு (i) இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும்,செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களை தம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்பட்ட ஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள்(i) மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில் அக் கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோ அல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட காரணமாக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ செயலாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையுமாகும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒருமாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத்துணை விதியின் உபபிரிவு (I) விடயம் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும் அத்தகைய கழிவுகள் அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை விடயம் (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*10.* ***கடைகளும் அலுவலகங்களும்***.- (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்பட வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணை விதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின்உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும் செயலாளரின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவை இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv)ல் குறிக்கப்பட்டவாறான ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் எந்த உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையிலான கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களைப் பராமரிப்பதும் கழிவகற்றுவதும் மற்றும் அத்தகைய கடை, அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதும் ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணை விதியின் நோக்கத்திற்காக :

"குடியிருப்பாளர்" என்பது ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

"அலுவலகம்" என்பது 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக்கொண்டிருக்கும்.

"கடை" என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம் என்பதுடன் உணவு அல்லது குடிபானவகை ஆகியவற்றை வியாபாரத்திற்காக வைத்திருக்கும் இடம் அடங்கலாக மற்றும் முடி திருத்தும் கடை அல்லது அழகு நிலையம் நடத்தும் இடம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

*11.* ***உணவகங்கள்.***- (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(iii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக செய்யப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(v) உபவிரிவு (i) இல் காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் இத்துணை விதியின் உபபிரிவு (iv) இன் கீழ் கையளிக்கப்படாத விடத்து பிரதேசசபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணை விதியின் நோக்கத்திற்காக

"உணவகம்" என்பது உறங்குவதற்குரிய வசதியுடன் கூடிய அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபான உணவுகள் அல்லது மதுவகை என்பன வழங்கப்படும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும்.

12. **மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள்**.- (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியத்திற்கு பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட ஒரு கொள்கலனில பிரித்து வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் போடப்பட வேண்டும்.

(iii) இத் துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"**மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்**" என்பது மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது காட்சிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

13. **மீன், கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்**.- (i) மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும்.

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) கீழ் பிரிக்கப்பட்ட விடயம் (அ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், விடயம் (ஆ) , (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலுமான ஒரு கொள்கலனினுள் போட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறாக ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"**மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடை**" என்பது விற்பதற்கான நோக்கில் அல்லது காட்சிப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

*14. **நடைபாதை வியாபாரம்.**- (i) பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதை வியாபாரியும் நடைபாதை வியாபாரத்திலும் ஈடுபட முடியாது*

*(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழான தேவைபாடுகளுக்கமைவாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை செயலாளர் அறவாக்கிக்கொண்டு ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார் என்பதுடன் உத்தேச வியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.*

*(iii) உப பிரிவு (i) கீழான அனுமதிக்கால முடிவில் செயலாளர் உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (iii) கீழ் அறவாக்கப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.*

*(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தை நடத்தும்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.*

*(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தை தடைசெய்யும் வகையில் ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.*

*(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-*

*(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;*
*(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;*
*(இ) பயன்பாடற்ற கழிவு ;*
*(ஈ) விசேட கழிவு.*

*(vii) அத்தகைய கழிவுவகைகளை ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் பொருத்தமான வெவ்வேறு வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக வாளி அல்லது கொள்கலனுள் எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உற்புகாவண்ணம் போடப்பட்டு உள்ளேவைத்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கழிவுகள் போடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டால் அது மூடியிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத்துணைவிதியின் உபபிரிவு (iv) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடமோ அல்லது பிரதேச சபை கழிவுசேகரிப்பவரிடமோ ஒப்படைக்க முடியும்.*

*(ix) எந்தவொரு நடைபாதை வியாபாரியும் கழிவுகளுடன் கூடியகொள்கலனை வியாபாரம் நடைபெறாத போது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ வைக்கக் கூடாது.*

*வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக*

*"நடை பாதை வியாபாரி" என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்று அல்லது ஒரு சேவை வழங்கி வரும் ஒரு நபரைக் குறிக்கும்.*

*15. **தொழிற்சாலைகள்.**- (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள்ளே பின்வருமாறு பிரித்தெடுக்கவேண்டும் :-*

*(அ) உயிரியல் சேதனக்கழிவு ;*
*(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;*
*(இ) பயன்பாடற்ற கழிவு ;*
*(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு.*

(ii) இத்துணைவிதியின் (i) உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"தொழிற்சாலை" என்பது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

*16.* **அகழ்வு, நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**.- (i) எவரேனும் ஒரு நபரால் ஏதாவதொரு வீதி, தெரு அல்லது ஏதாவதொரு பொது இடம் அகழ்தெடுக்கப்படுவதினால் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பினால் அல்லது தகர்த்தலினால் உருவாக்கப்படும் அத்தகைய கழிவை ஒரு பொருத்தமான முறையில் அந்த வளவிலிருந்து அகற்றும் வரைக்கும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது வளவினுள் சேர்த்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)ல் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்தை செயலாளரிடம் கொடுப்பனவு செய்வதன் மூலம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது தகர்க்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும்" என்பது ஒரு வேலைகொள்வோனால் அத்தகைய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கும்.

"கழிவு" என்பது பூமி, களி, தூசி, கட்டட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு மற்றும் ஏதாவது கட்டட நிர்மாணிப்பு அல்லது அழிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு என்பவற்றை உள்ளடக்கும்.

*17.*(i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற வசதிகள் அல்லது ஏதேனும் பொது அடிப்படை வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக ஏதாவதொரு பொது இடம் அல்லது வீதி, தெரு என்பவற்றை அகழ்கின்ற ஏதேனும் நபர் செயலாளரிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்பித்து இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்காக முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நபரின் அத்தகைய செயலால் உருவாக்கப்படும் கழிவகற்றல் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட வேலை முடிவடைந்த பின் பொது இடத்தில் அல்லது வீதியில் தற்காலிகமாக வைத்திருக்கக் கூடிய கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்கான செலவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை பணத்தை கழிவகற்றல் முற்பணமாக விண்ணப்பதாரி செயலாளரிடம் செலுத்துதலும் வேண்டும்.

(ii) ஏதேனும் ஒரு நபர் உபபிரிவு (i)இன் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுகுவதில் அலட்சியமாக இருந்தால் செயலாளர் அத்தகைய அங்கீகாரமொன்றை வழங்குவதற்கு முன் விண்ணப்பதாரியை,பிரதேச சபையால் அந்நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்திற்கு சமமான ஒரு தொகையை வைப்புச் செய்யக் கோர செயலாளருக்கு அதிகாரமுண்டு.

(iii) உபபிரிவு (i) அல்லது (ii) இன் கீழ் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அத்தகைய கழிவுகள் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறான செலவீனம் உபபிரிவு (i)இன் கீழ் வைப்புக் கழிவகற்றல் முற்பணத்திலிருந்து சரிசெய்யப்படும்.

*18.* **வைத்தியசாலைகள்**.- (i) அனைத்து வைத்தியசாலைகளும் பிரதேச சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையின் உரிமையாளர் அந்த வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு.

(ii) உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்க வேண்டும் என்பதுடன் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கவோபடுதலும் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக:

"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்திய சாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வு கூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.

"தீங்குவிளைவிக்கும் சுகாதார பராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.

*19.* **அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை**.- (i) எவரேனும் ஒருவர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.

(ii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் இரத்தம் குடல் மற்றும் மனித உணவிற்காக எடுக்கப்படாத மற்றைய உடற்பாகங்கள் மற்றும் பிரதேச சபையினால் சரியானதென தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கமைவாதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் (இதன் பின்னர் அனுமதிக்கப்பட்டவர் என அழைக்கப்படும்) அவர்களது திண்மக் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்.

(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு.

(iv) பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும். இத்துணை விதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொள்கலனில் இட்டு சூழலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலான முறையிலும் வைத்திருக்க வேண்டும்.

(v) இத்துணைவிதியின் உபபிரிவு (iii) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின்போது வெளியேற்றப்படும் நீர்க்கழிவை 1980ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தூய்மைப்படுத்த வேண்டும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணை விதியின் நோக்கத்திற்காக:

"அறுவை மடுவங்கள்" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 272) அர்த்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்த்தத்தையே உள்ளடக்கும்.

*20.* ***ஏனைய வளவுகள்.*** *- (i) துணை விதிகள் இலக்கம் 8 தொடக்கம் 19 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொது மக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய சமூக கலாச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும் ஒழுங்கு படுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவை பின்வருமாறு வகைப்படுத்தலாம் :-*

*(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;*

*(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;*

*(இ) பயன்பாடற்ற கழிவு ;*

*(ஈ) விசேட கழிவு.*

*(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் பிரதேச சபைக்கு முன்னரே அறிவிக்க வேண்டும். ஆகவே அத்தகைய செயற்பாட்டிலிருந்து வரும் கழிவை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட முடியும். அத்தகைய விடயங்களில் கழிவு சேகரிப்பு காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்க அமையலாம்.*

*(iii) பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்படும்.*

*(iv) இத்துணைவிதியின் உபபிரிவு (i)ல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுவதற்கமைய சேவைக்கட்டணமொன்றை பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்வதன் மூலம் பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.*

*21.* ***வீதிகளும் பொது இடங்களும்.*** *- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிக்ஷவகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்.*

*(அ) பிரதேச சபை பிராந்தியத்துள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வாகனப்போக்குவரத்து சாலைகள், பொது வடிகான்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றில் தூய்மையை மற்றும் சுத்திகரிப்பு நிலையை பராமரிப்பதற்கு.*

*(ஆ) அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவுகற்றல் கொள் கலன்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் சரியான முறையில் பராமரித்தல்.*

*(இ) விழாக்களில், விசேட நிகழ்வுகளில் பொது இடங்களில் பாவிப்பதற்காக அல்லது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதாவதொரு நிகழ்விற்கு அவ்வாறு செய்வதற்கு பிரதேச சபையால் முடிவெடுக்கப்பட்டால் அல்லது விசேட நிகழ்வுகள் மீதான அத்தகைய விழாக்களின் அமைப்பாளர்களிடமிருந்து எழுந்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து நடமாடும் கழிவு வாளிகளை வழங்குவதற்கு.*

*(ஈ) சுத்திகரிப்பு நிலையைப் பராமரிப்பதற்கு குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை பொருத்துவதுடன் அவற்றுள் போடப்படும் கழிவை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு அவை ஒரு தொல்லையாவதற்கு முன் அகற்றுவதற்கு.*

*(உ) மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏதாவது முறைப்பாட்டை விசாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.*

*(ii) எந்த நபரும் பிரதேச சபையால் வழங்கப்பட்ட ஏதாவது கழிவு வாளியினுள் வீட்டுப்பொருள், வர்த்தக, தொழிற்சாலை அல்லது ஏனைய கழிவுகள் விசேடமாக வைக்கோல், குப்பை போன்ற சிதறுகின்ற கழிவுகளைப் போடக்கூடாது.*

*22.* ***பிரதேச சபையின் கடமைகள்.*** *- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும் :-*

*(அ) கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவிப்பதற்கு,*

*(ஆ) கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல்,அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பாக ஊடகங்களினுடாக மக்களுக்கு விழிப்புணர்வையும் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு,*

*(இ) கழிவை குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கு சிறு முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு,*

(ஈ) கழிவை குறைத்தல், மீண்டும் பாவித்தல், சுழற்சி முறையாக பாவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குவதற்கு,

(உ) மாறுபட்ட கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு

(ஊ) பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் விவரணம் என்பனவற்றிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டதும், தேவைக்கேற்ற எண்ணிக்கையானதுமான பைகள், சாக்குகள், வாளிகள், மற்றும் கொள்கலன்களை வினைத்திறமையுடன் கூடிய கழிவுகளை பிரித்தல், சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நோக்கத்துக்காக உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்குதல்.

(எ) பிரதேச சபையின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட கழிவு வகைகளுக்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப் பட்டவாறான ஒரு கழிவு சேகரித்தல் அட்டவணை, சேகரிப்பு தினங்களை குறித்தல், நேரங்கள், முறைகள் மற்றும் சேவைக்கட்டணங்களைத் தயாரிப்பதற்கு அது பொது விடுமுறை தினங்களிலும் சேகரிப்பதற்கான நிபந்தனை களையும் உள்ளடக்கலாம்,

(ஏ) தனியாக அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக்கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு,

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவை சுத்தமான முறையில் எடுத்துச் செல்வதற்கு,

(ஒ) செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் குறிப்பிடப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் ஏனைய கழிவு வகைகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகான்களை, பொது இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், பிரதேச சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளையும் ஒப்படைத்தல்,

(ஓ) செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் கூடியளவு நடைமுறைக்குகந்தவாறு அனைத்து உணவுகள் அல்லது அதன் பகுதிகளை பரிகரிக்கப்படுகின்ற, பதப்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய உயிரியல் சேதனக்கழிவு, மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி உள்ளாக்கக்கூடிய கழிவு மற்றும் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றின் அழித்தல் தொடர்பான ஒழுங்குகள் அடங்கலாக, பிரதேச சபையின் கழிவு சேகரிப்பவர்களால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட கழிவுகளுடன் தொடர்புபட்ட மிகச்சரியான அளவுகளை எடுத்தல்.

(ஔ) மத்திய சூழல் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளையும் அழிப்பதற்கு,

(ஃ) 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு மற்றும் ஒரு சுத்திகரிப்பு நில மடுவை பராமரிப்பதற்கு அல்லது கழிவை எரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு,

(க) கழிவை கூட்டுதல், சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகப்பொருத்தமான உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு,

(ங) நிர்மாணிப்பு அல்லது புதுப்பித்தலின் போது உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை அழிக்கும் விதம் பற்றிய விபரங்களை மற்றும் ஒரு வீடு அல்லது ஏனைய வளாகங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தலுக்காக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் ஆரம்ப கட்டம் முடியும் தறுவாயில் உடைந்த கல்லுகளை அகற்றல், பயன்படுத்தல், சேர்த்துவைத்தல் தொடர்பான விடயங்களை அங்கீகரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும்,

(ச) பிரதேச சபைக்காக ஒரு உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு,

(ஞ) திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தேசிய உபாயங்களுடன் இணங்கிப் போகும் வகையிலான ஒரு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம் விபரமாக ஆகக்குறைந்தது ஒரு வருடத்தை தழுவிய வகையிலும் இறுதி அழித்தல் நடவடிக்கை மூன்று வருடம் முன்னோக்கியதாகவும் இருக்கும் வகையிலும் அத்தகைய திட்டம் பிரதேச சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வகையில் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும்,

(ட) உட்பிரிவுகள் (அ) தொடக்கம் (ஞ) வரை குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தலைவருக்கும் செயலாளருக்கும் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் விசாரிப்பதற்கும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் பதினான்கு நாட்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும்.

*23.* ***அனுமதிப்பத்திரங்கள்.***- (i) பிரதேச சபையானது கழிவை மீள்பாவனை அல்லது சுழற்சி முறைப்பாவனை அல்லது உரம், உயிர் வாயு அல்லது ஏனைய தயாரிப்பில் ஈடுபடும் நபர் ஒருவருக்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அந்த நபர்-

(அ) பிரிவு (ஐ) ஏற்பாடுகளின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரம் மீளப்பெறப்பட்டிருக்கும் போது எவரும் கழிவைப் பெறவோ, சேகரிக்கவோ முடியாது.

(ஆ) பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இத்துணை விதியின் உட்பிரிவுகளின் படி இந்தப் பிரதேச சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராக,

(இ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராக,

(ஈ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் இணங்கும் வகையிலாக நிர்மாணிக்கப்பட்ட இடத்தைக் கழிவு சேகரிப்பிற்கு ஒதுக்கீடு செய்தல்

(உ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லை இல்லாமலும் சுத்தமாக, சேகரிக்கப்பட்ட கழிவை கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்குபவராகவும்,

(ஊ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, பிரதேச சபைக்கு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் ஏதாவது கழிவை அல்லது கழிக்கப்பட்டதை அல்லது மீளவும் பாவிப்பதை பிரதேச சபை எல்லைக்குள் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கட்டணத்தை வழங்குவதன் மூலம் ஒப்படைப்பதற்கு உடன்படுகின்றவராகவும்,

(எ) பிரதேசசபையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

(ஏ) செயலாளர் அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவுகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி, ஏனைய நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும்.

(ஐ) செயலாளர் வழங்கிய அனுமதிப்பத்திரத்தை இத்துணைவிதியின் உபபிரிவு (i)ன் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் இந்தத் துணைவிதியின் கீழ் மீளப்பெறலாம்.

*24.* ***கழிவை அழிக்கும் பகுதிகள்.***- (i) அதிகாரமற்ற நபர் எவரும் பிரதேச சபையால் கழிவகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஏதாவது பொருளை, மூலங்களை அல்லது குப்பையை அகற்ற அல்லது அப்பகுதியுள் நுழைய, அலைந்து திரிய, பொருட்களை வைக்க, குழப்ப முடியாது. அந்த நோக்கத்திற்காக குறித்த சில நிபந்தனைகளுக்கிணங்க பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட குப்பையை வைத்திருக்க முடியாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அங்கீகாரத்தின் ஏதாவது நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் எந்தவொரு நபரும் ஏதாவது காணியைப் பயன்படுத்த அல்லது வழங்குவதற்கு, செயற்படுத்த அல்லது அந்தக் காணிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவை வைத்திருப்பதற்கான வசதியை அல்லது பிரதேசசபை எல்லைக்குள்ளான வசதிகளைபெற முடியாது.

*25.* ***ஏனையவை.***- (i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரத்திலும் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தேவைப்படுத்தப்படும் தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் இத் துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் தடை செய்ய முடியாது.

(iv) இத்துணைவிதிகளை அமுல்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் எவராவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உதவியாளர் ஆகியோருக்கு காலத்திற்குக் காலம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட முடியும்.

(v) இத்துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவார்.

26. **மீறல்களும் தண்டனைகளும்**.- (i) இப்பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத்துணைவிதிகளில் 3 தொடக்கம் 20 வரையான மற்றும் 23 தொடக்கம் 25 வரையான ஏற்பாடுகள் எதனையாவது மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்.

(அ) ஏதாவரு ஒரு அத்தகையமீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750.00) தண்டப்பணம்

(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணம் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250.00)

27. **பொருள் கோடல்**.-

இத்துணை விதிகளின் நோக்கத்திற்காக, இந்தக் கைநூல் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதாகும்.

"வாளி அல்லது வேறு கொள்கலன்கள்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றைக் குறிப்பதாகும்.

"உயிரியல் சேதனக் கழிவு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிப்பதாகும்.

"சேகரிப்பு" என்பதன் கருத்து கொண்டு செல்தல், மீள்பாவனை, பயன்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிகளுக்காக பிரதேச சபை கழிவு சேகரிப்பவரால் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் வைத்திருக்கப்படும் அனுமதியாகும்.

"கூட்டெரு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளம்படுத்தும் ஒரு பசளையாகும்.

"அகற்றல்" என்பதன் கருத்து ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.

"அழித்தல்" என்பதன் கருத்து நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.

"கட்டணம்" என்பதன் கருத்து பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.

"உணவுக் கழிவு" என்பதன் கருத்து நுகர முடியாத அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"தோட்டக் கழிவு" என்பதன் கருத்து செடிகள் அல்லது மரங்களிலிருந்து அகற்றப்பட்டவை, வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டவை.

"தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு" என்பதன் கருத்து நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கழிவு.

"தொற்றை ஏற்படுத்தும் கழிவு" என்பதன் கருத்து உபகரணங்கள் கருவிகள் குடுவைகள் மற்றும் நோய் கடத்தும், அழிக்க வேண்டிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"விசேட கழிவு" என்பதன் கருத்து பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் என கொள்ளப்படும்.

"உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக அட்டோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர் என்பதற்குள் அடங்காத வாடகையாளர் ஆகியோரைக் குறிக்கும்.

"பிரதேசசபை" என்பது ஆலையடிவேம்பு பிரதேச சபையைக் குறிக்கும்.

"பிரதேச சபை பகுதி" என்பது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி.

"பிரதேச சபை கழிவு சேகரிப்பவர்" என்பது பிரதேச சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.

"பொது இடம்" என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.

"சுழற்சிக்கழிவு" என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.

"பயன்பாடற்ற கழிவு" என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை/சுழற்சி கழிவாகக் கருதப்படாதவையாகும்.

"மீள்பாவனைக்கழிவு" என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீழ்பாவனை செய்யக் கூடியது.

"சுத்திகரிப்பு நிலக்குழி" என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.

"செயலாளர்" என்பது பிரதேசசபைக்காக 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபையின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேசசபையின் செயலாளரைக் குறிக்கும் என்பதுடன் பிரதேசசபையின் செயலாளராக அல்லது அத்தகைய உத்தியோகத்தராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட எந்வொரு நபரும் இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு செயலாளரின் அதிகாரம், கடமை, செயற்பாடுகளை பிரயோகிக்க, பயன்படுத்த எவ்வளவு தூரம் அனுமதிக்கப்படுகிறதோ அவ்வளவிற்கு பயன்படுத்த அதிகாரமுடையோர்.

"வகைப்படுத்தல்" என்பது இத்துணைவிதிகளின் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.

"சேவைக் கட்டணம்" என்பது பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.

"திண்மக் கழிவு" என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.

"வீட்டுக் கழிவு" என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.

"களஞ்சியப்படுத்தல்" என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.

"இடமாற்றல் நிலையம்" என்பது பிரதேச சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.

"போக்குவரத்து" என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.

"பரிகரித்தல்" என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.

**அட்டவணை 01**

**சேவைக் கட்டணங்கள்**

| சேவைக்கட்டண விபரம் | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை | | | உபவிதிகள் 10, 11,12,13, 15,18 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை |
|---|---|---|---|---|
| | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் சமுர்த்தி (ரூபா) | |
| ஒரு மாதத்திற்கான சேவைக்கட்டணம் | 50 | 75 | 30 | *- |
| ஒரு வருடத்திற்கான சேவைக்கட்டணம் | 600 | 900 | 360 | *- |
| வருடத்தின் மாசி மாதத்திற்கு 28 ஆம் திகதிக்கு முன் செலுத்தப்படும் சேவைக் கட்டணம் 10% கழிவுடன் | 540 | 810 | 325 | *- |

*-வெளியேற்றப்படும் கழிவின் அளவைக் கருத்திற்கொண்டு சராசரி அடிப்படையில் பிரதேச சபை காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும்

வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி, இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"சமுர்த்தி" என்பது உரிய பிரதேச செயலாளரினால் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதும் அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டடத்தின கீழ் உதவியளிக்கப்படும் உள்ளடக்கி அர்த்தப்படுத்தப்படும்.

7-644/6

---

### கிழக்கு மாகாண மாகாண சபை

கிழக்கு மாகாண மாகாண சபை முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் என்ற விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 123(1) மற்றும் (2) உடன் சேர்ந்து வாசிக்கப்படும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான) சட்டங்களினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பொத்துவில் பிரதேச சபையினால் ஆக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் துணைவிதியை இத்தால் அங்கீகரித்து இதன்கீழ்க் குறிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்படியாக பகிரங்கப்படுத்தவும் கட்டளையிடுகின்றேன்.

சிவனேசதுரை சந்திரகாந்தன்,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,
உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம்,
கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டம் மற்றும் ஒழுங்கு,
பிராந்திய நிருவாகம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்,
கிழக்கு மாகாண மாகாண சபை.

முதலமைச்சரின் செயலகம்,
கிழக்கு மாகாண மாகாண சபை,
வரோதய நகர்,
திருகோணமலை,
2012, ஆனி 25.

### *பொத்துவில் பிரதேச சபை*

### *திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணை விதிகள்*

*பொத்துவில் பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் போது உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல, கொண்டு செல்லல், இடம் மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுக்கோப்பான முறையில் திண்மக் கழிவை வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு விதி என்பவற்றுக்கான ஒரு துணை விதி.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93இனாலும் பிரிவுகள் 122 மற்றும் 126(ix) விடயம் (ஆ) வின் கீழும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமையவாக 1989ஆம் ஆண்டின் 12ம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விலைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமைவாகவும் பொத்துவில் பிரதேச சபையின் 2011.11.24 ஆம் திகதிய கூட்டத்தின் 89/2011 ஆம் இலக்க தீர்மானத்துக்கமையவும் இத்துணைவிதிகள் ஆக்கப்படுகின்றன.*

**பொதுவானவை**

*1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. இத்துணைவிதி பொத்துவில் பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில்,தனிப்பட்ட வளாகங்களில், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றுதல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடமாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல், வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல்,மற்றும் அச்செயல்களுக்கு இடைநேர்விலைவான நடவடிக்கைகளுக்குமாக ஆக்கப்படுகின்ற ஓர் துணைவிதியாகும*

*3. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றியும் ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.*

*4. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் வளாகத்திற்குள்ளேயே கழிவினை சேகரித்தல், வகைப்படுத்தல், சேகரிப்பதற்கும், கொண்டு செல்லுதலுக்கும் மற்றும் அகற்றுதலுக்கும் ஏற்றவகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாதல் வேண்டும்.*

*5.(i) வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைமையின் மூலம் சேகரிக்க முடியும்.*

*(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட்ட கழிவினை துணைவிதிகளின் முன்னரான உப பிரிவுகளுக்கமைவாகவும் இதனகத்துப்பின்னரான 8 தொடக்கம் 21 வரையான ஏற்பாடுகளுடனும் இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும்.*

*(iii) 8 தொடக்கம் 20 வரையான துணை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேகரிப்பிற்காக போடப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்கு உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் பயன்படுத்தப்படும் பை, கைப்பிடியற்ற பை, வாளி அல்லது ஏனைய கொள்கலன்கள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் விவரணம் மற்றும் தரத்திற்கமைவாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவை கழிவு சேகரிப்பை போடுவதற்கு முடியாத நிலையில் கிழிந்து,சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டில்லாது நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும்*

*(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக சொல்லப்பட்ட கொள்கலன்களை பிரதேச சபை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மானிய அடிப்படையில் வழங்கலாம்.*

*(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கப்பட்ட கழிவை பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையிலுள்ள சேகரிப்பு முறை மற்றும் நேர அட்டவணைகளை பொது அறிவித்தல் மூலம் அறிவித்ததற்கமைவாக உப பிரிவு (i) இன் ஏற்பாடுகளுக்கிணங்கி அகற்ற முடியும்.*

(vi) அயலவர், குடியிருப்பாளர், விருந்தாளிகள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு தீங்கை அல்லது காயத்தை ஏற்படுத்தும் கழிவு மூலங்களை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு அல்லது சேகரிக்க, களஞ்சியப்படுத்த அல்லது அகற்ற முடியாது.

(vii) துணைவிதிகள் 8, 9, 10, 11, 12, 13, 15, 18 மற்றும் 19 வரை விபரிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணங்களை கீழ்க்காட்டப்படுமாறு செலுத்துதல் வேண்டும்:-

(அ) மாதாந்தம் செலுத்துவோர் அடுத்துவருகின்ற மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ஒருவருடத்திற்கான சேவைக்கட்டணத்தை வருட ஆரம்பத்தில் செலுத்துவோர் குறித்த வருடத்தின் மாசி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

6.(i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ,பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ,சாலையிலோ ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை அகற்ற முடியாது.

(ii) எவரேனும் நபர் பிரதேச சபைக்குள் உள்ள திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கோ,வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ, பரிகரிப்பதற்கோ 7வது துணை விதியின் கீழ் அனுமதிபெற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் துணை விதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் கழிவு வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii)இன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக் கழிவுவகை 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்க்காட்டப்படுபவை தவிர ,அத்தகைய வளவிற்குள் கழிவுகளை அகற்றலாம் :-

(அ) பிரதேச சபையினால் அத்தகைய கழிவுகள் அகற்றப்பட முடியாதென தடைசெய்யப்பட்ட இடங்கள் அல்லது

(ஆ) பிரதேச சபை மூலம் குறிப்பாக தடைசெய்யப்பட்ட சில வகைக் கழிவுகள்

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டநியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டும் கருவிகள் அல்லது உலைகள் மூலம் எரிக்கலாம் அல்லது பிரதேச சபை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதாவது வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நடைமுறைக்குப் பொருந்தக்கூடியதும், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான முறையில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை அந்த வளாகத்தினுள்ளேயே பரிகரிக்கலாம் அல்லது பதப்படுத்தலாம். அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பிரதேச சபைஅகற்றப்படும் திண்மக்கழிவின் தன்மையைக் கவனத்திற் கொண்டு காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் ஒரு சேவைக்கட்டணத்தை பிரதேச சபைக்கு வழங்கி பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் அத்தகைய திண்மக் கழிவுகளை ஒப்படைக்கலாம்.

(iv) எவரேனும் ஒரு நபர் பிரதேச சபை செயலாளருடனான முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள், வீதி ஒரத்தினுள், அல்லது பொதுவழியொன்றின் ஒரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை பிரதேச சபையின் கழிவு சேகரிக்கப்பவரிடம், அகற்றப்பட வேண்டிய கழிவின் அடிப்படையில செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தை கொடுப்பனவு செய்து கையளிக்கலாம்.

(v) ஒவ்வொரு நபரும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள விலங்குகள் வீதியொன்றின் பொது வழியில் அல்லது பொது இடத்தில் மலசலங்களை வெயியேற்றுவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளுடன் இணங்கும் வகையில் அந்த நபரே அம்மலசலங்களை தூய்மைப்படுத்தவும் அகற்றவும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(vi) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து பிரதேச சபைக்குள்ளமைந்துள்ள வீதிக்குள், பாதைக்குள் பொதுவீதிக்குள் அல்லது பொதுஇடங்களுக்குள் எவ்வகையான கழிவுகளையும் வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vii) வீடு அல்லது ஏதேனும் கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்மந்தமான நிகழ்சி நிரலொன்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

*8.* **குடியிருப்பு வளவுகள்**.- (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய முறை மூலமாகவோ பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சேதனக்கழிவு ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரித்து பைகளில், வாளிகளில் அல்லது ஏனைய கொள்கலன்களில் இட்டு அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும். உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள், அல்லது விலங்குகளின் மலசலம் என்பன வற்றைத் தாமதிக்காது பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) ஒவ்வொரு குடியிருப்பாளரும் உபபிரிவு (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

*9.* (i) பலதரப்பட்ட வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்டுபல் மாடிக்குடியிருப்புக்கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும்,செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களை தம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்பட்ட ஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள்(i) மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில்அக் கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோ அல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட காரணமக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ செயலாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையுமாகும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒருமாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத் துணை விதியின் உபபிரிவு (I) விடயம் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும். அத்தகைய கழிவுகள்அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை விடயம் (இ) மற்றும் (ஈ)களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*10.* ***கடைகளும் அலுவலகங்களும்.***- (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;

(இ) பயன்பாடற்ற கழிவு ;

(ஈ) விசேட கழிவு.

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்பட வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின்உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும் செயலாளரின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவைப் இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv) ல் குறிக்கப்பட்டவாறான ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் எந்த உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும்ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளைபிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையிலான கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களைப் பராமரிப்பதும் கழிவகற்றுவதும் மற்றும் அத்தகைய கடை, அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதும் ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

வேறு வகையில் தேவைப்படுததப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக:

"குடியிருப்பாளர்" என்பது ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

"அலுவலகம்" என்பது 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக்கொண்டிருக்கும்.

"கடை"என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம் என்பதுடன் உணவு அல்லது குடிபானவகை ஆகியவற்றை வியாபாரத்திற்காக வைத்திருக்கும் இடம் அடங்கலாக மற்றும் முடி திருத்தும் கடை அல்லது அழகு நிலையம் நடத்தும் இடம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

*11.* ***உணவகங்கள்.***- (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;

(இ) பயன்பாடற்ற கழிவு ;

(ஈ) விசேட கழிவு.

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(iii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக செய்யப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iv) இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(v) உபபிரிவு (i) இல்காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் இத்துணை விதியின் உபபிரிவு (iv) இன் கீழ் கையளிக்கப்படாத விடத்து பிரதேசசபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"உணவகம்" என்பது உறங்குவதற்குரிய வசதியுடன் கூடிய அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபான உணவுகள் அல்லது மதுவகை என்பன வழங்கப்படும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும்.

*12.* **மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள்** .- (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியத்திற்கு பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட ஒரு கொள்கலனில் பிரித்து வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் போடப்பட வேண்டும்.

(iii) இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணை விதியின் நோக்கத்திற்காக

"மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்" என்பது மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது காட்சிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

*13.* **மீன், கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்**.- (i) மீன் அல்லது கோழி அல்லது முட்டைவிற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும்.

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)கீழ் பிரிக்கப்பட்ட விடயம் (அ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், விடயம் (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலுமான ஒரு கொள்கலனினுள் போட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறாக ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக

"மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடை" என்பது விற்பதற்கான நோக்கில் அல்லது காட்சிப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

*14.* **நடைபாதை வியாபாரம்**.- (i) பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதைவியாபாரியும் நடைபாதை வியாபாரத்திலும் ஈடுபட முடியாது

(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழான தேவைபாடுகளுக்கமைவாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை செயலாளர் அறவிட்டுக்கொண்டு ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார் என்பதுடன் உத்தேசவியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.

(iii) உப பிரிவு (i) கீழான அனுமதிக்கால முடிவில் செயலாளர் உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (iii) கீழ் அறவிடப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.

(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தை நடத்தும்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.

(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தை தடைசெய்யும் வகையில் ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(vii) அத்தகைய கழிவுவகைகள் ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் பொருத்தமான வெவ்வேறு வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடப்படுதல் வேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக வாளி அல்லது கொள்கலனுள் எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உற்புகாவண்ணம் போடப்பட்டு உள்ளேவைத்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கழிவுகள் போடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டால் அது மூடியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடமோ அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடமோ ஒப்படைக்க முடியும்.

(ix) எந்தவொரு நடைபாதை வியாபாரியும் கழிவுகளுடன் கூடியகொள்கலனை வியாபாரம் நடைபெறாத போது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ வைக்கக் கூடாது.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணை விதியின் நோக்கத்திற்காக

"நடை பாதை வியாபாரி" என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்று அல்லது ஒரு சேவை வழங்கி வரும் ஒரு நபரைக் குறிக்கும்.

15. **தொழிற்சாலைகள்**.- (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள்ளே பின்வருமாறு பிரித்தெடுக்கவேண்டும்:-

(அ) உயிரியல் சேதனக்கழிவு.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) இத் துணைவிதியின் (i) உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணை விதியின் நோக்கத்திற்காக

"தொழிற்சாலை" என்பது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

16. **அகழ்வு,நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**.- (i)ஏவரேனும் ஒரு நபரால் ஏதாவதொரு வீதி, தெரு அல்லது ஏதாவதொரு பொது இடம் அகழ்தெடுக்கப்படுவதினால் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பினால் அல்லது தகர்த்தலினால் உருவாக்கப்படும் அத்தகைய கழிவை ஒரு பொருத்தமான முறையில் அந்த வளவிலிருந்து அகற்றும் வரைக்கும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது வளவினுள் சேர்த்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)ல் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்தை செயலாளரிடம் கொடுப்பனவு செய்வதன் மூலம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணைவிதியின் நோக்கத்திற்காக

"அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது தகர்க்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும்" என்பது ஒரு வேலைகொள்வோனால் அத்தகைய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கும்

"கழிவு" என்பது பூமி, களி, தூசி, கட்டட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு மற்றும் ஏதாவது கட்டட நிர்மாணிப்பு அல்லது அழிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு என்பவற்றை உள்ளடக்கும்.

17. (i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற வசதிகள் அல்லது ஏதேனும் பொது அடிப்படை வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக ஏதாவதொரு பொது இடம் அல்லது வீதி, தெரு என்பவற்றை அகழ்கின்ற ஏதேனும் நபர் செயலாளரிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்பித்து இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்காக முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நபரின்

அத்தகைய செயலால் உருவாக்கப்படும் கழிவகற்றல் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட வேலை முடிவடைந்த பின் பொது இடத்தில் அல்லது வீதியில் தற்காலிகமாக வைத்திருக்கக் கூடிய கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்கான செலவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை பணத்தை கழிவகற்றல் முற்பணமாக விண்ணப்பதாரி செயலாளரிடம் செலுத்துதலும் வேண்டும்.

(ii) ஏதேனும் ஒரு நபர் உபபிரிவு (i)இன் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுகுவதில் அலட்சியமாக இருந்தால் செயலாளர் அத்தகைய அங்கீகாரமொன்றை வழங்குவதற்கு முன் விண்ணப்பதாரியை,பிரதேச சபையால் அந்நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்திற்கு சமமான ஒரு தொகையை வைப்புச் செய்யக் கோர செயலாளருக்கு அதிகாரமுண்டு.

(iii) உபபிரிவு (i) அல்லது (ii) இன் கீழ் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அத்தகைய கழிவுகள் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறான செலவீனம் உபபிரிவு (i)இன் கீழ் வைப்புக் கழிவகற்றல் முற்பணத்திலிருந்து சரிசெய்யப்படும்.

18. **வைத்தியசாலைகள்**.- (i) அனைத்து வைத்தியசாலைகளும் பிரதேச சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையின் உரிமையாளர் அந்த வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு.

(ii) உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உபபிரிவு (i)விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவுவகைகளை அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்க வேண்டும் என்பதுடன் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கவோபடுதலும் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்தியசாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வு கூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.

"தீங்குவிளைவிக்கும் சுகாதார பராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.

19. **அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை**.- (i) எவரேனும் ஒருவர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.

(ii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் இரத்தம் குடல் மற்றும் மனித உணவிற்காக எடுக்கப்படாத மற்றைய உடற்பாகங்கள் மற்றும் பிரதேச சபையினால் சரியானதென தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கு அமைதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் (இதன் பின்னர் அனுமதிக்கப்பட்டவர் என அழைக்கப்படும்) அவர்களது திண்மக் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் :-

(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு

(iv) பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும். இத்துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொள்கலனில் இட்டு சூழலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலான முறையிலும் வைத்திருக்க வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின் போது வெளியேற்றப்படும் நீர்க்கழிவை 1980ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தூய்மைப்படுத்த வேண்டும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:
"அறுவை மடுவங்கள்" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் ( அத்தியாயம் 272) அர்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்தத்தையே உள்ளடக்கும்.

*20.* ***ஏனைய வளவுகள்***.- (i) துணை விதிகள் இலக்கம் 8 தொடக்கம் 19 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொது மக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய சமூக கலாச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும் ஒழுங்கு படுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவை பின்வருமாறு வகைப்படுத்தலாம் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் பிரதேச சபைக்கு முன்னரே அறிவிக்க வேண்டும். ஆகவே அத்தகைய செயற்பாட்டிலிருந்து வரும் கழிவை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட முடியும். அத்தகைய விடயங்களில் கழிவு சேகரிப்பு காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்க அமையலாம்.

(iii) பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்படும்.

(iv) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)ல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுவதற்கமைய சேவைக்கட்டணமொன்றை பிரதேச சபைக்குக் கொடுப்பனவு செய்வதன் மூலம் பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

*21.* ***வீதிகளும் பொது இடங்களும்***.- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும் :-

(அ) பிரதேச சபை பிராந்தியத்துள் அமைந்துள்ள வீதிகள்,பொது இடங்கள், வாகனப்போக்குவரத்து சாலைகள், பொது வடிகாண்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றில் தூய்மையை மற்றும் சுத்திகரிப்பு நிலையை பராமரிப்பதற்கு.

(ஆ) அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவுவகற்றல் கொள்கலன்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் சரியான முறையில் பராமரிப்பதற்கு.

(இ) விழாக்களில், விசேட நிகழ்வுகளில், பொது இடங்களில் பாவிப்பதற்காக அல்லது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதாவதொரு நிகழ்விற்கு அவ்வாறு செய்வதற்கு பிரதேச சபையால் முடிவெடுக்கப்பட்டால் அல்லது விசேட நிகழ்வுகள் மீதான அத்தகைய விழாக்களின் அமைப்பாளர்களிடமிருந்து எழுந்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து நடமாடும் கழிவு வாளிகளை வழங்குவதற்கு.

(ஈ) சுத்திகரிப்பு நிலையைப் பராமரிப்பதற்கு குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை பொருத்துவதுடன் அவற்றுள் போடப்படும் கழிவை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு அவை ஒரு தொல்லையாவதற்கு முன் அகற்றுவதற்கு.

(உ) மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏதாவது முறைப்பாட்டை விசாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

(ii) எந்த நபரும் பிரதேச சபையால் வழங்கப்பட்ட ஏதாவது கழிவு வாளியினுள் வீட்டுப்பொருள், வர்த்தக, தொழிற்சாலை அல்லது ஏனைய கழிவுகள் விசேடமாக வைக்கோல், குப்பை போன்ற சிதறுகின்ற கழிவுகளைப் போடக்கூடாது :-

*22.* ***பிரதேச சபையின் கடமைகள்.***- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும்.

(அ) கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவிப்பதற்கு,

(ஆ) கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல்,அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பாக ஊடகங்களினுடாக மக்களுக்கு விழிப்புணர்வையும் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு,

(இ) கழிவை குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கு சிறு முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு,

(ஈ) கழிவை குறைத்தல், மீண்டும் பாவித்தல், சுழற்சி முறையாக பாவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்கு விப்புத் தொகைகளை வழங்குவதற்கு,

(உ) மாறுபட்ட கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு,

(ஊ) பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் விவரணம் என்பனவற்றிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டதும், தேவைக்கேற்ற எண்ணிக்கையானதுமான பைகள், சாக்குகள், வாளிகள், மற்றும் கொள்கலன்களை வினைத்திறமையுடன் கூடிய கழிவுகளை பிரித்தல் , சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நோக்கத்துக்காக உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்குதல்.

(எ) பிரதேச சபையின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட கழிவு வகைகளுக்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கழிவு சேகரித்தல் அட்டவணை, சேகரிப்பு தினங்களை குறித்தல், நேரங்கள், முறைகள் மற்றும் சேவைக்கட்டணங்களைத் தயாரிப்பதற்கு அது பொது விடுமுறை தினங்களிலும் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம்,

(ஏ) தனியாக அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக்கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு,

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவை சுத்தமான முறையில் எடுத்துச் செல்வதற்கு,

(ஒ) செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் குறிப்பிடப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் ஏனைய கழிவு வகைகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகாண்களை, பொது இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், பிரதேச சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளையும் ஒப்படைத்தல்,

(ஓ) செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் கூடியளவு நடைமுறைக்குகந்தவாறு அனைத்து உணவுகள் அல்லது அதன் பகுதிகளை பரிகரிக்கப்படுகின்ற, பதப்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய உயிரியல் சேதனக்கழிவு, மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி உள்ளாக்கக்கூடிய கழிவு மற்றும் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றின் அழித்தல் தொடர்பான ஒழுங்குகள் அடங்கலாக, பிரதேச சபையின் கழிவு சேகரிப்பவர்களால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட கழிவுகளுடன் தொடர்புபட்ட மிகச்சரியான அளவுகளை எடுத்தல்.

(ஔ) மத்திய சூழல் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளையும் அழிப்பதற்கு,

(ஃ) 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு மற்றும் ஒரு சுத்திகரிப்பு நில மடுவை பராமரிப்பதற்கு அல்லது கழிவை எரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு,

(க) கழிவை கூட்டுதல், சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகப்பொருத்தமான உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு,

(ங) நிர்மாணிப்பு அல்லது புதுப்பித்தலின் போது உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை அழிக்கும் விதம் பற்றிய விபரங்களை மற்றும் ஒரு வீடு அல்லது ஏனைய வளாகங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தலுக்காக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் ஆரம்ப கட்டம் முடியும் தறுவாயில் உடைந்த கல்லுகளை அகற்றல், பயன்படுத்தல், சேர்த்துவைத்தல் தொடர்பான விடயங்களை அங்கீகரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும்,

(ச) பிரதேச சபைக்காக ஒரு உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு,

(ஞ) திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தேசிய உபாயங்களுடன் இணங்கிப் போகும் வகையிலான ஒரு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம் விபரமாக ஆகக்குறைந்தது ஒரு வருடத்தை தழுவிய வகையிலும் இறுதி அழித்தல் நடவடிக்கை மூன்று வருடம் முன்னோக்கியதாகவும் இருக்கும் வகையிலும் அத்தகைய திட்டம் பிரதேச சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வகையில் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும்,

(ட) உட்பிரிவுகள் (அ) தொடக்கம் (ஞ) வரை குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தலைவருக்கும் செயலாளருக்கும் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் விசாரிப்பதற்கும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் பதினான்கு நாட்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும்.

*23.* **அனுமதிப்பத்திரங்கள்**.- (i) பிரதேச சபையானது கழிவை மீள்பாவனை அல்லது சுழற்சி முறைப் பாவனை அல்லது உரம், உயிர் வாயு அல்லது ஏனைய தயாரிப்பில் ஈடுபடும் நபர் ஒருவருக்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அந்த நபர் :-

(அ) பிரிவு (ஐ) ஏற்பாடுகளின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரம் மீளப்பெறப்பட்டிருக்கும் போது எவரும் கழிவைப் பெறவோ, சேகரிக்கவோ முடியாது.

(ஆ) பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இத்துணை விதியின் உட்பிரிவுகளின் படி இந்தப் பிரதேச சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராக,

(இ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராக,

(ஈ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் இணங்கும் வகையிலாக நிர்மாணிக்கப்பட்ட இடத்தைக் கழிவு சேகரிப்பிற்கு ஒதுக்கீடு செய்தல்

(உ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லை இல்லாமலும் சுத்தமாக, சேகரிக்கப்பட்ட கழிவை கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்குபவராகவும்,

(ஊ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, பிரதேச சபைக்கு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் ஏதாவது கழிவை அல்லது கழிக்கப்பட்டதை அல்லது மீளவும் பாவிப்பதை பிரதேச சபை எல்லைக்குள் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கட்டணத்தை வழங்குவதன் மூலம் ஒப்படைப்பதற்கு உடன்படுகின்றவராகவும்,

(எ) பிரதேசசபையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

(ஏ) செயலாளர் அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவுகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி, ஏனைய நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும்.

(ஐ) செயலாளர் வழங்கிய அனுமதிப்பத்திரத்தை இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i)ன் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் இந்தத் துணைவிதியின் கீழ் மீளப்பெறலாம்.

24. **கழிவை அழிக்கும் பகுதிகள்**.- (i) அதிகாரமற்ற நபர் எவரும் பிரதேச சபையால் கழிவகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஏதாவது பொருளை, மூலங்களை அல்லது குப்பையை அகற்ற அல்லது அப்பகுதியுள் நுழைய, அலைந்து திரிய, பொருட்களை வைக்க, குழப்ப முடியாது. அந்த நோக்கத்திற்காக குறித்த சில நிபந்தனைகளுக்கிணங்க பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட குப்பையை வைத்திருக்க முடியாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அங்கீகாரத்தின் ஏதாவது நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் எந்தவொரு நபரும் ஏதாவது காணியைப் பயன்படுத்த அல்லது வழங்குவதற்கு, செயற்படுத்த அல்லது அந்தக் காணிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவை வைத்திருப்பதற்கான வசதியை அல்லது பிரதேசசபை எல்லைக்குள்ளான வசதிகளைபெற முடியாது.

25. **ஏனையவை**.- (i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரத்திலும் இந்தத் துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளக்ஷ அல்லது குடியிருப்பாளக்ஷ செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தேவைப்படுத்தப்படும் தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் இந்தத் துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் தடை செய்ய முடியாது.

(iv) இந்தத் துணைவிதிகளை அமுல்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் எவராவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உதவியாளர் ஆகியோருக்கு காலத்திற்குக் காலம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட முடியும்.

(v) இந்தத் துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக்கருதப்படுவார்.

26. **மீறல்களும் தண்டனைகளும்**.- (i) இப்பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத் துணைவிதிகளில் 3 தொடக்கம் 20 வரையான மற்றும் 23 தொடக்கம் 25 வரையான ஏற்பாடுகள் எதனையாவது மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்.

(அ) ஏதாவரு ஒரு அத்தகையமீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750.00) தண்டப்பணம்

(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணம் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250.00)

27. **பொருள் கோடல்.**- இந்தத் துணை விதிகளின் நோக்கத்திற்காக, இந்தக் கைநூல் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதாகும்.

"வாளி அல்லது வேறு கொள்கலன்கள்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றைக் குறிப்பதாகும்.

"உயிரியல் சேதனக் கழிவு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிப்பதாகும்.

"சேகரிப்பு" என்பதன் கருத்து கொண்டு செல்தல், மீள்பாவனை, பயன்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிகளுக்காக பிரதேச சபை கழிவு சேகரிப்பவரால் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் வைத்திருக்கப்படும் அனுமதியாகும்.

"கூட்டெரு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளம்படுத்தும் ஒரு பசளையாகும்.

"அகற்றல்" என்பதன் கருத்து ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.

"அழித்தல்" என்பதன் கருத்து நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.

"கட்டணம்" என்பதன் கருத்து பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.

"உணவுக் கழிவு" என்பதன் கருத்து நுகர முடியாத அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"தோட்டக் கழிவு" என்பதன் கருத்து செடிகள் அல்லது மரங்களிலிருந்து அகற்றப்பட்டவை, வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டவை.

"தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு" என்பதன் கருத்து நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கழிவு.

"தொற்றை ஏற்படுத்தும் கழிவு" என்பதன் கருத்து உபகரணங்கள் கருவிகள் குடுவைகள் மற்றும் நோய் கடத்தும், அழிக்க வேண்டிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"விசேட கழிவு" என்பதன் கருத்து பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் என கொள்ளப்படும்

"உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக அட்டோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர் என்பதற்குள் அடங்காத வாடகையாளர் ஆகியோரைக் குறிக்கும்.

"பிரதேசசபை" என்பது பொத்துவில் பிரதேச சபையைக் குறிக்கும்.

"பிரதேச சபை பகுதி" என்பது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி.

"பிரதேச சபை கழிவு சேகரிப்பவர்" என்பது பிரதேச சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.

"பொது இடம்" என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.

"சுழற்சிக்கழிவு" என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.

"பயன்பாடற்ற கழிவு" என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை/சுழற்சி கழிவாகக் கருதப்படாதவையாகும்.

"மீள்பாவனைக்கழிவு" என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீழ்பாவனை செய்யக் கூடியது.

"சுத்திகரிப்பு நிலக்குழி" என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.

"செயலாளர்" என்பது பிரதேசசபைக்காக 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபையின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேசசபையின் செயலாளரைக் குறிக்கும் என்பதுடன் பிரதேசசபையின் செயலாளராக அல்லது அத்தகைய உத்தியோகத்தராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட எந்வொரு நபரும் இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு செயலாளரின் அதிகாரம், கடமை, செயற்பாடுகளை பிரயோகிக்க, பயன்படுத்த எவ்வளவு தூரம் அனுமதிக்கப்பபடுகிறதோ அவ்வளவிற்கு பயன்படுத்த அதிகாரமுடையோர்.

"வகைப்படுத்தல்" என்பது இத்துணைவிதிகளின் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.

"சேவைக் கட்டணம்" என்பது பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.

"திண்மக் கழிவு" என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.

"வீட்டுக் கழிவு" என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.

"களஞ்சியப்படுத்தல்" என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.

"இடமாற்றல் நிலையம்" என்பது பிரதேச சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.

"போக்குவரத்து" என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.

"பரிகரித்தல்" என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.

**அட்டவணை 1**

**சேவைக் கட்டணங்கள்**

| சேவைக்கட்டண விபரம் | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை | | | உபவிதிகள் 10, 11,12,13, 15,18 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை |
|---|---|---|---|---|
| | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் சமுர்த்தி (ரூபா) | |
| ஒரு மாதத்திற்கான சேவைக்கட்டணம் | 50 | 75 | 30 | *- |
| ஒரு வருடத்திற்கான சேவைக்கட்டணம் | 600 | 900 | 360 | *- |
| வருடத்தின் மாசி மாதத்திற்கு 28 ஆம் திகதிக்கு முன் செலுத்தப்படும் சேவைக் கட்டணம் 10% கழிவுடன் | 540 | 810 | 325 | *- |

*-வெளியேற்றப்படும் கழிவின் அளவைக் கருத்திற்கொண்டு சராசரி அடிப்படையில் பிரதேச சபை காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும்

வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி, இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"சமுர்த்தி" என்பது உரிய பிரதேச செயலாளரினால் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதும் அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின கீழ் உதவியளிக்கப்படும் உள்ளடக்கி அர்த்தப்படுத்தப்படும்.

7-644/7

---

## கிழக்கு மாகாண மாகாண சபை

கிழக்கு மாகாண மாகாண சபை முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் என்ற விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 123(1) மற்றும் (2) உடன் சேரத்து வாசிக்கப்படும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான) சட்டங்களினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிந்தவூர் பிரதேச சபையினால் ஆக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் துணைவிதியை இத்தால் அங்கீகரித்து இதன்கீழ்க் குறிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்படியாக பகிரங்கப்படுத்தவும் கட்டளையிடுகின்றேன்.

சிவனேசதுரை சந்திரகாந்தன்,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,
உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம்,
கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டம் மற்றும் ஒழுங்கு,
பிராந்திய நிருவாகம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்,
கிழக்கு மாகாண மாகாண சபை.

முதலமைச்சரின் செயலகம்,
கிழக்கு மாகாண மாகாண சபை,
வரோதய நகர்,
திருகோணமலை,
2012, ஆனி 25.

**நிந்தவூர் பிரதேச சபை**

**திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணைவிதிகள்**

நிந்தவூர் பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகளில், பெருவீதிகளில் உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல, கொண்டு செல்லல், இடம் மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுக்கோப்பான முறையில் திண்மக் கழிவை வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு விதி என்பவற்றுக்கான ஒரு துணை விதி.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93இனாலும் பிரிவுகள் 122 மற்றும் 126(ix) விடயம் (ஆ) வின் கீழும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமையவாக 1989ஆம் ஆண்டின் 12ம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமைவாகவும் நிந்தவூர் பிரதேச சபையின் 2012. 03. 22 ஆம் திகதிய கூட்டத்தின் 27 ஆம் இலக்க தீர்மானத்துக்கமைவவாக இத்துணைவிதிகள் ஆக்கப்படுகின்றன.

**பொதுவானவை**

1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. இத்துணைவிதி நிந்தவூர் பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில்,தனிப்பட்ட வளாகங்களில், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றுதல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடமாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல், வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல்,மற்றும் அச்செயல்களுக்கு இடைநேர்விளைவான நடவடிக்கைகளுக்குமாக ஆக்கப்படுகின்ற ஓர் துணைவிதியாகும்.

3. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றியும் ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.

4. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் வளாகத்திற்குள்ளேயே கழிவினை சேகரித்தல், வகைப்படுத்தல், சேகரிப்பதற்கும், கொண்டு செல்லுதலுக்கும் மற்றும் அகற்றுதலுக்கும் ஏற்றவகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாதல் வேண்டும்.

5.(i) வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைமையின் மூலம் சேகரிக்க முடியும்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட்ட கழிவினை துணைவிதிகளின் முன்னரான உப பிரிவுகளுக்கமைவாகவும் இதனகத்துப்பின்னரான 8 தொடக்கம் 21 வரையான ஏற்பாடுகளுடனும் இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும்.

(iii) 8 தொடக்கம் 20 வரையான துணை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேகரிப்பிற்காக போடப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்கு உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் பயன்படுத்தப்படும் பை, கைப்பிடியற்ற பை, வாளி அல்லது ஏனைய கொள்கலன்கள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் விவரணம் மற்றும் தரத்திற்கமைவாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவை கழிவு சேகரிப்பை போடுவதற்கு முடியாத நிலையில் கிழிந்து,சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டில்லாது நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும்

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக சொல்லப்பட்ட கொள்கலன்களை பிரதேச சபை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மானிய அடிப்படையில் வழங்கலாம்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கப்பட்ட கழிவை பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையிலுள்ள சேகரிப்பு முறை மற்றும் நேர அட்டவணைகளை பொது அறிவித்தல் மூலம் அறிவித்ததற்கமைவாக உப பிரிவு (i)இன் ஏற்பாடுகளுக்கிணங்கி அகற்ற முடியும்.

(vi) அயலவர், குடியிருப்பாளர், விருந்தாளிகள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு தீங்கை அல்லது காயத்தை ஏற்படுத்தும் கழிவு மூலங்களை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு அல்லது சேகரிக்க, களஞ்சியப்படுத்த அல்லது அகற்ற முடியாது.

(vii) துணைவிதிகள் 8, 9, 10, 11, 12, 13, 15, 18 மற்றும் 19 வரை விபரிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணங்களை கீழ்க்காட்டப்படுமாறு செலுத்துதல் வேண்டும்:

(அ) மாதாந்தம் செலுத்துவோர் அடுத்துவருகின்ற மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ஒருவருடத்திற்கான சேவைக்கட்டணத்தை வருட ஆரம்பத்தில் செலுத்துவோர் குறித்த வருடத்தின் மாசி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

6. (i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ,பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ,சாலையிலோ, ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை அகற்ற முடியாது.

(ii) எவரேனும் நபர் பிரதேச சபைக்குள் உள்ள திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கோ,வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ, பரிகரிப்பதற்கோ 7வது துணை விதியின் கீழ் அனுமதிபெற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் கழிவு வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii)இன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக் கழிவுவகை 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்காட்டப்படுபவை தவிர ,அத்தகைய வளவிற்குள் கழிவுகளை அகற்றலாம்.

(அ) பிரதேச சபையினால் அத்தகைய கழிவுகள் அகற்றப்பட முடியாதென தடைசெய்யப்பட்ட இடங்கள் அல்லது
(ஆ) பிரதேச சபை மூலம் குறிப்பாக தடைசெய்யப்பட்ட சில வகைக் கழிவுகள்

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டும் கருவிகள் அல்லது உலைகள் மூலம் எரிக்கலாம் அல்லது பிரதேச சபை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதாவது வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நடைமுறைக்குப் பொருந்தக்கூடியதும், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான முறையில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை அந்த வளாகத்தினுள்ளேயே பரிகரிக்கலாம் அல்லது பதப்படுத்தலாம். அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பிரதேச சபைஅகற்றப்படும் திண்மக்கழிவின் தன்மையைக் கவனத்திற் கொண்டு காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் ஒரு சேவைக்கட்டணத்தை பிரதேச சபைக்கு வழங்கி பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் அத்தகைய திண்மக் கழிவுகளை ஒப்படைக்கலாம்.

(iv) எவரேனும் ஒரு நபர் பிரதேச சபை செயலாளருடனான முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள், வீதி ஓரத்தினுள், அல்லது பொதுவழியொன்றின் ஓரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை பிரதேச சபையின் கழிவு சேகரிக்கப்பவரிடம், அகற்றப்பட வேண்டிய கழிவின் அடிப்பயில் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தை கொடுப்பனவு செய்து கையளிக்கலாம்.

(v) ஒவ்வொரு நபரும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள விலங்குகள் வீதியொன்றின் பொது வழியில் அல்லது பொது இடத்தில் மலசலங்களை வெளியேற்றுவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளுடன் இணங்கும் வகையில் அந்த நபரே அம்மலசலங்களை தூய்மைப்படுத்தவும் அகற்றவும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(vi) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து பிரதேச சபைக்குள்ளமைந்துள்ள வீதிக்குள், பாதைக்குள் பொதுவீதிக்குள் அல்லது பொதுஇடங்களுக்குள் எவ்வகையான கழிவுகளையும் வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vii) வீடு அல்லது ஏதேனும் கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்மந்தமான நிகழ்சி நிரலொன்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

*8.* **குடியிருப்பு வளவுகள்**.- (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய முறை மூலமாகவோ பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சேதனக்கழிவு.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரித்து பைகளில், வாளிகளில் அல்லது ஏனைய கொள்கலன்களில் இட்டு அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும். உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள்,அல்லது விலங்குகளின் மலசலம் என்பனவற்றைத் தாமதிக்காது பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) ஒவ்வொரு குடியிருப்பாளரும் உபபிரிவு (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத்தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

*9.*(i) பலதரப்பட்ட வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்டு பல் மாடிக்குடியிருப்புக் கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும்,செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களை தம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்பட்ட ஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள்(i)மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில் அக் கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோஅல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட காரணமாக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ செயலாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையுமாகும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒரு மாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (I) விடயம் (அ) மற்றும்(ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும். அத்தகைய கழிவுகள்அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை விடயம் (இ) மற்றும் (ஈ)களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*10.* **கடைகளும் அலுவலகங்களும்**.- (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்பட வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின்உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும் செயலாளரின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவைப் இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv)ல் குறிக்கப்பட்டவாறான ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் எந்த உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும்ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளைபிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையிலான கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களைப் பராமரிப்பதும் கழிவகற்றுவதும் மற்றும் அத்தகைய கடை, அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதும் ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

வேறு வகையில் தேவைப்படுததப்பட்டாலன்றி இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"குடியிருப்பாளர்" என்பது ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

"அலுவலகம்" என்பது 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக்கொண்டிருக்கும்.

"கடை"என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம் என்பதுடன் உணவு அல்லது குடிபானவகை ஆகியவற்றை வியாபாரத்திற்காக வைத்திருக்கும் இடம் அடங்கலாக மற்றும் முடி திருத்தும் கடை அல்லது அழகு நிலையம் நடத்தும் இடம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

*11.* **உணவகங்கள்**.- (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(iii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக செய்யப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iv) இந்தத்துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(v) உபவிரிவு (i) இல் காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் இத்துணைவிதியின் உபபிரிவு (iv) இன் கீழ் கையளிக்கப்படாதவிடத்து பிரதேசசபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணை விதியின் நோக்கத்திற்காக

"உணவகம்" என்பது உறங்குவதற்குரிய வசதியுடன் கூடிய அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபான உணவுகள் அல்லது மதுவகை என்பன வழங்கப்படும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும்.

*12.* ***மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள்.-*** (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியத்திற்கு பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட ஒரு கொள்கலனில் பிரித்து வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் போடப்பட வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணை விதியின் நோக்கத்திற்காக

"மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்" என்பது மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது காட்சிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

*13.* ***மீன், கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்.-*** (i) மீன் அல்லது கோழி அல்லது முட்டைவிற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும் :-

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள் ;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு ;
(இ) பயன்பாடற்ற கழிவு ;
(ஈ) விசேட கழிவு.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) கீழ் பிரிக்கப்பட்ட விடயம் (அ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், விடயம் (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலுமான ஒரு கொள்கலனினுள் போட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)விடயங்கள் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறாக ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணை விதியின் நோக்கத்திற்காக

"மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடை" என்பது விற்பதற்கான நோக்கில் அல்லது காட்சிப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

*14.* **நடைபாதை வியாபாரம்.**- (i) பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதை வியாபாரியும் நடைபாதை வியாபாரத்திலும் ஈடுபட முடியாது

(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழான தேவைபாடுகளுக்கமைவாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை செயலாளர் அறவாக்கிக்கொண்டு ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார் என்பதுடன் உத்தேச வியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.

(iii) உப பிரிவு (i) கீழான அனுமதிக்கால முடிவில் செயலாளர் உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (iii) கீழ் அறவாக்கப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.

(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தை நடத்தும்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.

(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தை தடைசெய்யும் வகையில் ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(vii) அத்தகைய கழிவுவகைகளை ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் பொருத்தமான வெவ்வேறு வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்படுதல் வேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக வாளி அல்லது கொள்கலனுள் எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உட்புகாவண்ணம் போடப்பட்டு உள்ளேவைத்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கழிவுகள் போடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டால் அது மூடியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடமோ அல்லது பிரதேச சபை கழிவுசேகரிப்பவரிடமோ ஒப்படைக்க முடியும்.

(ix) எந்தவொரு நடைபாதை வியாபாரியும் கழிவுகளுடன் கூடியகொள்கலனை வியாபாரம் நடைபெறாத போது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ வைக்கக் கூடாது.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணை விதியின் நோக்கத்திற்காக

"**நடை பாதை வியாபாரி**" என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்று அல்லது ஒரு சேவை வழங்கி வரும் ஒரு நபரைக் குறிக்கும்.

15. **தொழிற்சாலைகள்**.- (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள்ளே பின்வருமாறு பிரித்தெடுக்கவேண்டும் :-

(அ) உயிரியல் சேதனக்கழிவு.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) இத் துணைவிதியின் (i) உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ) வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

"தொழிற்சாலை" என்பது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

16. **அகழ்வு, நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**.- (i) ஏவரேனும் ஒரு நபரால் ஏதாவதொரு வீதி, தெரு அல்லது ஏதாவதொரு பொது இடம் அகழ்ந்தெடுக்கப்படுவதினால் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பினால் அல்லது தகர்த்தலினால் உருவாக்கப்படும் அத்தகைய கழிவை ஒரு பொருத்தமான முறையில் அந்த வளவிலிருந்து அகற்றும் வரைக்கும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது வளவினுள் சேர்த்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) ல் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்தை செயலாளரிடம் கொடுப்பனவு செய்வதன் மூலம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணை விதியின் நோக்கத்திற்காக

"அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது தகர்க்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும்" என்பது ஒரு வேலைகொள்வோனால் அத்தகைய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கும்

"கழிவு" என்பது பூமி, களி, தூசி, கட்டட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு மற்றும் ஏதாவது கட்டட நிர்மாணிப்பு அல்லது அழிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு என்பவற்றை உள்ளடக்கும்.

17.(i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற வசதிகள் அல்லது ஏதேனும் பொது அடிப்படை வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக ஏதாவதொரு பொது இடம் அல்லது வீதி, தெரு என்பவற்றை அகழ்கின்ற ஏதேனும் நபர் செயலாளரிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்பித்து இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்காக முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நபரின் அத்தகைய செயலால் உருவாக்கப்படும் கழிவகற்றல் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட வேலை முடிவடைந்தபின் பொது இடத்தில் அல்லது வீதியில்

தற்காலிகமாக வைத்திருக்கக் கூடிய கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்கான செலவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை பணத்தை கழிவகற்றல் முற்பணமாக விண்ணப்பதாரி செயலாளரிடம் செலுத்துதலும் வேண்டும்.

(ii) ஏதேனும் ஒரு நபர் உபபிரிவு (i)இன் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுகுவதில் அலட்சியமாக இருந்தால் செயலாளர் அத்தகைய அங்கீகாரமொன்றை வழங்குவதற்கு முன் விண்ணப்பதாரியை,பிரதேச சபையால் அந்நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்திற்கு சமமான ஒரு தொகையை வைப்புச் செய்யக் கோர செயலாளருக்கு அதிகாரமுண்டு.

(iii) உபபிரிவு (i) அல்லது (ii) இன் கீழ் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அத்தகைய கழிவுகள் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறான செலவீனம் உபபிரிவு (i)இன் கீழ் வைப்புக் கழிவகற்றல் முற்பணத்திலிருந்து சரிசெய்யப்படும்.

18. **வைத்தியசாலைகள்**.- (i) அனைத்து வைத்தியசாலைகளும் பிரதேச சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையின் உரிமையாளர் அந்த வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்க வேண்டும் என்பதுடன் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கவோபடுதலும் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக:

"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்தியசாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வு கூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.

"தீங்குவிளைவிக்கும் சுகாதாரபராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.

19. **அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை**.- (i) எவரேனும் ஒருவர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.

(ii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் இரத்தம் குடல் மற்றும் மனித உணவிற்காக எடுக்கப்படாத மற்றைய உடற்பாகங்கள் மற்றும் பிரதேச சபையினால் சரியானதென தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கு அமைதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் (இதன் பின்னர் அனுமதிக்கப்பட்டவர் என அழைக்கப்படும்) அவர்களது திண்மக் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்.

(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு

(iv) பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும். இத்துணை விதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொள்கலனில் இட்டு சூழலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலான முறையிலும் வைத்திருக்க வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (iii) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின் போது வெளியேற்றப்படும் நீர்க்கழிவை 1980ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தூய்மைப்படுத்த வேண்டும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"**அறுவை மடுவங்கள்**" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் ( அத்தியாயம் 272) அர்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்தத்தையே உள்ளடக்கும்.

*20.* **ஏனைய வளவுகள்**.- (i) துணை விதிகள் இலக்கம் 8 தொடக்கம் 19 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொது மக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய, சமூக, கலாச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும் ஒழுங்கு படுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவை பின்வருமாறு வகைப்படுத்தலாம் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு
(இ) பயன்பாடற்ற கழிவு
(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் பிரதேச சபைக்கு முன்னரே அறிவிக்க வேண்டும். ஆகவே அத்தகைய செயற்பாட்டிலிருந்து வரும் கழிவை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட முடியும். அத்தகைய விடயங்களில் கழிவு சேகரிப்பு காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்க அமையலாம்.

(iii) பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதிசெய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்படும்.

(iv) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)ல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக் கலம் தீர்மானிக்கப்படுவதற்கமைய பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்யவதன் மூலம் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

*21.* **வீதிகளும் பொது இடங்களும்**.- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

(அ) பிரதேச சபை பிராந்தியத்துள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வாகனப்போக்குவரத்து சாலைகள், பொது வடிகான்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றில் தூய்மையை மற்றும் சுத்திகரிப்பு நிலையை பராமரிப்பதற்கு.

(ஆ) அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவகற்றல் கொல்கலன்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் சரியான முறையில் பராமரிப்பதற்கு.

(இ) விழாக்களில், விசேட நிகழ்வுகளில், பொது இடங்களில் பாவிப்பதற்காக அல்லது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதாவதொரு நிகழ்விற்கு அவ்வாறு செய்வதற்கு பிரதேச சபையால் முடிவெடுக்கப்பட்டால் அல்லது விசேட நிகழ்வுகள் மீதான அத்தகைய விழாக்களின் அமைப்பாளர்களிடமிருந்து எழுந்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து நடமாடும் கழிவு வாளிகளை வழங்குவதற்கு.

(ஈ) சுத்திகரிப்பு நிலையைப் பராமரிப்பதற்கு குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை பொருத்துவதுடன் அவற்றுள் போடப்படும் கழிவை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு அவை ஒரு தொல்லையாவதற்கு முன் அகற்றுவதற்கு.

(உ) மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏதாவது முறைப்பாட்டை விசாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

(ii) எந்த நபரும் பிரதேச சபையால் வழங்கப்பட்ட ஏதாவது கழிவு வாளியினுள் வீட்டுப்பொருள், வர்த்தக, தொழிற்சாலை அல்லது ஏனைய கழிவுகள் விசேடமாக வைக்கோல், குப்பை போன்ற சிதறுகின்ற கழிவுகளைப் போடக்கூடாது.

22. **பிரதேச சபையின் கடமைகள்**.- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும்.

(அ) கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவிப்பதற்கு,

(ஆ) கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல், அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பாக ஊடகங்களினுடாக மக்களுக்கு விழிப்புணர்வையும் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு,

(இ) கழிவை குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கு சிறு முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு,

(ஈ) கழிவை குறைத்தல், மீண்டும் பாவித்தல், சுழற்சி முறையாக பாவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குவதற்கு,

(உ) மாறுபட்ட கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு

(ஊ) பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் விவரணம் என்பனவற்றிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டதும், தேவைக்கேற்ற எண்ணிக்கையானதுமான பைகள், சாக்குகள், வாளிகள், மற்றும் கொள்கலன்களை வினைத்திறமையுடன் கூடிய கழிவுகளை பிரித்தல், சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நோக்கத்துக்காக உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்குதல்.

(எ) பிரதேச சபையின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட கழிவு வகைகளுக்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கழிவு சேகரித்தல் அட்டவணை, சேகரிப்பு தினங்களை குறித்தல், நேரங்கள், முறைகள் மற்றும் சேவைக்கட்டணங்களைத் தயாரிப்பதற்கு அது பொது விடுமுறை தினங்களிலும் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம்,

(ஏ) தனியாக அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக்கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு,

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவை சுத்தமான முறையில் எடுத்துச் செல்வதற்கு,

(ஒ) செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் குறிப்பிடப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் ஏனைய கழிவு வகைகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகான்களை, பொது இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், பிரதேச சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளையும் ஒப்படைத்தல்,

(ஓ) செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் கூடியளவு நடைமுறைக்குகந்தவாறு அனைத்து உணவுகள் அல்லது அதன் பகுதிகளை பரிகரிக்கப்படுகின்ற, பதப்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய உயிரியல் சேதனக்கழிவு, மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி உள்ளாக்கக்கூடிய கழிவு மற்றும் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றின் அழித்தல் தொடர்பான ஒழுங்குகள் அடங்கலாக, பிரதேச சபையின் கழிவு சேகரிப்பவர்களால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட கழிவுகளுடன் தொடர்புபட்ட மிகச்சரியான அளவுகளை எடுத்தல்.

(ஔ) மத்திய சூழல் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளையும் அழிப்பதற்கு,

(ஃ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு மற்றும் ஒரு சுத்திகரிப்பு நில மடுவை பராமரிப்பதற்கு அல்லது கழிவை எரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு,

(க) கழிவை கூட்டுதல், சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகப்பொருத்தமான உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு,

(ங) நிர்மாணிப்பு அல்லது புதுப்பித்தலின் போது உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை அழிக்கும் விதம் பற்றிய விபரங்களை மற்றும் ஒரு வீடு அல்லது ஏனைய வளாகங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தலுக்காக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் ஆரம்ப கட்டம் முடியும் தறுவாயில் உடைந்த கல்லுகளை அகற்றல், பயன்படுத்தல், சேர்த்துவைத்தல் தொடர்பான விடயங்களை அங்கீகரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும்,

(ச) பிரதேச சபைக்காக ஒரு உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு,

(ஞ) திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தேசிய உபாயங்களுடன் இணங்கிப் போகும் வகையிலான ஒரு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம் விபரமாக ஆகக்குறைந்தது ஒரு வருடத்தை தழுவிய வகையிலும் இறுதி அழித்தல் நடவடிக்கை மூன்று வருடம் முன்னோக்கியதாகவும் இருக்கும் வகையிலும் அத்தகைய திட்டம் பிரதேச சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வகையில் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும்,

(ட) உட்பிரிவுகள் (அ) தொடக்கம் (ஞ) வரை குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தலைவருக்கும் செயலாளருக்கும் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் விசாரிப்பதற்கும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் பதினான்கு நாட்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும்.

*23.* **அனுமதிப்பத்திரங்கள்**.- (i) பிரதேச சபையானது கழிவை மீள்பாவனை அல்லது சுழற்சி முறைப் பாவனை அல்லது உரம், உயிர் வாயு அல்லது ஏனைய தயாரிப்பில் ஈடுபடும் நபர் ஒருவருக்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அந்த நபர்

(அ) பிரிவு (ஐ) ஏற்பாடுகளின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரம் மீளப்பெறப்பட்டிருக்கும் போது எவரும் கழிவைப் பெறவோ, சேகரிக்கவோ முடியாது.

(ஆ) பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இத்துணை விதியின் உட்பிரிவுகளின் படி இந்தப் பிரதேச சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராக,

(இ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராக,

(ஈ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் இணங்கும் வகையிலாக நிர்மாணிக்கப்பட்ட இடத்தைக் கழிவு சேகரிப்பிற்கு ஒதுக்கீடு செய்தல்

(உ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லை இல்லாமலும் சுத்தமாக, சேகரிக்கப்பட்ட கழிவை கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்குபவராகவும்,

(ஊ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, பிரதேச சபைக்கு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் ஏதாவது கழிவை அல்லது கழிக்கப்பட்டதை அல்லது மீளவும் பாவிப்பதை பிரதேச சபை எல்லைக்குள் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கட்டணத்தை வழங்குவதன் மூலம் ஒப்படைப்பதற்கு உடன்படுகின்றவராகவும்,

(எ) பிரதேசசபையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

(ஏ) செயலாளர் அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவுகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி, ஏனைய நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும்.

(ஐ) செயலாளர் வழங்கியஅனுமதிப்பத்திரத்தை இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) ன் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் இந்தத் துணைவிதியின் கீழ் மீளப்பெறலாம்.

*24.* ***கழிவை அழிக்கும் பகுதிகள்.***- (i) அதிகாரமற்ற நபர் எவரும் பிரதேச சபையால் கழிவகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஏதாவது பொருளை, மூலங்களை அல்லது குப்பையை அகற்ற அல்லது அப்பகுதியுள் நுழைய, அலைந்து திரிய, பொருட்களை வைக்க, குழப்ப முடியாது. அந்த நோக்கத்திற்காக குறித்த சில நிபந்தனைகளுக்கிணங்க பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட குப்பையை வைத்திருக்க முடியாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அங்கீகாரத்தின் ஏதாவது நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் எந்தவொரு நபரும் ஏதாவது காணியைப் பயன்படுத்த அல்லது வழங்குவதற்கு, செயற்படுத்த அல்லது அந்தக் காணிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவை வைத்திருப்பதற்கான வசதியை அல்லது பிரதேசசபை எல்லைக்குள்ளான வசதிகளைபெற முடியாது.

*25.* ***ஏனையவை.***- (i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரத்திலும் இந்தத் துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தேவைப்படுத்தப்படும் தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் இந்தத் துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் தடை செய்ய முடியாது.

(iv) இந்தத் துணைவிதிகளை அமுல்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் எவராவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உதவியாளர் ஆகியோருக்கு காலத்திற்குக் காலம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட முடியும்.

(v) இந்தத் துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவார்.

*26.* ***மீறல்களும் தண்டனைகளும்.***- (i) இப்பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத் துணைவிதிகளில் 3 தொடக்கம் 20 வரையான மற்றும் 23 தொடக்கம் 25 வரையான ஏற்பாடுகள் எதனையாவது மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்:-

(அ) ஏதாவரு ஒரு அத்தகையமீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750.00) தண்டப்பணம்

(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணம் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250.00)

27. **பொருள் கோடல்**.- இந்தத் துணை விதிகளின் நோக்கத்திற்காக, இந்தக் கைநூல் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதாகும்.

"வாளி அல்லது வேறு கொள்கலன்கள்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றைக் குறிப்பதாகும்.

"உயிரியல் சேதனக் கழிவு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிப்பதாகும்.

"சேகரிப்பு" என்பதன் கருத்து கொண்டு செல்தல், மீள்பாவனை, பயன்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிகளுக்காக பிரதேச சபை கழிவு சேகரிப்பவரால் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் வைத்திருக்கப்படும் அனுமதியாகும்.

"கூட்டெரு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளம்படுத்தும் ஒரு பசளையாகும்.

"அகற்றல்" என்பதன் கருத்து ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.

"அழித்தல்" என்பதன் கருத்து நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.

"கட்டணம்" என்பதன் கருத்து பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.

"உணவுக் கழிவு" என்பதன் கருத்து நுகர முடியாத அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"தோட்டக் கழிவு" என்பதன் கருத்து செடிகள் அல்லது மரங்களிலிருந்து அகற்றப்பட்டவை, வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டவை.

"தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு" என்பதன் கருத்து நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கழிவு.

"தொற்றை ஏற்படுத்தும் கழிவு" என்பதன் கருத்து உபகரணங்கள் கருவிகள் குடுவைகள் மற்றும் நோய் கடத்தும், அழிக்க வேண்டிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"விசேட கழிவு" என்பதன் கருத்து பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் எனக் கொள்ளப்படும்

"உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளரை அல்லது அவர் சார்பாக அட்டோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர் என்பதற்குள் அடங்காத வாடகையாளர் ஆகியோரைக் குறிக்கும்.

"பிரதேசசபை" என்பது நிந்தவூர் பிரதேச சபையைக் குறிக்கும்.

"பிரதேச சபை பகுதி" என்பது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி.

"பிரதேச சபை கழிவு சேகரிப்பவர்" என்பது பிரதேச சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.

"பொது இடம்" என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.

"சுழற்சிக்கழிவு" என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.

"பயன்பாடற்ற கழிவு" என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை/சுழற்சி கழிவாகக் கருதப்படாதவையாகும்.

"மீள்பாவனைக்கழிவு" என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீழ்பாவனை செய்யக் கூடியது.

"சுத்திகரிப்பு நிலக்குழி" என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.

"செயலாளர்" என்பது பிரதேசசபைக்காக 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபையின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேசசபையின் செயலாளரைக் குறிக்கும் என்பதுடன் பிரதேசசபையின் செயலாளராக அல்லது அத்தகைய உத்தியோகத்தராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட எந்வொரு நபரும் இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு செயலாளரின் அதிகாரம், கடமை, செயற்பாடுகளை பிரயோகிக்க, பயன்படுத்த எவ்வளவு தூரம் அனுமதிக்கப்படுகிறதோ அவ்வளவிற்கு பயன்படுத்த அதிகாரமுடையோர்.

"வகைப்படுத்தல்" என்பது இத்துணைவிதிகளின் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.

"சேவைக் கட்டணம்" என்பது பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவருக்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.

"திண்மக் கழிவு" என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.

"வீட்டுக் கழிவு" என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.

"களஞ்சியப்படுத்தல்" என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.

"இடமாற்றல் நிலையம்" என்பது பிரதேச சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.

"போக்குவரத்து" என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.

"பரிகரித்தல்" என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.

### அட்டவணை 1

**சேவைக் கட்டணங்கள்**

| சேவைக்கட்டண விபரம் | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை | | | உபவிதிகள் 10, 11,12,13, 15,18 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை |
|---|---|---|---|---|
| | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் சமுர்த்தி (ரூபா) | |
| ஒரு மாதத்திற்கான சேவைக்கட்டணம் | 50 | 75 | 30 | *- |
| ஒரு வருடத்திற்கான சேவைக்கட்டணம் | 600 | 900 | 360 | *- |
| வருடத்தின் மாசி மாதத்திற்கு 28 ஆம் திகதிக்கு முன் செலுத்தப்படும் சேவைக் கட்டணம் 10% கழிவுடன் | 540 | 810 | 325 | *- |

*-வெளியேற்றப்படும் கழிவின் அளவைக் கருத்திற்கொண்டு சராசரி அடிப்படையில் பிரதேச சபை காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும்

வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி, இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"சமுர்த்தி" என்பது உரிய பிரதேச செயலாளர் பிரிவினால் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களின் வகைப்படுத்தப்பட்டுள்ளதுமான குடும்பங்களை அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் உதவியளிக்கப்படும் மற்றும் உள்ளடக்கி அர்த்தப்படுத்தப்படும்.

***கிழக்கு மாகாண மாகாண சபை***

*கிழக்கு மாகாண மாகாண முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு மீள் குடியேற்றம், கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் என்ற விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 123(1) மற்றும் (2) உடன் சேர்ந்து வாசிக்கப்படும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான) சட்டங்களினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு திருக்கோவில் பிரதேச சபையினால் ஆக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் துணைவிதியை இத்தால் அங்கீகரித்து இதன்கீழ்க் குறிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்படியாக பகிரங்கப்படுத்தவும் கட்டளையிடுகின்றேன்.*

*சிவனேசதுரை சந்திரகாந்தன்,*
*முதலமைச்சரும்*
*நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம்,*
*கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டம் மற்றும் ஒழுங்கு,*
*பிராந்திய நிருவாகம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சரின் செயலகம்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை,*
*வரோதய நகர்,*
*திருகோணமலை,*
*2012, ஆனி 25.*

***திருக்கோவில் பிரதேச சபை***

**திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணை விதிகள்**

*திருக்கோவில் பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் போது உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடம் மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுக்கோப்பான முறையில் திண்மக் கழிவை வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு விதி என்பவற்றுக்கான ஒரு துணை விதி.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம்இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93 இனாலும் பிரிவுகள் 122 மற்றும் 126(ix) விடயம் (ஆ) வின் கீழும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமையவாக 1989ஆம் ஆண்டின் 12ம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமைவாகவும் திருக்கோவில் பிரதேச சபையின் 2011. 12. 28ஆம் திகதிய கூட்டத்தின் 06/07 ஆம் இலக்க தீர்மானத்துக்கமையவும் இத்துணை விதிகள் ஆக்கப்படுகின்றன.*

**பொதுவானவை :**

*1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. இத்துணைவிதி திருக்கோவில் பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில்,தனிப்பட்ட வளாகங்களில், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றுதல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடமாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல், வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அச்செயல்களுக்கு இடைநேர்விளைவான நடவடிக்கைகளுக்குமாக ஆக்கப்படுகின்ற ஓர் துணைவிதியாகும்.*

*3. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றியும் ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.*

*4. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் வளாகத்திற்குள்ளேயே கழிவினை சேகரித்தல், வகைப்படுத்தல், சேகரிப்பதற்கும், கொண்டு செல்லுதலுக்கும் மற்றும் அகற்றுதலுக்கும் ஏற்றவகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாதல் வேண்டும்.*

*5. (i) வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைமையின் மூலம் சேகரிக்க முடியும்.*

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட் கழிவினை துணை விதிகளின் முன்னரான உப பிரிவுகளுக்கமைவாகவும் இதனகத்துப்பின்னரான 8 தொடக்கம் 21 வரையான ஏற்பாடுகளுடனும் இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும்.

(iii) 8 தொடக்கம் 20 வரையான துணை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேகரிப்பிற்காக போடப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்கு உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் பயன்படுத்தப்படும் பை, கைப்பிடியற்ற பை, வாளி அல்லது ஏனைய கொள்கலன்கள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் விவரணம் மற்றும் தரத்திற்கமைவாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவை கழிவு சேகரிப்பை போடுவதற்கு முடியாத நிலையில் கிழிந்து,சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டில்லாது நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும்

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக சொல்லப்பட்ட கொள்கலன்களை பிரதேச சபைமுழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மானிய அடிப்படையில் வழங்கலாம்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கப்பட்ட கழிவை பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையிலுள்ள சேகரிப்பு முறை மற்றும் நேர அட்டவணைகளை பொது அறிவித்தல் மூலம் அறிவித்ததற்கமைவாக உப பிரிவு (i)இன் ஏற்பாடுகளுக்கிணங்கி அகற்ற முடியும்.

(vi) அயலவர், குடியிருப்பாளர், விருந்தாளிகள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு தீங்கை அல்லது காயத்தை ஏற்படுத்தும் கழிவு மூலங்களை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு அல்லது சேகரிக்க, களஞ்சியப்படுத்த அல்லது அகற்ற முடியாது.

(vii) துணைவிதிகள் 8, 9, 10, 11, 12, 13, 15, 18 மற்றும் 19 வரை விபரிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணங்களை கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு செலுத்துதல் வேண்டும்:-

(அ) மாதாந்தம் செலுத்துவோர் அடுத்துவருகின்ற மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ஒருவருடத்திற்கான சேவைக்கட்டணத்தை வருட ஆரம்பத்தில் செலுத்துவோர் குறித்த வருடத்தின் மாசி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

6. (i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ,பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ,சாலையிலோ ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை அகற்ற முடியாது.

(ii) எவரேனும் நபர் பிரதேச சபைக்குள் உள்ள திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கோ, வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ, பரிகரிப்பதற்கோ 7வது துணைவிதியின் கீழ் அனுமதிபெற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் கழிவு வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii)இன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக் கழிவுவகை 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்க்காட்டப்படுபவை தவிர, அத்தகைய வளவிற்குள் கழிவுகளை அகற்றலாம்:-

(அ) பிரதேச சபையினால் அத்தகைய கழிவுகள் அகற்றப்பட முடியாதென தடைசெய்யப்பட்ட இடங்கள் அல்லது

(ஆ) பிரதேச சபை மூலம் குறிப்பாக தடைசெய்யப்பட்ட சில வகைக் கழிவுகள்

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டும் கருவிகள் அல்லது உலைகள் மூலம் எரிக்கலாம் அல்லது பிரதேச சபை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதாவது வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நடைமுறைக்குப் பொருந்தக்கூடியதும், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான முறையில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை அந்த வளாகத்தினுள்ளேயே பரிகரிக்கலாம் அல்லது பதப்படுத்தலாம். அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பிரதேச சபை அகற்றப்படும் திண்மக்கழிவின் தன்மையை கவனத்திற் கொண்டு காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் ஒரு சேவைக்கட்டணத்தை பிரதேச சபைக்கு வழங்கி பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் அத்தகைய திண்மக் கழிவுகளை ஒப்படைக்கலாம்.

(iv) எவரேனும் ஒரு நபர் பிரதேச சபை செயலாளருடனான முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள், வீதி ஓரத்தினுள், அல்லது பொதுவழியொன்றின் ஓரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை பிரதேச சபையின் கழிவு சேகரிக்கப்பவரிடம், அகற்றப்பட வேண்டிய கழிவின் அடிப்படையில் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தை கொடுப்பனவு செய்து கையளிக்கலாம்.

(v) ஒவ்வொரு நபரும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள விலங்குகள் வீதியொன்றின் பொது வழியில் அல்லது பொது இடத்தில் மலசலங்களை வெளியேற்றுவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளுடன் இணங்கும் வகையில் அந்த நபரே அம்மலசலங்களை தூய்மைப்படுத்தவும் அகற்றவும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(vi) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து பிரதேச சபைக்குள்ளமைந்துள்ள வீதிக்குள், பாதைக்குள் பொதுவீதிக்குள் அல்லது பொதுஇடங்களுக்குள் எவ்வகையான கழிவுகளையும் வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vii) வீடு அல்லது ஏதேனும் கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்பந்தமான நிகழ்சி நிரலொன்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

8. **குடியிருப்பு வளவுகள்**.- (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய முறை மூலமாகவோ பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சேதனக்கழிவு.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரித்து பைகளில், வாளிகளில் அல்லது ஏனைய கொள்கலன்களில் இட்டு அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும். உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள்,அல்லது விலங்குகளின் மலசலம் என்பனவற்றைத் தாமதிக்காது பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) ஒவ்வொரு குடியிருப்பாளரும் உபபிரிவு (i)விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

9. (i) பலதரப்பட்ட வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்ட பல் மாடிக்குடியிருப்புக்கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும்,செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களை தம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்பட்ட ஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள்(i)மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில் அக்கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோஅல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட காரணமாக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ செயலாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையுமாகும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒருமாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (I) விடயம் (அ) மற்றும்(ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும். அத்தகைய கழிவுகள்அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை விடயம் (இ) மற்றும் (ஈ)களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*10.* **கடைகளும் அலுவலகங்களும்**.- (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்பட வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும் செயலாளரின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவை இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv)ல் குறிக்கப்பட்டவாறான ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் எந்த உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையிலான கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களைப் பராமரிப்பதும் கழிவகற்றுவதும் மற்றும் அத்தகைய கடை, அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதும் ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக:

"குடியிருப்பாளர்" என்பது ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

"அலுவலகம்" என்பது 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.

"கடை"என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம் என்பதுடன் உணவு அல்லது குடிபானவகை ஆகியவற்றை வியாபாரத்திற்காக வைத்திருக்கும் இடம் அடங்கலாக மற்றும் முடி திருத்தும் கடை அல்லது அழகு நிலையம் நடத்தும் இடம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

*11.* **உணவகங்கள்**.- (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(iii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக செய்யப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(v) உபவிரிவு (i) இல் காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) இன் கீழ் கையளிக்கப்படாதவிடத்து பிரதேசசபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"உணவகம்" என்பது உறங்குவதற்குரிய வசதியுடன் கூடிய அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபான உணவுகள் அல்லது மதுவகை என்பன வழங்கப்படும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும்.

*12.* **மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள்**. (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியத்திற்கு பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட ஒரு கொள்கலனில் பிரித்து வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் போடப்பட வேண்டும்.

(iii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்" என்பது மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது காட்சிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

13. **மீன்,கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்**.- (i) மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும்:-

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)கீழ் பிரிக்கப்பட்ட விடயம் (அ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், விடயம் (ஆ) , (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலுமான ஒரு கொள்கலனினுள் போட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறாக ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடை" என்பது விற்பதற்கான நோக்கில் அல்லது காட்சிப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

14. **நடைபாதை வியாபாரம்**.-

(i) பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதை வியாபாரியும் நடைபாதை வியாபாரத்திலும் ஈடுபட முடியாது

(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழான தேவைப்பாடுகளுக்கமைவாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை செயலாளர் அறவாக்கிக்கொண்டு ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார் என்பதுடன் உத்தேச வியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.

(iii) உப பிரிவு (i) கீழான அனுமதிக்கால முடிவில் செயலாளர் உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (iii) இன் கீழ் அறவாக்கப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.

(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தை நடத்தும்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.

(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தை தடைசெய்யும் வகையில் ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(vii) அத்தகைய கழிவுவகைகளை ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் பொருத்தமான வெவ்வேறு வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்படுதல் வேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக வாளி அல்லது கொள்கலனுள் எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உட்புகாவண்ணம் போடப்பட்டு உள்ளேவைத்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கழிவுகள் போடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டால் அது மூடியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடமோ அல்லது பிரதேச சபை கழிவுசேகரிப்பவரிடமோ ஒப்படைக்க முடியும்.

(ix) எந்தவொரு நடைபாதை வியாபாரியும் கழிவுகளுடன் கூடியகொள்கலனை வியாபாரம் நடைபெறாத போது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ வைக்கக் கூடாது.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"நடை பாதை வியாபாரி" என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்று அல்லது ஒரு சேவை வழங்கி வரும் ஒரு நபரைக் குறிக்கும்.

15. **தொழிற்சாலைகள்.**- (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள்ளே பின்வருமாறு பிரித்தெடுக்கவேண்டும்:-

(அ) உயிரியல் சேதனக்கழிவு.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) இத் துணைவிதியின் (i) உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"தொழிற்சாலை" என்பது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

*16. **அகழ்வு, நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**.*- (i) எவரேனும் ஒரு நபரால் ஏதாவதொரு வீதி, தெரு அல்லது எதாவதொரு பொது இடம் அகழ்ந்தெடுக்கப்படுவதினால் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பினால் அல்லது தகர்த்தலினால் உருவாக்கப்படும் அத்தகைய கழிவை ஒரு பொருத்தமான முறையில் அந்த வளவிலிருந்து அகற்றும் வரைக்கும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது வளவினுள் சேர்த்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இல் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்தை செயலாளரிடம் கொடுப்பனவு செய்வதன் மூலம் ஒப்படைக்க முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது தகர்க்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும்" என்பது ஒரு வேலைகொள்வோனால் அத்தகைய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கும்.

"கழிவு" என்பது பூமி, களி, தூசி, கட்டட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு மற்றும் ஏதாவது கட்டட நிர்மாணிப்பு அல்லது அழிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு என்பவற்றை உள்ளடக்கும்.

*17.* (i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற வசதிகள் அல்லது ஏதேனும் பொது அடிப்படை வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக எதாவதொரு பொது இடம் அல்லது வீதி, தெரு என்பவற்றை அகழ்கின்ற ஏதேனும் நபர் செயலாளரிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்து இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்காக முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நபரின் அத்தகைய செயலால் உருவாக்கப்படும் கழிவகற்றல் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட வேலை முடிவடைந்த பின் பொது இடத்தில் அல்லது வீதியில் தற்காலிகமாக வைத்திருக்கக் கூடிய கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்கான செலவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை பணத்தை கழிவகற்றல் முற்பணமாக விண்ணப்பதாரி செயலாளரிடம் செலுத்துதலும் வேண்டும்.

(ii) ஏதேனும் ஒரு நபர் உபபிரிவு (i)இன் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுகுவதில் அலட்சியமாக இருந்தால் செயலாளர் அத்தகைய அங்கீகாரமொன்றை வழங்குவதற்கு முன் விண்ணப்பதாரியை, பிரதேச சபையால் அந்நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்திற்கு சமமான ஒரு தொகையை வைப்புச் செய்யக் கோர செயலாளருக்கு அதிகாரமுண்டு.

(iii) உபபிரிவு (i) அல்லது (ii) இன் கீழ் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அத்தகைய கழிவுகள் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறான செலவீனம் உபபிரிவு (i)இன் கீழ் வைப்புக் கழிவகற்றல் முற்பணத் திலிருந்து சரிசெய்யப்படும்.

*18. **வைத்தியசாலைகள்**.*- (i) அனைத்து வைத்தியசாலைகளும் பிரதேச சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையின் உரிமையாளர் அந்த வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உபபிரிவு (i)விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்கவேண்டும் என்பதுடன் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கபடவோ வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்தியசாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வு கூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.

ீங்குவிளைவிக்கும் சுகாதார பராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.

*19.* ***அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை.***- (i) எவரேனும் ஒருவர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.

(ii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் இரத்தம் குடல் மற்றும் மனித உணவிற்காக எடுக்கப்படாத மற்றைய உடற்பாகங்கள் மற்றும் பிரதேச சபையினால் சரியானதென தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கு அமைதல்வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் (இதன் பின்னர் அனுமதிக்கப்பட்டவர் என அழைக்கப்படும்) அவர்களது திண்மக் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்:-

(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(iv) பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொள்கலனில் இட்டு சூழலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலான முறையிலும் வைத்திருக்க வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின்போது வெளியேற்றப்படும் நீர்க்கழிவை 1980ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தூய்மைப்படுத்த வேண்டும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"அறுவை மடுவங்கள்" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் ( அத்தியாயம் 272) அர்த்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்த்தத்தையே உள்ளடக்கும்.

*20.* ***ஏனைய வளவுகள்.***- (i) துணை விதிகள் இலக்கம் 8 தொடக்கம் 19 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொதுமக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய சமூக கலாச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் பிரதேச சபைக்கு முன்னரே அறிவிக்க வேண்டும். ஆகவே அத்தகைய செயற்பாட்டிலிருந்து வரும் கழிவை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட முடியும். அத்தகைய விடயங்களில் கழிவு சேகரிப்பு, காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்க அமையலாம்.

(iii) பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்படும்.

(iv) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) ல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுவதற்கமைய சேவைக்கட்டணமொன்றை பிரதேச சபைக்குக் கொடுப்பனவு செய்வதன் மூலம் பிரதேச சபை கழிவுசேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

21. **வீதிகளும் பொது இடங்களும்**.- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்:-

(அ) பிரதேச சபை பிராந்தியத்துள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வாகனப்போக்குவரத்து சாலைகள், பொது வடிகாண்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றில் தூய்மையை மற்றும் சுத்திகரிப்பு நிலையை பராமரிப்பதற்கு.

(ஆ) அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவு கொள்கலன்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் சரியான முறையில் பராமரித்தல்.

(இ) விழாக்களில், விசேட நிகழ்வுகளில் பொது இடங்களில் பாவிப்பதற்காக அல்லது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதாவதொரு நிகழ்விற்கு அவ்வாறு செய்வதற்கு பிரதேச சபையால் முடிவெடுக்கப்பட்டால் அல்லது விசேட நிகழ்வுகள் மீதான அத்தகைய விழாக்களின் அமைப்பாளர்களிடமிருந்து எழுந்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து நடமாடும் கழிவு வாளிகளை வழங்குவதற்கு.

(ஈ) சுத்திகரிப்பு நிலையைப் பராமரிப்பதற்கு குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை பொருத்துவதுடன் அவற்றுள் போடப்படும் கழிவை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு அவை ஒரு தொல்லையாவதற்கு முன் அகற்றுவதற்கு.

(உ) மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏதாவது முறைப்பாட்டை விசாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

(ii) எந்த நபரும் பிரதேச சபையால் வழங்கப்பட்ட ஏதாவது கழிவு வாளியினுள் வீட்டுப்பொருள், வர்த்தக, தொழிற்சாலை அல்லது ஏனைய கழிவுகள் விசேடமாக வைக்கோல், குப்பை போன்ற சிதறுகின்ற கழிவுகளைப் போடக்கூடாது.

22. **பிரதேச சபையின் கடமைகள்**.- (i) செயலாளர், தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும்:-

(அ) கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவிப்பதற்கு,

(ஆ) கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல், அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பாக ஊடகங்களினூடாக மக்களுக்கு விழிப்புணர்வையும் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு,

(இ) கழிவை குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கு சிறு முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு,

(ஈ) கழிவை குறைத்தல், மீண்டும் பாவித்தல், சுழற்சி முறையாக பாவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குவதற்கு,

(உ) மாறுபட்ட கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு

(ஊ) பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் விவரணம் என்பனவற்றிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டதும், தேவைக்கேற்ற எண்ணிக்கையானதுமான பைகள், சாக்குகள்,வாளிகள், மற்றும் கொள்கலன்களை வினைத்திறமையுடன் கூடிய கழிவுகளை பிரித்தல் , சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நோக்கத்துக்காக உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்குதல்.

(எ) பிரதேச சபையின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட கழிவு வகைகளுக்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கழிவு சேகரித்தல் அட்டவணை, சேகரிப்பு தினங்களை குறித்தல், நேரங்கள், முறைகள் மற்றும் சேவைக்கட்டணங்களைத் தயாரிப்பதற்கு, அது பொது விடுமுறை தினங்களிலும் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம்,

(ஏ) தனியாக அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக்கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு,

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவை சுத்தமான முறையில் எடுத்துச் செல்வதற்கு,

(ஒ) செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் குறிப்பிடப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் ஏனைய கழிவு வகைகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகாண்களை, பொது இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், பிரதேச சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளையும் ஒப்படைத்தல்,

(ஓ) செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் கூடியளவு நடைமுறைக்குகந்தவாறு அனைத்து உணவுகள் அல்லது அதன் பகுதிகளை பரிகரிக்கப்படுகின்ற, பதப்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய உயிரியல் சேதனக்கழிவு, மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி உள்ளாக்கக்கூடிய கழிவு மற்றும் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றின் அழித்தல் தொடர்பான ஒழுங்குகள் அடங்கலாக, பிரதேச சபையின் கழிவு சேகரிப்பவர்களால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட கழிவுகளுடன் தொடர்புபட்ட மிகச்சரியான அளவுகளை எடுத்தல்.

(ஔ) மத்திய சூழல் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளையும் அழிப்பதற்கு,

(ஃ) 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு மற்றும் ஒரு சுத்திகரிப்பு நில மடுவை பராமரிப்பதற்கு அல்லது கழிவை எரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு,

(க) கழிவை கூட்டுதல், சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகப்பொருத்தமான உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு,

(ங) நிர்மாணிப்பு அல்லது புதுப்பித்தலின்போது உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை அழிக்கும் விதம் பற்றிய விபரங்களை மற்றும் ஒரு வீடு அல்லது ஏனைய வளாகங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தலுக்காக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் ஆரம்ப கட்டம் முடியும் தறுவாயில் உடைந்த கற்களை அகற்றல், பயன்படுத்தல், சேர்த்துவைத்தல் தொடர்பான விடயங்களை அங்கீகரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும்,

(ச) பிரதேச சபைக்காக ஒரு உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு,

(ஞ) திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தேசிய உபாயங்களுடன் இணங்கிப் போகும் வகையிலான ஒரு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம் விபரமாக ஆகக்குறைந்தது ஒரு வருடத்தை தழுவிய வகையிலும் இறுதி அழித்தல் நடவடிக்கை மூன்று வருடம் முன்னோக்கியதாகவும்

இருக்கும் வகையிலும் அத்தகைய திட்டம் பிரதேச சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வகையில் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும்,

(ட) உட்பிரிவுகள் (அ) தொடக்கம் (ஞ) வரை குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தலைவருக்கும் செயலாளருக்கும் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் விசாரிப்பதற்கும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் பதினான்கு நாட்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும்.

*23. **அனுமதிப் பத்திரங்கள்**.-* (i) *பிரதேச சபையானது கழிவை மீள்பாவனை அல்லது சுழற்சி முறைப் பாவனை அல்லது உரம், உயிர் வாயு அல்லது ஏனைய தயாரிப்பில் ஈடுபடும் நபர் ஒருவருக்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அந்த நபர்-*

(அ) பிரிவு (i) ஏற்பாடுகளின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரம் மீளப்பெறப்பட்டிருக்கும்போது எவரும் கழிவைப் பெறவோ, சேகரிக்கவோ முடியாது,

(ஆ) பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இத்துணைவிதியின் உட்பிரிவுகளின் படி இந்தப் பிரதேச சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராக,

(இ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராக,

(ஈ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் இணங்கும் வகையிலாக நிர்மாணிக்கப்பட்ட இடத்தைக் கழிவு சேகரிப்பிற்கு ஒதுக்கீடு செய்தல்

(உ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லை இல்லாமலும் சுத்தமாக, சேகரிக்கப்பட்ட கழிவை கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்குபவராகவும்,

(ஊ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, பிரதேச சபைக்கு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் ஏதாவது கழிவை அல்லது கழிக்கப்பட்டதை அல்லது மீளவும் பாவிப்பதை பிரதேச சபை எல்லைக்குள் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கட்டணத்தை வழங்குவதன் மூலம் ஒப்படைப்பதற்கு உடன்படுகின்றவராகவும்,

(எ) பிரதேசசபையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

(ஏ) செயலாளர் அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவுகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி, ஏனைய நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும்.

(ஐ) செயலாளர் வழங்கியஅனுமதிப்பத்திரத்தை இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i)ன் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் இந்தத் துணைவிதியின் கீழ் மீளப்பெறலாம்.

*24. **கழிவை அழிக்கும் பகுதிகள்**.-* (i) *அதிகாரமற்ற நபர் எவரும் பிரதேச சபையால் கழிவகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஏதாவது பொருளை, மூலங்களை அல்லது குப்பையை அகற்ற அல்லது அப்பகுதியுள் நுழைய, அலைந்து திரிய, பொருட்களை வைக்க, குழப்ப முடியாது. அந்த நோக்கத்திற்காக குறித்த சில நிபந்தனைகளுக்கிணங்க பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட குப்பையை வைத்திருக்க முடியாது.*

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அங்கீகாரத்தின் ஏதாவது நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் எந்தவொரு நபரும் ஏதாவது காணியைப் பயன்படுத்த அல்லது வழங்குவதற்கு, செயற்படுத்த அல்லது அந்தக் காணிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவை வைத்திருப்பதற்கான வசதியை அல்லது பிரதேசசபை எல்லைக்குள்ளான வசதிகளைபெற முடியாது.

25. **ஏனையவை**.- (i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரத்திலும் இந்தத் துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தேவைப்படுத்தப்படும் தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் இந்தத் துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் தடை செய்ய முடியாது.

(iv) இந்தத் துணைவிதிகளை அமுல்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் எவராவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உதவியாளர் ஆகியோருக்கு காலத்திற்குக் காலம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட முடியும்.

(v) இந்தத் துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவார்.

26. **மீறல்களும் தண்டனைகளும்**.- (i) இப்பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத்துணைவிதிகளில் 3 தொடக்கம் 20 வரையான மற்றும் 23 தொடக்கம் 25 வரையான ஏற்பாடுகள் எதனையாவது மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்:-

(அ) ஏதாவது ஒரு அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750.00) தண்டப்பணம்

(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணம் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250.00)

27. **பொருள் கோடல்**.- இந்தத் துணை விதிகளின் நோக்கத்திற்காக, இந்தக் கைநூல் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதாகும்.

"வாளி அல்லது வேறு கொள்கலன்கள்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றைக் குறிப்பதாகும்.

"உயிரியல் சேதனக் கழிவு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிப்பதாகும்.

"சேகரிப்பு" என்பதன் கருத்து கொண்டு செல்லுதல், மீள்பாவனை, பயன்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிகளுக்காக பிரதேச சபை கழிவு சேகரிப்பவரால் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் வைத்திருக்கப்படும் அனுமதியாகும்.

"கூட்டெரு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளம்படுத்தும் ஒரு பசளையாகும்.

"அகற்றல்" என்பதன் கருத்து ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.

"அழித்தல்" என்பதன் கருத்து நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.

"கட்டணம்" என்பதன் கருத்து பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.

"உணவுக் கழிவு" என்பதன் கருத்து நுகர முடியாத அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"தோட்டக் கழிவு" என்பதன் கருத்து செடிகள் அல்லது மரங்களிலிருந்து அகற்றப்பட்டவை, வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டவை.

"தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு" என்பதன் கருத்து நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கழிவு.

"தொற்றை ஏற்படுத்தும் கழிவு" என்பதன் கருத்து உபகரணங்கள் கருவிகள் குடுவைகள் மற்றும் நோய் கடத்தும், அழிக்க வேண்டிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"விசேட கழிவு" என்பதன் கருத்து பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் என கொள்ளப்படும்

"உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக அட்டோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர் என்பதற்குள் அடங்காத வாடகையாளர் ஆகியோரைக் குறிக்கும்.

"பிரதேசசபை" என்பது திருக்கோவில் பிரதேச சபையைக் குறிக்கும்.

"பிரதேச சபை பகுதி" என்பது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி.

"பிரதேச சபை கழிவு சேகரிப்பவர்" என்பது பிரதேச சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.

"பொது இடம்" என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.

"சுழற்சிக்கழிவு" என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.

"பயன்பாடற்ற கழிவு" என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை/ சுழற்சிக் கழிவாகக் கருதப்படாதவையாகும்.

"மீள்பாவனைக்கழிவு" என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீழ்பாவனை செய்யக் கூடியது.

"சுத்திகரிப்பு நிலக்குழி" என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.

"செயலாளர்" என்பது பிரதேசசபைக்காக 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபையின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேசசபையின் செயலாளரைக் குறிக்கும் என்பதுடன் பிரதேசசபையின் செயலாளராக அல்லது அத்தகைய உத்தியோகத்தராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட எந்வொரு நபரும் இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு செயலாளரின் அதிகாரம், கடமை, செயற்பாடுகளை பிரயோகிக்க, பயன்படுத்த எவ்வளவு தூரம் அனுமதிக்கப்படுகிறதோ அவ்வளவிற்கு பயன்படுத்த அதிகாரமுடையோர்.

"வகைப்படுத்தல்" என்பது இத்துணைவிதிகளின் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.

"சேவைக் கட்டணம்" என்பது பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.

"திண்மக் கழிவு" என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.

"வீட்டுக் கழிவு" என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.

"களஞ்சியப்படுத்தல்" என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.

"இடமாற்றல் நிலையம்" என்பது பிரதேச சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.

"போக்குவரத்து" என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.

"பரிகரித்தல்" என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.

**அட்டவணை 01**

**சேவைக் கட்டணங்கள்**

| சேவைக்கட்டண விபரம் | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை | | | உபவிதிகள் 10, 11,12,13, 15,18 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை |
|---|---|---|---|---|
| | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் சமுர்த்தி (ரூபா) | |
| ஒரு மாதத்திற்கான சேவைக்கட்டணம் | 50 | 75 | 30 | *- |
| ஒரு வருடத்திற்கான சேவைக்கட்டணம் | 600 | 900 | 360 | *- |
| வருடத்தின் மாசி மாதத்திற்கு 28 ஆம் திகதிகு முன் செலுத்தப்படும் சேவைக் கட்டணம் 10% கழிவுடன் | 540 | 810 | 325 | *- |

*-வெளியேற்றப்படும் கழிவின் அளவைக் கருத்திற்கொண்டு சராசரி அடிப்படையில் பிரதேச சபை காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும்.

வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி, இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"சமுர்த்தி" என்பது அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் உதவியளிக்கப்படும் மற்றும் உரிய பிரதேச செயலாளர் பிரிவினால் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுமான குடும்பங்களை உள்ளடக்கி அர்த்தப்படுத்தப்படும்.

7-644/ 1

**கிழக்கு மாகாண மாகாண சபை**

கிழக்கு மாகாண மாகாண சபை முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு மீள் குடியேற்றம், கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் என்ற விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 123(1) மற்றும் (2) உடன் சேர்ந்து வாசிக்கப்படும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான) சட்டங்களினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு சம்மாந்துறை பிரதேச சபையினால் ஆக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் துணைவிதியை இத்தால் அங்கீகரித்து இதன்கீழ்க் குறிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்படியாக பகிரங்கப்படுத்தவும் கட்டளையிடுகின்றேன்.

சிவனேசதுரை சந்திரகாந்தன்,
முதலமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம்,
கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டம் மற்றும் ஒழுங்கு,
பிராந்திய நிருவாகம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்,
கிழக்கு மாகாண மாகாண சபை.

முதலமைச்சரின் செயலகம்,
கிழக்கு மாகாண மாகாண சபை,
வரோதய நகர்,
திருகோணமலை,
2012, ஆனி 25.

**சம்மாந்துறை பிரதேச சபை**

**திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணை விதிகள்**

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் போது உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடம் மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுக்கோப்பான முறையில் திண்மக் கழிவை வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு விதி என்பவற்றுக்கான ஒரு துணை விதி.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93 இனாலும் பிரிவுகள் 122 மற்றும் 126 (ix) விடயம் (ஆ) வின் கீழும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமையவாக 1989ஆம் ஆண்டின் 12ம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமைவாகவும் சம்மாந்துறை பிரதேச சபையின் 2011. 10. 24 ஆம் திகதிய 07 ஆவது இலக்க கூட்டத்தின் 01 ஆம் இலக்க தீர்மானத்துக்கமையவும் இத்துணை விதிகள் ஆக்கப்படுகின்றன.

**பொதுவானவை :**

1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணை விதிகள் என அழைக்கப்படும்.

2. இத்துணைவிதி சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில்,தனிப்பட்ட வளாகங்களில், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றுதல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடமாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல், வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அச்செயல்களுக்கு இடைநேர்விளைவான நடவடிக்கைகளுக்குமாக ஆக்கப்படுகின்ற ஓர் துணைவிதியாகும்.

3. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றியும் ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.

4. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் வளாகத்திற்குள்ளேயே கழிவினை சேகரித்தல், வகைப்படுத்தல், சேகரிப்பதற்கும், கொண்டு செல்லுதலுக்கும் மற்றும் அகற்றுதலுக்கும் ஏற்றவகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாதல் வேண்டும்.

5. (i)வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைமையின் மூலம் சேகரிக்க முடியும்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட்ட கழிவினை துணை விதிகளின் முன்னரான உப பிரிவுகளுக்கமைவாகவும் இதனகத்துப்பின்னரான 8 தொடக்கம் 21 வரையான ஏற்பாடுகளுடனும் இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும்.

(iii) 8 தொடக்கம் 20 வரையான துணை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேகரிப்பிற்காக போடப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்கு உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் பயன்படுத்தப்படும் பை, கைப்பிடியற்ற பை, வாளி அல்லது ஏனைய கொள்கலன்கள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் விவரணம் மற்றும் தரத்திற்கமைவாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவை கழிவு சேகரிப்பை போடுவதற்கு முடியாத நிலையில் கிழிந்து,சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டில்லாது நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும்

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக சொல்லப்பட்ட கொள்கலன்களை பிரதேச சபைமுழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மானிய அடிப்படையில் வழங்கலாம்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கப்பட்ட கழிவை பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையிலுள்ள சேகரிப்பு முறை மற்றும் நேர அட்டவணைகளை பொது அறிவித்தல் மூலம் அறிவித்ததற்கமைவாக உப பிரிவு (i)இன் ஏற்பாடுகளுக்கிணங்கி அகற்ற முடியும்.

(vi) அயலவர், குடியிருப்பாளர், விருந்தாளிகள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு தீங்கை அல்லது காயத்தை ஏற்படுத்தும் கழிவு மூலங்களை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு அல்லது சேகரிக்க, களஞ்சியப்படுத்த அல்லது அகற்ற முடியாது.

(vii) துணைவிதிகள் 8, 9, 10, 11, 12, 13, 15, 18 மற்றும் 19 வரை விபரிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணங்களை கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு செலுத்துதல் வேண்டும்:-

(அ) மாதாந்தம் செலுத்துவோர் அடுத்துவருகின்ற மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ஒருவருடத்திற்கான சேவைக்கட்டணத்தை வருட ஆரம்பத்தில் செலுத்துவோர் குறித்த வருடத்தின் மாசி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

6. (i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ,பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ,சாலையிலோ ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை அகற்ற முடியாது.

(ii) எவரேனும் நபர் பிரதேச சபைக்குள் உள்ள திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கோ, வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ, பரிகரிப்பதற்கோ 7வது துணைவிதியின் கீழ் அனுமதிபெற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் கழிவு வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii)இன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக் கழிவுவகை 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்க்காட்டப்படுபவை தவிர, அத்தகைய வளவிற்குள் கழிவுகளை அகற்றலாம்:-

(அ) பிரதேச சபையினால் அத்தகைய கழிவுகள் அகற்றப்பட முடியாதென தடைசெய்யப்பட்ட இடங்கள் அல்லது

(ஆ) பிரதேச சபை மூலம் குறிப்பாக தடைசெய்யப்பட்ட சில வகைக் கழிவுகள்

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டும் கருவிகள் அல்லது உலைகள் மூலம் எரிக்கலாம் அல்லது பிரதேச சபை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதாவது வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நடைமுறைக்குப் பொருந்தக்கூடியதும், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான முறையில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை அந்த வளாகத்தினுள்ளேயே பரிகரிக்கலாம் அல்லது பதப்படுத்தலாம். அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பிரதேச சபைஅகற்றப்படும் திண்மக்கழிவின் தன்மையை கவனத்திற் கொண்டு காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் ஒரு சேவைக்கட்டணத்தை பிரதேச சபைக்கு வழங்கி பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் அத்தகைய திண்மக் கழிவுகளை ஒப்படைக்கலாம்.

(iv) எவரேனும் ஒரு நபர் பிரதேச சபை செயலாளருடனான முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள், வீதி ஓரத்தினுள், அல்லது பொதுவழியொன்றின் ஓரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை பிரதேச சபையின் கழிவு சேகரிக்கப்பவரிடம், அகற்றப்பட வேண்டிய கழிவின் அடிப்படையில் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தை கொடுப்பனவு செய்து கையளிக்கலாம்.

(v) ஒவ்வொரு நபரும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள விலங்குகள் வீதியொன்றின் பொது வழியில் அல்லது பொது இடத்தில் மலசலங்களை வெளியேற்றுவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளுடன் இணங்கும் வகையில் அந்த நபரே அம்மலசலங்களை தூய்மைப்படுத்தவும் அகற்றவும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(vi) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து பிரதேச சபைக்குள்ளமைந்துள்ள வீதிக்குள், பாதைக்குள் பொதுவீதிக்குள் அல்லது பொதுஇடங்களுக்குள் எவ்வகையான கழிவுகளையும் வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vii) வீடு அல்லது ஏதேனும் கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்பந்தமான நிகழ்சி நிரலொன்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

8. **குடியிருப்பு வளவுகள்**.- (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய முறை மூலமாகவோ பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சேதனக்கழிவு.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரித்து பைகளில், வாளிகளில் அல்லது ஏனைய கொள்கலன்களில் இட்டு அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும். உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள்,அல்லது விலங்குகளின் மலசலம் என்பனவற்றைத் தாமதிக்காது பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) ஒவ்வொரு குடியிருப்பாளரும் உபபிரிவு (i)விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

9. (i) பலதரப்பட்ட வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்ட பல் மாடிக்குடியிருப்புக்கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும்,செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களைதம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்பட்ட ஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள்(i)மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில் அக் கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோஅல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட காரணமாக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ செயலாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையுமாகும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒருமாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (I) விடயம் (அ) மற்றும்(ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும். அத்தகைய கழிவுகள்அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை விடயம் (இ) மற்றும் (ஈ)களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*10.* **கடைகளும் அலுவலகங்களும்.**- (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்பட வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின்உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும்செயலாளரின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவை இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv) ல் குறிக்கப்பட்டவாறான ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் எந்த உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும்ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளைபிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையிலான கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களைப் பராமரிப்பதும் கழிவகற்றுவதும் மற்றும் அத்தகைய கடை, அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும்

சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதும் ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக:

"குடியிருப்பாளர்" என்பது ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

"அலுவலகம்" என்பது 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக்கொண்டிருக்கும்.

"கடை" என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம் என்பதுடன் உணவு அல்லது குடிபானவகை ஆகியவற்றை வியாபாரத்திற்காக வைத்திருக்கும் இடம் அடங்கலாக மற்றும் முடி திருத்தும் கடை அல்லது அழகு நிலையம் நடத்தும் இடம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

*11.* **உணவகங்கள்**.- (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(iii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக செய்யப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(v) உபவிரிவு (i) இல் காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) இன் கீழ் கையளிக்கப்படாதவிடத்து பிரதேசசபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"உணவகம்" என்பது உறங்குவதற்குரிய வசதியுடன் கூடிய அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபான உணவுகள் அல்லது மதுவகை என்பன வழங்கப்படும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும்.

*12.* **மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள்**.- (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியத்திற்கு பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட ஒரு கொள்கலனில் பிரித்து வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் போடப்பட வேண்டும்.

(iii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்" என்பது மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது காட்சிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

*13.* **மீன்,கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்.**- (i) மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும்:-

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)கீழ் பிரிக்கப்பட்ட விடயம் (அ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், விடயம் (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலுமான ஒரு கொள்கலனினுள் போட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறாக ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

'மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடை' என்பது விற்பதற்கான நோக்கில் அல்லது காட்சிப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

*14.* **நடைபாதை வியாபாரம்.**- (i) பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதை வியாபாரியும் நடைபாதை வியாபாரத்திலும் ஈடுபட முடியாது

(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழான தேவைப்பாடுகளுக்கமைவாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை செயலாளர் அறவாக்கிக்கொண்டு ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார் என்பதுடன் உத்தேச வியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.

(iii) உப பிரிவு (i) கீழான அனுமதிக்கால முடிவில் செயலாளர் உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (iii) இன் கீழ் அறவாக்கப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.

(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தை நடத்தும்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.

(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தை தடைசெய்யும் வகையில் ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(vii) அத்தகைய கழிவுவகைகளை ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் பொருத்தமான வெவ்வேறு வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்படுதல் வேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக வாளி அல்லது கொள்கலனுள் எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உட்புகாவண்ணம் போடப்பட்டு உள்ளேவைத்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கழிவுகள் போடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டால் அது மூடியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடமோ அல்லது பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடமோ ஒப்படைக்க முடியும்.

(ix) எந்தவொரு நடைபாதை வியாபாரியும் கழிவுகளுடன் கூடியகொள்கலனை வியாபாரம் நடைபெறாத போது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ வைக்கக் கூடாது.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

'நடை பாதை வியாபாரி' என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்று அல்லது ஒரு சேவை வழங்கி வரும் ஒரு நபரைக் குறிக்கும்.

15. **தொழிற்சாலைகள்**.- (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள்ளே பின்வருமாறு பிரித்தெடுக்கவேண்டும்:-

(அ) உயிரியல் சேதனக்கழிவு.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) இத் துணைவிதியின் (i) உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"தொழிற்சாலை" என்பது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

*16. **அகழ்வு, நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**.-* (i) எவரேனும் ஒரு நபரால் ஏதாவதொரு வீதி, தெரு அல்லது எதாவதொரு பொது இடம் அகழ்ந்தெடுக்கப்படுவதினால் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பினால் அல்லது தகர்த்தலினால் உருவாக்கப்படும் அத்தகைய கழிவை ஒரு பொருத்தமான முறையில் அந்த வளவிலிருந்து அகற்றும் வரைக்கும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது வளவினுள் சேர்த்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இல் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்தை செயலாளரிடம் கொடுப்பனவு செய்வதன் மூலம் ஒப்படைக்க முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

''அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது தகர்க்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும்'' என்பது ஒரு வேலைகொள்வோனால் அத்தகைய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கும்.

''கழிவு'' என்பது பூமி, களி, தூசி, கட்டட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு மற்றும் ஏதாவது கட்டட நிர்மாணிப்பு அல்லது அழிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு என்பவற்றை உள்ளடக்கும்.

*17.* (i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற வசதிகள் அல்லது ஏதேனும் பொது அடிப்படை வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக எதாவதொரு பொது இடம் அல்லது வீதி, தெரு என்பவற்றை அகழ்கின்ற ஏதேனும் நபர் செயலாளரிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்து இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்காக முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நபரின் அத்தகைய செயலால் உருவாக்கப்படும் கழிவகற்றல் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட வேலை முடிவடைந்த பின் பொது இடத்தில் அல்லது வீதியில் தற்காலிகமாக வைத்திருக்கக் கூடிய கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்கான செலவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை பணத்தை கழிவகற்றல் முற்பணமாக விண்ணப்பதாரி செயலாளரிடம் செலுத்துதலும் வேண்டும்.

(ii) ஏதேனும் ஒரு நபர் உபபிரிவு (i)இன் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுகுவதில் அலட்சியமாக இருந்தால் செயலாளர் அத்தகைய அங்கீகாரமொன்றை வழங்குவதற்கு முன் விண்ணப்பதாரியை, பிரதேச சபையால் அந்நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்திற்கு சமமான ஒரு தொகையை வைப்புச் செய்யக் கோர செயலாளருக்கு அதிகாரமுண்டு.

(iii) உபபிரிவு (i) அல்லது (ii) இன் கீழ் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அத்தகைய கழிவுகள் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறான செலவீனம் உபபிரிவு (i)இன் கீழ் வைப்புக் கழிவகற்றல் முற்பணத்திலிருந்து சரிசெய்யப்படும்.

*18. **வைத்தியசாலைகள்**.-* (i) அனைத்து வைத்தியசாலைகளும் பிரதேச சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையின் உரிமையாளர் அந்த வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உபபிரிவு (i)விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்கவேண்டும் என்பதுடன் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கபடவோ வேண்டும்.

(iii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்திய சாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வு கூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.

"தீங்குவிளைவிக்கும் சுகாதார பராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.

*19.* ***அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை.***- (i) எவரேனும் ஒருவர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.

(ii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் இரத்தம் குடல் மற்றும் மனித உணவிற்காக எடுக்கப்படாத மற்றைய உடற்பாகங்கள் மற்றும் பிரதேச சபையினால் சரியானதென தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கு அமைதல் வேண்டும்:-

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் (இதன் பின்னர் அனுமதிக்கப்பட்டவர் என அழைக்கப்படும்) அவர்களது திண்மக் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்:-

(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(iv) பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொள்கலனில் இட்டு சூழலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலான முறையிலும் வைத்திருக்க வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின்போது வெளியேற்றப்படும் நீர்க்கழிவை 1980ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தூய்மைப்படுத்த வேண்டும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"அறுவை மடுவங்கள்" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 272) அர்த்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்த்தத்தையே உள்ளடக்கும்.

*20.* ***ஏனைய வளவுகள்.***-

(i) துணை விதிகள் இலக்கம் 8 தொடக்கம் 19 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொதுமக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய சமூக கலாச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும்

ஒழுங்குபடுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i) இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் பிரதேச சபைக்கு முன்னரே அறிவிக்க வேண்டும். ஆகவே அத்தகைய செயற்பாட்டிலிருந்து வரும் கழிவை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட முடியும். அத்தகைய விடயங்களில் கழிவு சேகரிப்பு காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்க அமையலாம்.

(iii) பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்படும்.

(iv) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுவதற்கமைய சேவைக்கட்டணமொன்றை பிரதேசசபைக்கு கொடுப்பனவு செய்வதன் மூலம் பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

*21.* **வீதிகளும் பொது இடங்களும்.**- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்:-

(அ) பிரதேச சபை பிராந்தியத்துள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வாகனப்போக்குவரத்து சாலைகள், பொது வடிகாண்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றில் தூய்மையை மற்றும் சுத்திகரிப்பு நிலையை பராமரிப்பதற்கு.

(ஆ) அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவுவகற்றல் கொள்கலன்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் சரியான முறையில் பராமரித்தல்.

(இ) விழாக்களில், விசேட நிகழ்வுகளில் பொது இடங்களில் பாவிப்பதற்காக அல்லது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதாவதொரு நிகழ்விற்கு அவ்வாறு செய்வதற்கு பிரதேச சபையால் முடிவெடுக்கப்பட்டால் அல்லது விசேட நிகழ்வுகள் மீதான அத்தகைய விழாக்களின் அமைப்பாளர்களிடமிருந்து எழுந்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து நடமாடும் கழிவு வாளிகளை வழங்குவதற்கு.

(ஈ) சுத்திகரிப்பு நிலையைப் பராமரிப்பதற்கு குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை பொருத்துவதுடன் அவற்றுள் போடப்படும் கழிவை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு அவை ஒரு தொல்லையாவதற்கு முன் அகற்றுவதற்கு.

(உ) மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏதாவது முறைப்பாட்டை விசாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

(ii) எந்த நபரும் பிரதேச சபையால் வழங்கப்பட்ட ஏதாவது கழிவு வாளியினுள் வீட்டுப்பொருள், வர்த்தக, தொழிற்சாலை அல்லது ஏனைய கழிவுகள் விசேடமாக வைக்கோல், குப்பை போன்ற சிதறுகின்ற கழிவுகளைப் போடக்கூடாது.

*22.* **பிரதேச சபையின் கடமைகள்.**- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும்:-

(அ) கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவிப்பதற்கு,

(ஆ) கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல், அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பாக ஊடகங்களினுடாக மக்களுக்கு விழிப்புணர்வையும் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு,

(இ) கழிவை குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கு சிறு முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு,

(ஈ) கழிவை குறைத்தல், மீண்டும் பாவித்தல், சுழற்சி முறையாக பாவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குவதற்கு,

(உ) மாறுபட்ட கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு

(ஊ) பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் விவரணம் என்பனவற்றிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டதும், தேவைக்கேற்ற எண்ணிக்கையானதுமான பைகள், சாக்குகள்,வாளிகள், மற்றும் கொள்கலன்களை வினைத்திறமையுடன் கூடிய கழிவுகளை பிரித்தல் , சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நோக்கத்துக்காக உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்குதல்.

(எ) பிரதேச சபையின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட கழிவு வகைகளுக்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கழிவு சேகரித்தல் அட்டவணை, சேகரிப்பு தினங்களை குறித்தல், நேரங்கள், முறைகள் மற்றும் சேவைக்கட்டணங்களைத் தயாரிப்பதற்கு அது பொது விடுமுறை தினங்களிலும் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம்,

(ஏ) தனியாக அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக்கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு,

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவை சுத்தமான முறையில் எடுத்துச் செல்வதற்கு,

(ஒ) செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் குறிப்பிடப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் ஏனைய கழிவு வகைகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகாண்களை, பொது இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், பிரதேச சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளையும் ஒப்படைத்தல்,

(ஓ) செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் கூடியளவு நடைமுறைக்குகந்தவாறு அனைத்து உணவுகள் அல்லது அதன் பகுதிகளை பரிகரிக்கப்படுகின்ற, பதப்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய உயிரியல் சேதனக்கழிவு, மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி உள்ளாக்கக்கூடிய கழிவு மற்றும் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றின் அழித்தல் தொடர்பான ஒழுங்குகள் அடங்கலாக, பிரதேச சபையின் கழிவு சேகரிப்பவர்களால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட கழிவுகளுடன் தொடர்புபட்ட மிகச்சரியான அளவுகளை எடுத்தல்.

(ஔ) மத்திய சூழல் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளையும் அழிப்பதற்கு,

(ஃ) 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு மற்றும் ஒரு சுத்திகரிப்பு நில மடுவை பராமரிப்பதற்கு அல்லது கழிவை எரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு,

(க) கழிவை கூட்டுதல், சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகப்பொருத்தமான உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு,

(ங) நிர்மாணிப்பு அல்லது புதுப்பித்தலின்போது உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை அழிக்கும் விதம் பற்றிய விபரங்களை மற்றும் ஒரு வீடு அல்லது ஏனைய வளாகங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தலுக்காக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் ஆரம்ப கட்டம் முடியும் தறுவாயில் உடைந்த கற்களை அகற்றல், பயன்படுத்தல், சேர்த்துவைத்தல் தொடர்பான விடயங்களை அங்கீகரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும்,

(ச) பிரதேச சபைக்காக ஒரு உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு,

(ஞ) திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தேசிய உபாயங்களுடன் இணங்கிப் போகும் வகையிலான ஒரு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம் விபரமாக ஆகக்குறைந்தது ஒரு வருடத்தை தழுவிய வகையிலும் இறுதி அழித்தல் நடவடிக்கை மூன்று வருடம் முன்னோக்கியதாகவும் இருக்கும் வகையிலும் அத்தகைய திட்டம் பிரதேச சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வகையில் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும்,

(ட) உட்பிரிவுகள் (அ) தொடக்கம் (ஞ) வரை குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தலைவருக்கும் செயலாளருக்கும் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் விசாரிப்பதற்கும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் பதினான்கு நாட்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும்.

*23.* **அனுமதிப்பத்திரங்கள்**.- (i) பிரதேச சபையானது கழிவை மீள்பாவனை அல்லது சுழற்சி முறைப் பாவனை அல்லது உரம், உயிர் வாயு அல்லது ஏனைய தயாரிப்பில் ஈடுபடும் நபர் ஒருவருக்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அந்த நபர்-

(அ) பிரிவு (i) ஏற்பாடுகளின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரம் மீளப்பெறப்பட்டிருக்கும்போது எவரும் கழிவைப் பெறவோ, சேகரிக்கவோ முடியாது,.

(ஆ) பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இத்துணைவிதியின் உட்பிரிவுகளின் படி இந்தப் பிரதேச சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராக,

(இ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராக,

(ஈ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் இணங்கும் வகையிலாக நிர்மாணிக்கப்பட்ட இடத்தைக் கழிவு சேகரிப்பிற்கு ஒதுக்கீடு செய்தல்

(உ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லை இல்லாமலும் சுத்தமாக, சேகரிக்கப்பட்ட கழிவை கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்குபவராகவும்,

(ஊ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, பிரதேச சபைக்கு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் ஏதாவது கழிவை அல்லது கழிக்கப்பட்டதை அல்லது மீளவும் பாவிப்பதை பிரதேச சபை எல்லைக்குள் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கட்டணத்தை வழங்குவதன் மூலம் ஒப்படைப்பதற்கு உடன்படுகின்றவராகவும்,

(எ) பிரதேசசபையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

(ஏ) செயலாளர் அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவுகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி, ஏனைய நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும்.

(ஐ) செயலாளர் வழங்கியஅனுமதிப்பத்திரத்தை இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i)ன் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் இந்தத் துணைவிதியின் கீழ் மீளப்பெறலாம்.

*24.* **கழிவை அழிக்கும் பகுதிகள்**.- (i) அதிகாரமற்ற நபர் எவரும் பிரதேச சபையால் கழிவகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஏதாவது பொருளை, மூலங்களை அல்லது குப்பையை அகற்ற அல்லது அப்பகுதியுள் நுழைய, அலைந்து திரிய, பொருட்களை வைக்க, குழப்ப முடியாது. அந்த நோக்கத்திற்காக குறித்த சில நிபந்தனைகளுக்கிணங்க பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட குப்பையை வைத்திருக்க முடியாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அங்கீகாரத்தின் ஏதாவது நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் எந்தவொரு நபரும் ஏதாவது காணியைப் பயன்படுத்த அல்லது வழங்குவதற்கு, செயற்படுத்த அல்லது அந்தக் காணிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவை வைத்திருப்பதற்கான வசதியை அல்லது பிரதேசசபை எல்லைக்குள்ளான வசதிகளைபெற முடியாது.

25. **ஏனையவை**.- (i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரத்திலும் இந்தத் துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தேவைப்படுத்தப்படும் தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் இந்தத் துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் தடை செய்ய முடியாது.

(iv) இந்தத் துணைவிதிகளை அமுல்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் எவராவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உதவியாளர் ஆகியோருக்கு காலத்திற்குக் காலம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட முடியும்.

(v) இந்தத் துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவார்.

26. **மீறல்களும் தண்டனைகளும்**.- (i) இப்பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத் துணைவிதிகளில் 3 தொடக்கம் 20 வரையான மற்றும் 23 தொடக்கம் 25 வரையான ஏற்பாடுகள் எதனையாவது மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்:-

(அ) ஏதாவது ஒரு அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750.00) தண்டப்பணம்

(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணம் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250.00)

27. **பொருள் கோடல்**.- இந்தத் துணை விதிகளின் நோக்கத்திற்காக, இந்தக் கைநூல் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதாகும்.

"வாளி அல்லது வேறு கொள்கலன்கள்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றைக் குறிப்பதாகும்.

"உயிரியல் சேதனக் கழிவு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிப்பதாகும்.

"சேகரிப்பு" என்பதன் கருத்து கொண்டு செல்லுதல், மீள்பாவனை, பயன்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிகளுக்காக பிரதேச சபை கழிவு சேகரிப்பவரால் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் வைத்திருக்கப்படும் அனுமதியாகும்.

"கூட்டெரு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளம்படுத்தும் ஒரு பசளையாகும்.

"அகற்றல்" என்பதன் கருத்து ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.

"அழித்தல்" என்பதன் கருத்து நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.

"கட்டணம்" என்பதன் கருத்து பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.

"உணவுக் கழிவு" என்பதன் கருத்து நுகர முடியாத அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"தோட்டக் கழிவு" என்பதன் கருத்து செடிகள் அல்லது மரங்களிலிருந்து அகற்றப்பட்டவை, வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டவை.

"தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு" என்பதன் கருத்து நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கழிவு.

"தொற்றை ஏற்படுத்தும் கழிவு" என்பதன் கருத்து உபகரணங்கள் கருவிகள் குடுவைகள் மற்றும் நோய் கடத்தும், அழிக்க வேண்டிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"விசேட கழிவு" என்பதன் கருத்து பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் என கொள்ளப்படும்

"உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக அட்டோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர் என்பதற்குள் அடங்காத வாடகையாளர் ஆகியோரைக் குறிக்கும்.

"பிரதேசசபை" என்பது சம்மாந்துறை பிரதேச சபையைக் குறிக்கும்.

"பிரதேச சபை பகுதி" என்பது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி.

"பிரதேச சபை கழிவு சேகரிப்பவர்" என்பது பிரதேச சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.

"பொது இடம்" என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.

"சுழற்சிக்கழிவு" என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.

"பயன்பாடற்ற கழிவு" என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை/ சுழற்சிக் கழிவாகக் கருதப்படாதவையாகும்.

"மீள்பாவனைக்கழிவு" என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீழ்பாவனை செய்யக் கூடியது.

"சுத்திகரிப்பு நிலக்குழி" என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.

"செயலாளர்" என்பது பிரதேசசபைக்காக 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபையின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேசசபையின் செயலாளரைக் குறிக்கும் என்பதுடன் பிரதேசசபையின் செயலாளராக அல்லது அத்தகைய உத்தியோகத்தராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட எந்வொரு நபரும் இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு செயலாளரின் அதிகாரம், கடமை, செயற்பாடுகளை பிரயோகிக்க, பயன்படுத்த எவ்வளவு தூரம் அனுமதிக்கப்படுகிறதோ அவ்வளவிற்கு பயன்படுத்த அதிகாரமுடையோர்.

"வகைப்படுத்தல்" என்பது இத்துணைவிதிகளின் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.

"சேவைக் கட்டணம்" என்பது பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.

"திண்மக் கழிவு" என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.

"வீட்டுக் கழிவு" என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.

"களஞ்சியப்படுத்தல்" என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.

"இடமாற்றல் நிலையம்" என்பது பிரதேச சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.

"போக்குவரத்து" என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.

"பரிகரித்தல்" என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.

அட்டவணை 01

**சேவைக் கட்டணங்கள்**

| சேவைக்கட்டண விபரம் | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை | | | உபவிதிகள் 10, 11,12,13, 15,18 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை (ரூபா) |
|---|---|---|---|---|
| | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் சமுர்த்தி (ரூபா) | |
| ஒரு மாதத்திற்கான சேவைக்கட்டணம் | 50 | 75 | 30 | *- |
| ஒரு வருடத்திற்கான சேவைக்கட்டணம் | 600 | 900 | 360 | *- |
| வருடத்தின் மாசி மாதத்திற்கு 28 ஆம் திகதிகு முன் செலுத்தப்படும் சேவைக் கட்டணம் 10% கழிவுடன் | 540 | 810 | 325 | *- |

*-வெளியேற்றப்படும் கழிவின் அளவைக் கருத்திற்கொண்டு சராசரி அடிப்படையில் பிரதேச சபை காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும். வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி, இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"சமுர்த்தி" என்பது உரிய பிரதேச செயலாளரினால் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதும் அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் உதவியளிக்கப்படும் உள்ளடக்கி அர்த்தப்படுத்தப்படும்.

### கிழக்கு மாகாண மாகாண சபை

*கிழக்கு மாகாண மாகாண சபை முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு மீள் குடியேற்றம், கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் என்ற விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 123(1) மற்றும் (2) உடன் சேர்ந்து வாசிக்கப்படும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான) சட்டங்களினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அட்டாளைச்சேனை பிரதேச சபையினால் ஆக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் துணைவிதியை இத்தால் அங்கீகரித்து இதன்கீழ்க் குறிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்படியாக பகிரங்கப்படுத்தவும் கட்டளையிடுகின்றேன்.*

*சிவனேசதுரை சந்திரகாந்தன்,*
*முதலமைச்சரும்*
*நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம்,*
*கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டம் மற்றும் ஒழுங்கு,*
*பிராந்திய நிருவாகம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சரின் செயலகம்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை,*
*வரோதய நகர்,*
*திருகோணமலை,*
*2012, ஆனி 25.*

### அட்டாளைச்சேனை பிரதேச சபை

### திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணை விதிகள்

*அட்டாளைச்சேனை பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் போது உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடம் மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுக்கோப்பான முறையில் திண்மக் கழிவை வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு விதி என்பவற்றுக்கான ஒரு துணை விதி.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93 இனாலும் பிரிவுகள் 122 மற்றும் 126(ix) விடயம் (ஆ) வின் கீழும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமையவாக 1989ஆம் ஆண்டின் 12ம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமைவாகவும் அட்டளைச்சேனை பிரதேச சபையின் 2011. 11. 24ஆம் திகதிய 73 ஆம் இலக்க தீர்மானத்துக்கமையவும் இத்துணை விதிகள் ஆக்கப்படுகின்றன.*

**பொதுவானவை**

*1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. இத்துணைவிதி அட்டாளைச்சேனைபிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில்,தனிப்பட்ட வளாகங்களில், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றுதல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடமாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல், வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அச்செயல்களுக்கு இடைநேர்விளைவான நடவடிக்கைகளுக்குமாக ஆக்கப்படுகின்ற ஓர் துணைவிதியாகும்.*

*3. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றியும் ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.*

*4. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் வளாகத்திற்குள்ளேயே கழிவினை சேகரித்தல், வகைப்படுத்தல், சேகரிப்பதற்கும், கொண்டு செல்லுதலுக்கும் மற்றும் அகற்றுதலுக்கும் ஏற்றவகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாதல் வேண்டும்.*

*5. (i) வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைமையின் மூலம் சேகரிக்க முடியும்.*

*(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட்ட கழிவினை துணை விதிகளின் முன்னரான உப பிரிவுகளுக்கமைவாகவும் இதனகத்துப்பின்னரான 8 தொடக்கம் 21 வரையான ஏற்பாடுகளுடனும் இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும்.*

(iii) 8 தொடக்கம் 20 வரையான துணை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேகரிப்பிற்காக போடப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்கு உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் பயன்படுத்தப்படும் பை, கைப்பிடியற்ற பை, வாளி அல்லது ஏனைய கொள்கலன்கள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் விவரணம் மற்றும் தரத்திற்கமைவாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவை கழிவு சேகரிப்பை போடுவதற்கு முடியாத நிலையில் கிழிந்து,சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டில்லாது நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும்

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக சொல்லப்பட்ட கொள்கலன்களை பிரதேச சபைமுழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மானிய அடிப்படையில் வழங்கலாம்.

(v) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கப்பட்ட கழிவை பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையிலுள்ள சேகரிப்பு முறை மற்றும் நேர அட்டவணைகளை பொது அறிவித்தல் மூலம் அறிவித்ததற்கமைவாக உப பிரிவு (i)இன் ஏற்பாடுகளுக்கிணங்கி அகற்ற முடியும்.

(vi) அயலவர், குடியிருப்பாளர், விருந்தாளிகள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு தீங்கை அல்லது காயத்தை ஏற்படுத்தும் கழிவு மூலங்களை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு அல்லது சேகரிக்க, களஞ்சியப்படுத்த அல்லது அகற்ற முடியாது.

(vii) துணைவிதிகள் 8, 9, 10, 11, 12, 13, 15, 18 மற்றும் 19 வரை விபரிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணங்களை கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு செலுத்துதல் வேண்டும்:-

(அ) மாதாந்தம் செலுத்துவோர் அடுத்துவருகின்ற மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ஒருவருடத்திற்கான சேவைக்கட்டணத்தை வருட ஆரம்பத்தில் செலுத்துவோர் குறித்த வருடத்தின் மாசி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

6. (i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ,பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ,சாலையிலோ ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை அகற்ற முடியாது.

(ii) எவரேனும் நபர் பிரதேச சபைக்குள் உள்ள திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கோ, வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ, பரிகரிப்பதற்கோ 7வது துணைவிதியின் கீழ் அனுமதிபெற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் கழிவு வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii)இன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக் கழிவுவகை 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்க்காட்டப்படுபவை தவிர, அத்தகைய வளவிற்குள் கழிவுகளை அகற்றலாம்:-

(அ) பிரதேச சபையினால் அத்தகைய கழிவுகள் அகற்றப்பட முடியாதென தடைசெய்யப்பட்ட இடங்கள் அல்லது

(ஆ) பிரதேச சபை மூலம் குறிப்பாக தடைசெய்யப்பட்ட சில வகைக் கழிவுகள்

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேச சபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டும் கருவிகள் அல்லது உலைகள் மூலம் எரிக்கலாம் அல்லது பிரதேச சபை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதாவது வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நடைமுறைக்குப் பொருந்தக்கூடியதும், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான முறையில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை அந்த வளாகத்தினுள்ளேயே பரிகரிக்கலாம் அல்லது பதப்படுத்தலாம். அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பிரதேச சபைஅகற்றப்படும் திண்மக்கழிவின் தன்மையை கவனத்திற் கொண்டு காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் ஒரு சேவைக்கட்டணத்தை பிரதேச சபைக்கு வழங்கி பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் அத்தகைய திண்மக் கழிவுகளை ஒப்படைக்கலாம்.

(iv) எவரேனும் ஒரு நபர் பிரதேச சபை செயலாளருடனான முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள், வீதி ஓரத்தினுள், அல்லது பொதுவழியொன்றின் ஓரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை பிரதேச சபையின் கழிவு சேகரிக்கப்பவரிடம், அகற்றப்பட வேண்டிய கழிவின் அடிப்படையில் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தை கொடுப்பனவு செய்து கையளிக்கலாம்.

(v) ஒவ்வொரு நபரும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள விலங்குகள் வீதியொன்றின் பொது வழியில் அல்லது பொது இடத்தில் மலசலங்களை வெளியேற்றுவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளுடன் இணங்கும் வகையில் அந்த நபரே அம்மலசலங்களை தூய்மைப்படுத்தவும் அகற்றவும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(vi) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து பிரதேச சபைக்குள்ளமைந்துள்ள வீதிக்குள், பாதைக்குள் பொதுவீதிக்குள் அல்லது பொதுஇடங்களுக்குள் எவ்வகையான கழிவுகளையும் வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vii) வீடு அல்லது ஏதேனும் கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்பந்தமான நிகழ்சி நிரலொன்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

8. **குடியிருப்பு வளவுகள்**.- (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய முறை மூலமாகவோ பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சேதனக்கழிவு.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரித்து பைகளில், வாளிகளில் அல்லது ஏனைய கொள்கலன்களில் இட்டு அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும். உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள்,அல்லது விலங்குகளின் மலசலம் என்பனவற்றைத் தாமதிக்காது பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) ஒவ்வொரு குடியிருப்பாளரும் உபபிரிவு (i)விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

9. (i) பலதரப்பட்ட வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்ட பல் மாடிக்குடியிருப்புக்கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும்,செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களைதம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்பட்ட ஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள்(i)மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில் அக் கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோ அல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட காரணமாக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ செயலாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையுமாகும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒருமாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (I) விடயம் (அ) மற்றும்(ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும். அத்தகைய கழிவுகள்அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை விடயம் (இ) மற்றும் (ஈ)களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*10.* **கடைகளும் அலுவலகங்களும்**.- (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்பட வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின்உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும்செயலாளரின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவை இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv)ல் குறிக்கப்பட்டவாறான ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் எந்த உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும்ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளைபிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையிலான கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களைப் பராமரிப்பதும் கழிவகற்றுவதும் மற்றும் அத்தகைய கடை, அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதும் ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"குடியிருப்பாளர்" என்பது ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

"அலுவலகம்" என்பது 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக்கொண்டிருக்கும்.

"கடை" என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம் என்பதுடன் உணவு அல்லது குடிபானவகை ஆகியவற்றை வியாபாரத்திற்காக வைத்திருக்கும் இடம் அடங்கலாக மற்றும் முடி திருத்தும் கடை அல்லது அழகு நிலையம் நடத்தும் இடம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

11. **உணவகங்கள்**.- (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(iii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக செய்யப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(v) உபவிரிவு (i) இல் காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் இத்துணைவிதியின் உபபிரிவு (iv) இன் கீழ் கையளிக்கப்படாதவிடத்து பிரதேசசபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக

"உணவகம்" என்பது உறங்குவதற்குரிய வசதியுடன் கூடிய அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபான உணவுகள் அல்லது மதுவகை என்பன வழங்கப்படும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும்.

*12.* ***மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள்.***- (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியத்திற்கு பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட ஒரு கொள்கலனில் பிரித்து வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் போடப்பட வேண்டும்.

(iii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்" என்பது மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது காட்சிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

*13.* ***மீன், கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்.***-

(i) மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும்:-

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இன்கீழ் பிரிக்கப்பட்ட விடயம் (அ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், விடயம் (ஆ) , (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலுமான ஒரு கொள்கலனினுள் போட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இன் விடயங்கள் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறாக ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக

"மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடை" என்பது விற்பதற்கான நோக்கில் அல்லது காட்சிப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

*14.* **நடைபாதை வியாபாரம்**.- (i) பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதை வியாபாரியும் நடைபாதை வியாபாரத்திலும் ஈடுபட முடியாது

(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழான தேவைப்பாடுகளுக்கமைவாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை செயலாளர் அறவாக்கிக்கொண்டு ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார் என்பதுடன் உத்தேச வியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.

(iii) உப பிரிவு (i) கீழான அனுமதிக்கால முடிவில் செயலாளர் உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (iii) இன் கீழ் அறவாக்கப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.

(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தை நடத்தும்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.

(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தை தடைசெய்யும் வகையில் ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(vii) அத்தகைய கழிவுவகைகளை ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் பொருத்தமான வெவ்வேறு வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்படுதல் வேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக வாளி அல்லது கொள்கலனுள் எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உட்புகாவண்ணம் போடப்பட்டு உள்ளேவைத்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கழிவுகள் போடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டால் அது மூடியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடமோ அல்லது பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடமோ ஒப்படைக்க முடியும்.

(ix) எந்தவொரு நடைபாதை வியாபாரியும் கழிவுகளுடன் கூடியகொள்கலனை வியாபாரம் நடைபெறாத போது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ வைக்கக் கூடாது.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"நடை பாதை வியாபாரி" என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்று அல்லது ஒரு சேவை வழங்கி வரும் ஒரு நபரைக் குறிக்கும்.

*15.* **தொழிற்சாலைகள்**.- (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள்ளே பின்வருமாறு பிரித்தெடுக்கவேண்டும்:-

(அ) உயிரியல் சேதனக்கழிவு.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) இத் துணைவிதியின் (i) உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"தொழிற்சாலை" என்பது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

16. **அகழ்வு,நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**.- (i) எவரேனும் ஒரு நபரால் ஏதாவதொரு வீதி, தெரு அல்லது எதாவதொரு பொது இடம் அகழ்ந்தெடுக்கப்படுவதினால் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பினால் அல்லது தகர்த்தலினால் உருவாக்கப்படும் அத்தகைய கழிவை ஒரு பொருத்தமான முறையில் அந்த வளவிலிருந்து அகற்றும் வரைக்கும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது வளவினுள் சேர்த்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இல் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்தை செயலாளரிடம் கொடுப்பனவு செய்வதன் மூலம் ஒப்படைக்க முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

''அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது தகர்க்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும்'' என்பது ஒரு வேலைகொள்வோனால் அத்தகைய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கும்.

''கழிவு'' என்பது பூமி, களி, தூசி, கட்டட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு மற்றும் ஏதாவது கட்டட நிர்மாணிப்பு அல்லது அழிக்கும் போது உருவாக்கப்படும் கழிவு என்பவற்றை உள்ளடக்கும்.

17. (i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற வசதிகள் அல்லது ஏதேனும் பொது அடிப்படை வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக எதாவதொரு பொது இடம் அல்லது வீதி, தெரு என்பவற்றை அகழ்கின்ற ஏதேனும் நபர் செயலாளரிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்து இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்காக முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நபரின் அத்தகைய செயலால் உருவாக்கப்படும் கழிவகற்றல் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட வேலை முடிவடைந்த பின் பொது இடத்தில் அல்லது வீதியில் தற்காலிகமாக வைத்திருக்கக் கூடிய கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்கான செலவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை பணத்தை கழிவகற்றல் முற்பணமாக விண்ணப்பதாரி செயலாளரிடம் செலுத்துதலும் வேண்டும்.

(ii) ஏதேனும் ஒரு நபர் உபபிரிவு (i)இன் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுகுவதில் அலட்சியமாக இருந்தால் செயலாளர் அத்தகைய அங்கீகாரமொன்றை வழங்குவதற்கு முன் விண்ணப்பதாரியை, பிரதேச சபையால் அந்நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்திற்கு சமமான ஒரு தொகையை வைப்புச் செய்யக் கோர செயலாளருக்கு அதிகாரமுண்டு.

(iii) உபபிரிவு (i) அல்லது (ii) இன் கீழ் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அத்தகைய கழிவுகள் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறான செலவீனம் உபபிரிவு (i)இன் கீழ் வைப்புக் கழிவகற்றல் முற்பணத்திலிருந்து சரிசெய்யப்படும்.

*18. **வைத்தியசாலைகள்**.-* (i) *அனைத்து வைத்தியசாலைகளும் பிரதேச சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையின் உரிமையாளர் அந்த வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும்.*

*(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.*

*(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு*

*(இ) பயன்பாடற்ற கழிவு*

*(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு*

(ii) *உபபிரிவு* (i) *விடயம் (அ), (ஆ) மற்றும் (இ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உபபிரிவு* (i)*விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்கவேண்டும் என்பதுடன் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கபடவோ வேண்டும்.*

(iii) *இந்த துணைவிதியின் உபபிரிவு* (i) *விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.*

*வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக:*

*"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்திய சாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வு கூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.*

*"தீங்குவிளைவிக்கும் சுகாதார பராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.*

*19. **அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை**.-* (i) *எவரேனும் ஒருவர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.*

(ii) *இத்துணைவிதியின் உபபிரிவு* (i) *இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் இரத்தம் குடல் மற்றும் மனித உணவிற்காக எடுக்கப்படாத மற்றைய உடற்பாகங்கள் மற்றும் பிரதேச சபையினால் சரியானதென தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கு அமைதல் வேண்டும்:-*

(iii) *இத்துணைவிதியின் உபபிரிவு* (i) *இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் (இதன் பின்னர் அனுமதிக்கப்பட்டவர் என அழைக்கப்படும்) அவர்களது திண்மக் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்:-*

*(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள்.*

*(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு*

*(இ) பயன்பாடற்ற கழிவு*

(iv) பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொள்கலனில் இட்டு சூழலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலான முறையிலும் வைத்திருக்க வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின்போது வெளியேற்றப்படும் நீர்க்கழிவை 1980ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தூய்மைப்படுத்த வேண்டும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக:

"அறுவை மடுவங்கள்" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் ( அத்தியாயம் 272) அர்த்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்த்தத்தையே உள்ளடக்கும்.

*20.* ***ஏனைய வளவுகள்***.- (i) துணை விதிகள் இலக்கம் 8 தொடக்கம் 19 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொதுமக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய சமூக கலாச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் பிரதேச சபைக்கு முன்னரே அறிவிக்க வேண்டும். ஆகவே அத்தகைய செயற்பாட்டிலிருந்து வரும் கழிவை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட முடியும். அத்தகைய விடயங்களில் கழிவு சேகரிப்பு காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்க அமையலாம்.

(iii) பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்படும்.

(iv) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுவதற்கமைய சேவைக்கட்டணமொன்றை பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்வதன் மூலம் பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

*21.* ***வீதிகளும் பொது இடங்களும்***.- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்:-

(அ) பிரதேச சபை பிராந்தியத்துள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வாகனப்போக்குவரத்து சாலைகள், பொது வடிகாண்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றில் தூய்மையை மற்றும் சுத்திகரிப்பு நிலையை பராமரிப்பதற்கு.

(ஆ) அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவகற்றல் கொள்கலன்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் சரியான முறையில் பராமரித்தல்.

(இ) விழாக்களில், விசேட நிகழ்வுகளில் பொது இடங்களில் பாவிப்பதற்காக அல்லது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதாவதொரு நிகழ்விற்கு அவ்வாறு செய்வதற்கு பிரதேச சபையால் முடிவெடுக்கப்பட்டால் அல்லது விசேட நிகழ்வுகள் மீதான அத்தகைய விழாக்களின் அமைப்பாளர்களிடமிருந்து எழுந்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து நடமாடும் கழிவு வாளிகளை வழங்குவதற்கு.

(ஈ) சுத்திகரிப்பு நிலையைப் பராமரிப்பதற்கு குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை பொருத்துவதுடன் அவற்றுள் போடப்படும் கழிவை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு அவை ஒரு தொல்லையாவதற்கு முன் அகற்றுவதற்கு.

(உ) மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏதாவது முறைப்பாட்டை விசாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

(ii) எந்த நபரும் பிரதேச சபையால் வழங்கப்பட்ட ஏதாவது கழிவு வாளியினுள் வீட்டுப்பொருள், வர்த்தக, தொழிற்சாலை அல்லது ஏனைய கழிவுகள் விசேடமாக வைக்கோல், குப்பை போன்ற சிதறுகின்ற கழிவுகளைப் போடக்கூடாது.

22. **பிரதேச சபையின் கடமைகள்**.- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும்:-

(அ) கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவிப்பதற்கு,

(ஆ) கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல், அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பாக ஊடகங்களினுடாக மக்களுக்கு விழிப்புணர்வையும் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு,

(இ) கழிவை குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கு சிறு முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு,

(ஈ) கழிவை குறைத்தல், மீண்டும் பாவித்தல், சுழற்சி முறையாக பாவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குவதற்கு,

(உ) மாறுபட்ட கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு

(ஊ) பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் விவரணம் என்பனவற்றிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டதும், தேவைக்கேற்ற எண்ணிக்கையானதுமான பைகள், சாக்குகள்,வாளிகள், மற்றும் கொள்கலன்களை வினைத்திறமையுடன் கூடிய கழிவுகளை பிரித்தல் , சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நோக்கத்துக்காக உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்குதல்.

(எ) பிரதேச சபையின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட கழிவு வகைகளுக்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கழிவு சேகரித்தல் அட்டவணை, சேகரிப்பு தினங்களை குறித்தல், நேரங்கள், முறைகள் மற்றும் சேவைக்கட்டணங்களைத் தயாரிப்பதற்கு அது பொது விடுமுறை தினங்களிலும் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம்,

(ஏ) தனியாக அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக்கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு,

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவை சுத்தமான முறையில் எடுத்துச் செல்வதற்கு,

(ஒ) செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் குறிப்பிடப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் ஏனைய கழிவு வகைகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகாண்களை, பொது இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், பிரதேச சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளையும் ஒப்படைத்தல்,

(ஓ) செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் கூடியளவு நடைமுறைக்குகந்தவாறு அனைத்து உணவுகள் அல்லது அதன் பகுதிகளை பரிகரிக்கப்படுகின்ற, பதப்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய உயிரியல் சேதனக்கழிவு, மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி உள்ளாக்கக்கூடிய கழிவு மற்றும் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றின் அழித்தல் தொடர்பான ஒழுங்குகள் அடங்கலாக, பிரதேச சபையின் கழிவு சேகரிப்பவர்களால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட கழிவுகளுடன் தொடர்புபட்ட மிகச்சரியான அளவுகளை எடுத்தல்.

(ஔ) மத்திய சூழல் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளையும் அழிப்பதற்கு,

(ஃ) 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு மற்றும் ஒரு சுத்திகரிப்பு நில மடுவை பராமரிப்பதற்கு அல்லது கழிவை எரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு,

(க) கழிவை கூட்டுதல், சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகப்பொருத்தமான உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு,

(ங) நிர்மாணிப்பு அல்லது புதுப்பித்தலின்போது உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை அழிக்கும் விதம் பற்றிய விபரங்களை மற்றும் ஒரு வீடு அல்லது ஏனைய வளாகங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தலுக்காக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் ஆரம்ப கட்டம் முடியும் தறுவாயில் உடைந்த கற்களை அகற்றல், பயன்படுத்தல், சேர்த்துவைத்தல் தொடர்பான விடயங்களை அங்கீகரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும்,

(ச) பிரதேச சபைக்காக ஒரு உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு,

(ஞ) திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தேசிய உபாயங்களுடன் இணங்கிப் போகும் வகையிலான ஒரு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம் விபரமாக ஆகக்குறைந்தது ஒரு வருடத்தை தழுவிய வகையிலும் இறுதி அழித்தல் நடவடிக்கை மூன்று வருடம் முன்னோக்கியதாகவும் இருக்கும் வகையிலும் அத்தகைய திட்டம் பிரதேச சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வகையில் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும்,

(ட) உட்பிரிவுகள் (அ) தொடக்கம் (ஞ) வரை குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தலைவருக்கும் செயலாளருக்கும் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் விசாரிப்பதற்கும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் பதினான்கு நாட்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும்.

23. **அனுமதிப்பத்திரங்கள்**.- (i) பிரதேச சபையானது கழிவை மீள்பாவனை அல்லது சுழற்சி முறைப் பாவனை அல்லது உரம், உயிர் வாயு அல்லது ஏனைய தயாரிப்பில் ஈடுபடும் நபர் ஒருவருக்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அந்த நபர்–

(அ) பிரிவு (I) ஏற்பாடுகளின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரம் மீளப்பெறப்பட்டிருக்கும்போது எவரும் கழிவைப் பெறவோ, சேகரிக்கவோ முடியாது,.

(ஆ) பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இத்துணைவிதியின் உட்பிரிவுகளின் படி இந்தப் பிரதேச சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராக,

(இ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராக,

(ஈ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் இணங்கும் வகையிலாக நிர்மாணிக்கப்பட்ட இடத்தைக் கழிவு சேகரிப்பிற்கு ஒதுக்கீடு செய்தல்

(உ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லை இல்லாமலும் சுத்தமாக, சேகரிக்கப்பட்ட கழிவை கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்குபவராகவும்,

(ஊ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, பிரதேச சபைக்கு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் ஏதாவது கழிவை அல்லது கழிக்கப்பட்டதை அல்லது மீளவும் பாவிப்பதை பிரதேச சபை எல்லைக்குள் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கட்டணத்தை வழங்குவதன் மூலம் ஒப்படைப்பதற்கு உடன்படுகின்றவராகவும்,

(எ) பிரதேசசபையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

(ஏ) செயலாளர் அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவுகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி, ஏனைய நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும்.

(ஐ) செயலாளர் வழங்கியஅனுமதிப்பத்திரத்தை இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i)ன் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் இந்தத் துணைவிதியின் கீழ் மீளப்பெறலாம்.

24. **கழிவை அழிக்கும் பகுதிகள்**.- (i) அதிகாரமற்ற நபர் எவரும் பிரதேச சபையால் கழிவகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஏதாவது பொருளை, மூலங்களை அல்லது குப்பையை அகற்ற அல்லது அப்பகுதியுள் நுழைய, அலைந்து திரிய, பொருட்களை வைக்க, குழப்ப முடியாது. அந்த நோக்கத்திற்காக குறித்த சில நிபந்தனைகளுக்கிணங்க பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட குப்பையை வைத்திருக்க முடியாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அங்கீகாரத்தின் ஏதாவது நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் எந்தவொரு நபரும் ஏதாவது காணியைப் பயன்படுத்த அல்லது வழங்குவதற்கு, செயற்படுத்த அல்லது அந்தக் காணிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவை வைத்திருப்பதற்கான வசதியை அல்லது பிரதேசசபை எல்லைக்குள்ளான வசதிகளைபெற முடியாது.

25. **ஏனையவை**.- (i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரத்திலும் இந்தத் துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தேவைப்படுத்தப்படும் தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் இந்தத் துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் தடை செய்ய முடியாது.

(iv) இந்தத் துணைவிதிகளை அமுல்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் எவராவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உதவியாளர் ஆகியோருக்கு காலத்திற்குக் காலம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட முடியும்.

(v) இந்தத் துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவார்.

26. **மீறல்களும் தண்டனைகளும்**.- (i) இப்பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத் துணைவிதிகளில் 3 தொடக்கம் 20 வரையான மற்றும் 23 தொடக்கம் 25 வரையான ஏற்பாடுகள் எதனையாவது மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்:-

(அ) ஏதாவது ஒரு அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750.00) தண்டப்பணம்

(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணம் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250.00)

27. **பொருள் கோடல்**.- இந்தத் துணை விதிகளின் நோக்கத்திற்காக, இந்தக் கைநூல் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-

"அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதாகும்.

"வாளி அல்லது வேறு கொள்கலன்கள்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றைக் குறிப்பதாகும்.

"உயிரியல் சேதனக் கழிவு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிப்பதாகும்.

"சேகரிப்பு" என்பதன் கருத்து கொண்டு செல்லுதல், மீள்பாவனை, பயன்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிகளுக்காக பிரதேச சபை கழிவு சேகரிப்பவரால் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் வைத்திருக்கப்படும் அனுமதியாகும்.

"கூட்டெரு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளம்படுத்தும் ஒரு பசளையாகும்.

"அகற்றல்" என்பதன் கருத்து ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.

"அழித்தல்" என்பதன் கருத்து நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.

"கட்டணம்" என்பதன் கருத்து பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.

"உணவுக் கழிவு" என்பதன் கருத்து நுகர முடியாத அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"தோட்டக் கழிவு" என்பதன் கருத்து செடிகள் அல்லது மரங்களிலிருந்து அகற்றப்பட்டவை, வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டவை.

"தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு" என்பதன் கருத்து நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கழிவு.

"தொற்றை ஏற்படுத்தும் கழிவு" என்பதன் கருத்து உபகரணங்கள் கருவிகள் குடுவைகள் மற்றும் நோய் கடத்தும், அழிக்க வேண்டிய பொருட்களைக் குறிப்பதாகும்.

"விசேட கழிவு" என்பதன் கருத்து பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் என கொள்ளப்படும்.

"உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக அட்டோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர் என்பதற்குள் அடங்காத வாடகையாளர் ஆகியோரைக் குறிக்கும்.

"பிரதேசசபை" என்பது அட்டாளைச்சேனை பிரதேச சபையைக் குறிக்கும்.

"பிரதேச சபை பகுதி" என்பது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி.

"பிரதேச சபை கழிவு சேகரிப்பவர்" என்பது பிரதேச சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.

"பொது இடம்" என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.

"சுழற்சிக்கழிவு" என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.

"பயன்பாடற்ற கழிவு" என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை/ சுழற்சிக் கழிவாகக் கருதப்படாதவையாகும்.

"மீள்பாவனைக்கழிவு" என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீழ்பாவனை செய்யக் கூடியது.

"சுத்திகரிப்பு நிலக்குழி" என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.

"செயலாளர்" என்பது பிரதேசசபைக்காக 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபையின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேசசபையின் செயலாளரைக் குறிக்கும் என்பதுடன் பிரதேசசபையின் செயலாளராக அல்லது அத்தகைய உத்தியோகத்தராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட எந்வொரு நபரும் இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு செயலாளரின் அதிகாரம், கடமை, செயற்பாடுகளை பிரயோகிக்க, பயன்படுத்த எவ்வளவு தூரம் அனுமதிக்கப்படுகிறதோ அவ்வளவிற்கு பயன்படுத்த அதிகாரமுடையோர்.

"வகைப்படுத்தல்" என்பது இத்துணைவிதிகளின் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.

"சேவைக் கட்டணம்" என்பது பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.

"திண்மக் கழிவு" என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.

"வீட்டுக் கழிவு" என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.

"களஞ்சியப்படுத்தல்" என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.

"இடமாற்றல் நிலையம்" என்பது பிரதேச சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.

"போக்குவரத்து" என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.

"பரிகரித்தல்" என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.

**அட்டவணை 01**

சேவைக் கட்டணங்கள்

| சேவைக்கட்டண விபரம் | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை | | | உபவிதிகள் 10, 11,12,13, 15,18 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை |
|---|---|---|---|---|
| | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் சமுர்த்தி (ரூபா) | |
| ஒரு மாதத்திற்கான சேவைக்கட்டணம் | 50 | 75 | 30 | *- |
| ஒரு வருடத்திற்கான சேவைக்கட்டணம் | 600 | 900 | 360 | *- |
| வருடத்தின் மாசி மாதத்திற்கு 28 ஆம் திகதிக்கு முன் செலுத்தப்படும் சேவைக் கட்டணம் 10% கழிவுடன் | 540 | 810 | 325 | *- |

*-வெளியேற்றப்படும் கழிவின் அளவைக் கருத்திற்கொண்டு சராசரி அடிப்படையில் பிரதேச சபை காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும்.

வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி, இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"சமுர்த்தி" என்பது உரிய பிரதேச செயலாளரினால் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதும் அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் உதவியளிக்கப்படும் உள்ளடக்கி அர்த்தப்படுத்தப்படும்.

7-644/ 3

---

## கிழக்கு மாகாண மாகாண சபை

கிழக்கு மாகாண மாகாண சபை முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு மீள் குடியேற்றம், கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிருவாகம், சுற்றுலாவும் சுற்றுச்சூழலும் என்ற விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகிய நான் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 123(1) மற்றும் (2) உடன் சேர்ந்து வாசிக்கப்படும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபைகள் (இடைநேர் விளைவான) சட்டங்களினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு காரைதீவு பிரதேச சபையினால் ஆக்கப்பட்டு முன்னளிக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் திண்மக் கழிவகற்றல் துணைவிதியை இத்தால் அங்கீகரித்து இதன்கீழ்க் குறிக்கப்படும் தினத்தில் அமுலுக்கு வரும்படியாக பகிரங்கப்படுத்தவும் கட்டளையிடுகின்றேன்.

சிவனேசதுரை சந்திரகாந்தன்,
முதலமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம்,
கிராம அபிவிருத்தி, மனிதவலு, சட்டம் மற்றும் ஒழுங்கு,
பிராந்திய நிருவாகம், சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்,
கிழக்கு மாகாண மாகாண சபை.

முதலமைச்சரின் செயலகம்,
கிழக்கு மாகாண மாகாண சபை,
வரோதய நகர்,
திருகோணமலை,
2012, ஆனி 25.

**திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணை விதிகள்**

***காரைதீவு பிரதேச சபை***

*காரைதீவு பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் போது உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடம் மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுக்கோப்பான முறையில் திண்மக் கழிவை வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்கு விதி என்பவற்றுக்கான ஒரு துணை விதி.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 93 இனாலும் பிரிவுகள் 122 மற்றும் 126(*ix*) விடயம் (ஆ) வின் கீழும் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமையவாக 1989ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 இனால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்ற தத்துவங்களுக்கமைவாகவும் காரைதீவு பிரதேச சபையின் 2011.10.28 ஆந் திகதிய கூட்டத்தின் 29/ 03 ஆம் இலக்க தீர்மானத்துக்கமையவும் இத்துணை விதிகள் ஆக்கப்படுகின்றன.*

**பொதுவானவை :**

*1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணை விதிகள் என அழைக்கப்படும்.*

*2. இத்துணைவிதி காரைதீவு பிரதேச சபை எல்லைக்குள் பொது இடங்களில்,தனிப்பட்ட வளாகங்களில், வீதிகளில், வாகனத்தில் பயணம் செய்யும் சந்தர்ப்பங்களில் உருவாக்கப்படும் 'திண்மக் கழிவை' அகற்றுதல் மற்றும் பரிகரித்தல், பதப்படுத்தல், கொண்டு செல்லல், இடம்மாற்றுதல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல், வகைப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அச்செயல்களுக்கு இடைநேர்விளைவான நடவடிக்கைகளுக்குமாக ஆக்கப்படுகின்ற ஓர் துணைவிதியாகும்.*

*3. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றியும் ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.*

*4. பிரதேச சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் வளாகத்திற்குள்ளேயே கழிவினை சேகரித்தல், வகைப்படுத்தல், சேகரிப்பதற்கும், கொண்டு செல்லுதலுக்கும் மற்றும் அகற்றுதலுக்கும் ஏற்றவகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாதல் வேண்டும்.*

*5.* (i) *வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைமையின் மூலம் சேகரிக்க முடியும்.*

(ii) *ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட்ட கழிவினை துணை விதிகளின் முன்னரான உப பிரிவுகளுக்கமைவாகவும் இதனகத்துப்பின்னரான 8 தொடக்கம் 21 வரையான ஏற்பாடுகளுடனும் இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும்.*

(iii) *8 தொடக்கம் 20 வரையான துணை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேகரிப்பிற்காக போடப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு அல்லது சேகரிப்பதற்கு உரிமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் பயன்படுத்தப்படும் பை, கைப்பிடியற்ற பை, வாளி அல்லது ஏனைய கொள்கலன்கள் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் அனுமதிக்கப்படும் விவரணம் மற்றும் தரத்திற்கமைவாக அமைதல் வேண்டும் என்பதுடன் அவை கழிவு சேகரிப்பை போடுவதற்கு முடியாத நிலையில் கிழிந்து,சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டில்லாது நல்ல நிலையில் பேணப்படுதலும் வேண்டும்*

(iv) *உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அவ்வாறு விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக சொல்லப்பட்ட கொள்கலன்களை பிரதேச சபைமுழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மானிய அடிப்படையில் வழங்கலாம்.*

(v) *உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கப்பட்ட கழிவை பிரதேச சபையால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறையிலுள்ள சேகரிப்பு முறை மற்றும் நேர அட்டவணைகளை பொது அறிவித்தல் மூலம் அறிவித்ததற்கமைவாக உப பிரிவு* (i)*இன் ஏற்பாடுகளுக்கிணங்கி அகற்ற முடியும்.*

(vi) *அயலவர், குடியிருப்பாளர், விருந்தாளிகள் ஆகியோரின் அல்லது பிரதேசத்தின் சுகாதார நிலைமைகளுக்கு ஆரோக்கியத்திற்கு தீங்கை அல்லது காயத்தை ஏற்படுத்தும் கழிவு மூலங்களை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்கவோ களஞ்சியப்படுத்தவோ அல்லது அகற்றவோ கூடாது.*

(vii) துணைவிதிகள் 8, 9, 10, 11, 12, 13, 15, 18 மற்றும் 19 வரை விபரிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சேவைக்கட்டணங்களை கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு செலுத்துதல் வேண்டும்:-

(அ) மாதாந்தம் செலுத்துவோர் அடுத்துவருகின்ற மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) ஒருவருடத்திற்கான சேவைக்கட்டணத்தை வருட ஆரம்பத்தில் செலுத்துவோர் குறித்த வருடத்தின் மாசி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

6. (i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ,பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ,சாலையிலோ ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை அகற்ற முடியாது.

(ii) எவரேனும் நபர் பிரதேச சபைக்குள் உள்ள திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் ஒரு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கோ, வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ, பரிகரிப்பதற்கோ 7வது துணைவிதியின் கீழ் அனுமதிபெற தவறியுள்ள சந்தர்ப்பத்தில் அவர் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் கழிவு வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii)இன் கீழ் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக் கழிவுவகை 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்க்காட்டப்படுபவை தவிர, அத்தகைய வளவிற்குள் கழிவுகளை அகற்றலாம்:-

(அ) பிரதேச சபையினால் அத்தகைய கழிவுகள் அகற்றப்பட முடியாதென தடைசெய்யப்பட்ட இடங்கள் அல்லது

(ஆ) பிரதேச சபை மூலம் குறிப்பாக தடைசெய்யப்பட்ட சில வகைக் கழிவுகள்

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரதேசசபைச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டும் கருவிகள் அல்லது உலைகள் மூலம் எரிக்கலாம் அல்லது பிரதேச சபை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதாவது வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நடைமுறைக்குப் பொருந்தக்கூடியதும், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதுமான முறையில் சேகரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளை அந்த வளாகத்தினுள்ளேயே பரிகரிக்கலாம் அல்லது பதப்படுத்தலாம். அத்தகைய உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர், பிரதேச சபைஅகற்றப்படும் திண்மக்கழிவின் தன்மையை கவனத்திற் கொண்டு காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் ஒரு சேவைக்கட்டணத்தை பிரதேச சபைக்கு வழங்கி பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் அத்தகைய திண்மக் கழிவுகளை ஒப்படைக்கலாம்.

(iv) எவரேனும் ஒரு நபர் பிரதேச சபை செயலாளருடனான முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள், வீதி ஓரத்தினுள், அல்லது பொதுவழியொன்றின் ஓரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை பிரதேச சபையின் கழிவு சேகரிக்கப்பவரிடம், அகற்றப்பட வேண்டிய கழிவின் அடிப்படையில் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தை கொடுப்பனவு செய்து கையளிக்கலாம்.

(v) ஒவ்வொரு நபரும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள விலங்குகள் வீதியொன்றின் பொது வழியில் அல்லது பொது இடத்தில் மலசலங்களை வெளியேற்றுவதை தடை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளுடன் இணங்கும் வகையில் அந்த நபரே அம்மலசலங்களை தூய்மைப்படுத்தவும் அகற்றவும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

(vi) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து பிரதேச சபைக்குள்ளமைந்துள்ள வீதிக்குள், பாதைக்குள் பொதுவீதிக்குள் அல்லது பொதுஇடங்களுக்குள் எவ்வகையான கழிவுகளையும் வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vii) வீடு அல்லது ஏதேனும் கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்பந்தமான நிகழ்சி நிரலொன்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

8. **குடியிருப்பு வளவுகள்**.- (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய முறை மூலமாகவோ பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் சேதனக்கழிவு.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரித்து பைகளில், வாளிகளில் அல்லது ஏனைய கொள்கலன்களில் இட்டு அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருக்க வேண்டும். உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். விலங்குகளின் இறந்த உடல், உடல் பாகங்கள்,அல்லது விலங்குகளின் மலசலம் என்பனவற்றைத் தாமதிக்காது பிரதேச சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) ஒவ்வொரு குடியிருப்பாளரும் உபபிரிவு (i)விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத் தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

9. (i) பலதரப்பட்ட வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்ட பல் மாடிக்குடியிருப்புக்கட்டடங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும்,செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களைதம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i)இல் குறிப்பிடப்பட்ட ஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள்(i)மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில் அக் கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோஅல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட காரணமாக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ செயலாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் செயலாளரின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையுமாகும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒருமாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (I) விடயம் (அ) மற்றும்(ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும். அத்தகைய கழிவுகள்அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை விடயம் (இ) மற்றும் (ஈ)களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து பிரதேச சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*10.* **கடைகளும் அலுவலகங்களும்**.- (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்பட வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின்உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும்செயலாளரின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவை இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv)ல் குறிக்கப்பட்டவாறான ஒரு கடையின் அல்லது அலுவலகத்தின் எந்த உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் போடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும்ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளைபிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையிலான கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களைப் பராமரிப்பதும் கழிவகற்றுவதும் மற்றும் அத்தகைய கடை, அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் பாதுகாப்பதும் ஒவ்வொரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக:

"குடியிருப்பாளர்" என்பது ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

"அலுவலகம்" என்பது 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக்கொண்டிருக்கும்.

"கடை"என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம் என்பதுடன் உணவு அல்லது குடிபானவகை ஆகியவற்றை வியாபாரத்திற்காக வைத்திருக்கும் இடம் அடங்கலாக மற்றும் முடி திருத்தும் கடை அல்லது அழகு நிலையம் நடத்தும் இடம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

*11.* **உணவகங்கள்**.- (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(iii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக செய்யப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(v) உபவிரிவு (i) இல் காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) இன் கீழ் கையளிக்கப்படாதவிடத்து பிரதேசசபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"உணவகம்" என்பது உறங்குவதற்குரிய வசதியுடன் கூடிய அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபான உணவுகள் அல்லது மதுவகை என்பன வழங்கப்படும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும்.

*12.* ***மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள்.***- (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியத்திற்கு பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட ஒரு கொள்கலனில் பிரித்து வைத்திருத்தல் வேண்டும். ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் போடப்பட வேண்டும்.

(iii) இத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்" என்பது மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது காட்சிப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

*13.* ***மீன்,கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்.***- (i) மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு பிரிக்கவேண்டும்:-

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i)கீழ் பிரிக்கப்பட்ட விடயம் (அ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், விடயம் (ஆ) , (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழல் மாசடையா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலுமான ஒரு கொள்கலனினுள் போட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம். அவ்வாறாக ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும் சேர்த்து பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடை" என்பது விற்பதற்கான நோக்கில் அல்லது காட்சிப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பதாகும்.

*14.* **நடைபாதை வியாபாரம்.**- (i) பிரதேச சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதை வியாபாரியும் நடைபாதை வியாபாரத்திலும் ஈடுபட முடியாது

(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழான தேவைப்பாடுகளுக்கமைவாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை செயலாளர் அறவாக்கிக்கொண்டு ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பார் என்பதுடன் உத்தேச வியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.

(iii) உப பிரிவு (i) கீழான அனுமதிக்கால முடிவில் செயலாளர் உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (iii) இன் கீழ் அறவாக்கப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.

(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தை நடத்தும்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.

(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தை தடைசெய்யும் வகையில் ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு பிரிக்க வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(vii) அத்தகைய கழிவுவகைகளை ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் பொருத்தமான வெவ்வேறு வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடப்படுதல் வேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக வாளி அல்லது கொள்கலனுள் எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உட்புகாவண்ணம் போடப்பட்டு உள்ளேவைத்துப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேலதிக கழிவுகள் போடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டால் அது மூடியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத் துணைவிதியின் உபபிரிவு (iv) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடமோ அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடமோ ஒப்படைக்க முடியும்.

(ix) எந்தவொரு நடைபாதை வியாபாரியும் கழிவுகளுடன் கூடியகொள்கலனை வியாபாரம் நடைபெறாத போது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ வைக்கக் கூடாது.

வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக

"நடை பாதை வியாபாரி" என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்று அல்லது ஒரு சேவை வழங்கி வரும் ஒரு நபரைக் குறிக்கும்.

15. **தொழிற்சாலைகள்**.- (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள்ளே பின்வருமாறு பிரித்தெடுக்கவேண்டும்:-

(அ) உயிரியல் சேதனக்கழிவு.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) இத் துணைவிதியின் (i) உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத்துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணைவிதியின் நோக்கத்திற்காக-

"தொழிற்சாலை" என்பது 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

16. **அகழ்வு,நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**.- (i) எவரேனும் ஒரு நபரால் ஏதாவதொரு வீதி, தெரு அல்லது எதாவதொரு பொது இடம் அகழ்ந்தெடுக்கப்படுவதினால் அல்லது ஏதேனும் நிர்மாணிப்பினால் அல்லது தகர்த்தலினால் உருவாக்கப்படும் அத்தகைய கழிவை ஒரு பொருத்தமான முறையில் அந்த வளவிலிருந்து அகற்றும் வரைக்கும் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது வளவினுள் சேர்த்து வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இல் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்தை செயலாளரிடம் கொடுப்பனவு செய்வதன் மூலம் ஒப்படைக்க முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணைவிதியின் நோக்கத்திற்காக-

"அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது தகர்க்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும்" என்பது ஒரு வேலைகொள்வோனால் அத்தகைய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு நபரையும் உள்ளடக்கும்.

"கழிவு" என்பது பூமி, களி, தூசி, கட்டட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கும்போது உருவாக்கப்படும் கழிவு மற்றும் ஏதாவது கட்டட நிர்மாணிப்பு அல்லது அழிக்கும்போது உருவாக்கப்படும் கழிவு என்பவற்றை உள்ளடக்கும்.

17. (i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி போன்ற வசதிகள் அல்லது ஏதேனும் பொது அடிப்படை வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக எதாவதொரு பொது இடம் அல்லது வீதி, தெரு என்பவற்றை அகழ்கின்ற ஏதேனும் நபர் செயலாளரிடம் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்து இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்காக முன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய

நபரின் அத்தகைய செயலால் உருவாக்கப்படும் கழிவகற்றல் நோக்கத்துக்காக சொல்லப்பட்ட வேலை முடிவடைந்த பின் பொது இடத்தில் அல்லது வீதியில் தற்காலிகமாக வைத்திருக்கக் கூடிய கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்கான செலவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு பிரதேச சபையால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகை பணத்தை கழிவகற்றல் முற்பணமாக விண்ணப்பதாரி செயலாளரிடம் செலுத்துதலும் வேண்டும்.

(ii) ஏதேனும் ஒரு நபர் உபபிரிவு (i)இன் கீழான ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுகுவதில் அலட்சியமாக இருந்தால் செயலாளர் அத்தகைய அங்கீகாரமொன்றை வழங்குவதற்கு முன் விண்ணப்பதாரியை, பிரதேச சபையால் அந்நோக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவீனத்திற்கு சமமான ஒரு தொகையை வைப்புச் செய்யக் கோர செயலாளருக்கு அதிகாரமுண்டு.

(iii) உபபிரிவு (i) அல்லது (ii) இன் கீழ் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் அத்தகைய கழிவுகள் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறான செலவீனம் உபபிரிவு (i)இன் கீழ் வைப்புக் கழிவகற்றல் முற்பணத்திலிருந்து சரிசெய்யப்படும்.

*18.* **வைத்தியசாலைகள்**.- (i) அனைத்து வைத்தியசாலைகளும் பிரதேச சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையின் உரிமையாளர் அந்த வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவு

(ii) உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ)வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். உபபிரிவு (i)விடயம் (ஈ)வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்கவேண்டும் என்பதுடன் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கபடவோ வேண்டும்.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக-

"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்திய சாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வு கூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.

ரீங்குவிளைவிக்கும் சுகாதார பராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.

*19.* **அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை**.- (i) எவரேனும் ஒருவர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.

(ii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் இரத்தம் குடல் மற்றும் மனித உணவிற்காக எடுக்கப்படாத மற்றைய உடற்பாகங்கள் மற்றும் பிரதேச சபையினால் சரியானதென தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய நிபந்தனைகளுக்கமைவாதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் (இதன் பின்னர் அனுமதிக்கப்பட்டவர் என அழைக்கப்படும்) அவர்களது திண்மக் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்:-

(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(iv) பிரிக்கப்பட்ட கழிவை பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் போடவேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொள்கலனில் இட்டு சூழலை மாசுபடுத்துவதைத் தடுக்கும் வகையிலும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகுவதைத் தடுக்கும் வகையிலான முறையிலும் வைத்திருக்க வேண்டும்.

(v) இத் துணைவிதியின் உபபிரிவு (iii)விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின்போது வெளியேற்றப்படும் நீர்க்கழிவை 1980ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தூய்மைப்படுத்த வேண்டும்.

வேறுவகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணைவிதியின் நோக்கத்திற்காக:

"அறுவை மடுவங்கள்" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் ( அத்தியாயம் 272) அர்த்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்த்தத்தையே உள்ளடக்கும்.

20. **ஏனைய வளவுகள்**.- (i) துணை விதிகள் இலக்கம் 8 தொடக்கம் 19 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொதுமக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய சமூக கலாச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்.

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு

(இ) பயன்பாடற்ற கழிவு

(ஈ) விசேட கழிவு

(ii) உபபிரிவு (i)இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் பிரதேச சபைக்கு முன்னரே அறிவிக்க வேண்டும். ஆகவே அத்தகைய செயற்பாட்டிலிருந்து வரும் கழிவை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட முடியும். அத்தகைய விடயங்களில் கழிவு சேகரிப்பு காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்க அமையலாம்.

(iii) பிரிக்கப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்படும்.

(iv) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) இல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) யில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுவதற்கமைய சேவைக்கட்டணமொன்றை பிரதேச சபைக்கு கொடுப்பனவு செய்வதன் மூலம் பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

*21. **வீதிகளும் பொது இடங்களும்.**- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்:-*

*(அ) பிரதேச சபை பிராந்தியத்துள் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள், வாகனப்போக்குவரத்து சாலைகள், பொது வடிகாண்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றில் தூய்மையை மற்றும் சுத்திகரிப்பு நிலையை பராமரிப்பதற்கு.*

*(ஆ) அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவகற்றல் கொள்கலன்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் சரியான முறையில் பராமரித்தல்.*

*(இ) விழாக்களில், விசேட நிகழ்வுகளில் பொது இடங்களில் பாவிப்பதற்காக அல்லது பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதாவதொரு நிகழ்விற்கு அவ்வாறு செய்வதற்கு பிரதேச சபையால் முடிவெடுக்கப்பட்டால் அல்லது விசேட நிகழ்வுகள் மீதான அத்தகைய விழாக்களின் அமைப்பாளர்களிடமிருந்து எழுந்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து நடமாடும் கழிவு வாளிகளை வழங்குவதற்கு.*

*(ஈ) சுத்திகரிப்பு நிலையைப் பராமரிப்பதற்கு குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை பொருத்துவதுடன் அவற்றுள் போடப்படும் கழிவை அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு அவை ஒரு தொல்லையாவதற்கு முன் அகற்றுவதற்கு.*

*(உ) மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற ஏதாவது முறைப்பாட்டை விசாரிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.*

*(ii) எந்த நபரும் பிரதேச சபையால் வழங்கப்பட்ட ஏதாவது கழிவு வாளியினுள் வீட்டுப்பொருள், வர்த்தக, தொழிற்சாலை அல்லது ஏனைய கழிவுகள் விசேடமாக வைக்கோல், குப்பை போன்ற சிதறுகின்ற கழிவுகளைப் போடக்கூடாது.*

*22. **பிரதேச சபையின் கடமைகள்.**- (i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் பிரதேச சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும்:-*

*(அ) கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவிப்பதற்கு,*

*(ஆ) கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல், அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பாக ஊடகங்களினுடாக மக்களுக்கு விழிப்புணர்வையும் பிரச்சாரங்களையும் நடத்துவதற்கு,*

*(இ) கழிவை குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்கு சிறு முயற்சியாளர்களுக்கு உதவுவதற்கு,*

*(ஈ) கழிவை குறைத்தல், மீண்டும் பாவித்தல், சுழற்சி முறையாக பாவித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குவதற்கு,*

*(உ) மாறுபட்ட கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு*

*(ஊ) பிரதேச சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரம் மற்றும் விவரணம் என்பனவற்றிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டதும், தேவைக்கேற்ற எண்ணிக்கையானதுமான பைகள், சாக்குகள்,வாளிகள், மற்றும் கொள்கலன்களை வினைத்திறமையுடன் கூடிய கழிவுகளை பிரித்தல் , சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நோக்கத்துக்காக உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்குதல்.*

*(எ) பிரதேச சபையின் வேறுபட்ட பகுதிகளில் வேறுபட்ட கழிவு வகைகளுக்காக பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கழிவு சேகரித்தல் அட்டவணை, சேகரிப்பு தினங்களை குறித்தல், நேரங்கள், முறைகள் மற்றும் சேவைக்கட்டணங்களைத் தயாரிப்பதற்கு அது பொது விடுமுறை தினங்களிலும் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் உள்ளடக்கலாம்,*

*(ஏ) தனியாக அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக்கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு,*

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவை சுத்தமான முறையில் எடுத்துச் செல்வதற்கு,

(ஒ) செயலாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் குறிப்பிடப்பட்ட தீங்கு விளைவிக்கும் மற்றும் ஏனைய கழிவு வகைகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகாண்களை, பொது இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், பிரதேச சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளையும் ஒப்படைத்தல்,

(ஓ) செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் கூடியளவு நடைமுறைக்குகந்தவாறு அனைத்து உணவுகள் அல்லது அதன் பகுதிகளை பரிகரிக்கப்படுகின்ற, பதப்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய உயிரியல் சேதனக்கழிவு, மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி உள்ளாக்கக்கூடிய கழிவு மற்றும் அத்தகைய செயற்பாடுகளிலிருந்து கழிக்கப்பட்டவற்றின் அழித்தல் தொடர்பான ஒழுங்குகள் அடங்கலாக, பிரதேச சபையின் கழிவு சேகரிப்பவர்களால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட கழிவுகளுடன் தொடர்புபட்ட மிகச்சரியான அளவுகளை எடுத்தல்.

(ஔ) மத்திய சூழல் அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளையும் அழிப்பதற்கு,

(ஃ) 1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு மற்றும் ஒரு சுத்திகரிப்பு நில மடுவை பராமரிப்பதற்கு அல்லது கழிவை எரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் அல்லது அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு அனுமதிப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு,

(க) கழிவை கூட்டுதல், சேகரித்தல், பிரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் மிகப்பொருத்தமான உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு,

(ங) நிர்மாணிப்பு அல்லது புதுப்பித்தலின்போது உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை அழிக்கும் விதம் பற்றிய விபரங்களை மற்றும் ஒரு வீடு அல்லது ஏனைய வளாகங்களை நிர்மாணித்தல் அல்லது புதுப்பித்தலுக்காக பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட வேலைகளின் ஆரம்ப கட்டம் முடியும் தறுவாயில் உடைந்த கற்களை அகற்றல், பயன்படுத்தல், சேர்த்துவைத்தல் தொடர்பான விடயங்களை அங்கீகரிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும்,

(ச) பிரதேச சபைக்காக ஒரு உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்கு,

(ஞ) திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தேசிய உபாயங்களுடன் இணங்கிப் போகும் வகையிலான ஒரு திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற் திட்டத்தை தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய சட்டவாக்கம் விபரமாக ஆகக்குறைந்தது ஒரு வருடத்தை தழுவிய வகையிலும் இறுதி அழித்தல் நடவடிக்கை மூன்று வருடம் முன்னோக்கியதாகவும் இருக்கும் வகையிலும் அத்தகைய திட்டம் பிரதேச சபையால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும் வகையில் தயாரிப்பதற்கும் அமுல்படுத்துவதற்கும்,

(ட) உட்பிரிவுகள் (அ) தொடக்கம் (ஞ) வரை குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தலைவருக்கும் செயலாளருக்கும் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் விசாரிப்பதற்கும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் பதினான்கு நாட்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும்.

23. **அனுமதிப்பத்திரங்கள்**.- (i) பிரதேச சபையானது கழிவை மீள்பாவனை அல்லது சுழற்சி முறைப் பாவனை அல்லது உரம், உயிர் வாயு அல்லது ஏனைய தயாரிப்பில் ஈடுபடும் நபர் ஒருவருக்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம். அந்த நபர்-

(அ) பிரிவு (i) ஏற்பாடுகளின் கீழ் ஒரு அனுமதிப்பத்திரம் மீளப்பெறப்பட்டிருக்கும்போது எவரும் கழிவைப் பெறவோ, சேகரிக்கவோ முடியாது,.

(ஆ) பிரதேச சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான இத்துணைவிதியின் உட்பிரிவுகளின் படி இந்தப் பிரதேச சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராக,

(இ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராக,

(ஈ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் இணங்கும் வகையிலாக நிர்மாணிக்கப்பட்ட இடத்தைக் கழிவு சேகரிப்பிற்கு ஒதுக்கீடு செய்தல்

(உ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லை இல்லாமலும் சுத்தமாக, சேகரிக்கப்பட்ட கழிவை கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்குபவராகவும்,

(ஊ) பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, பிரதேச சபைக்கு உற்பத்தியின் போது உருவாக்கப்படும் ஏதாவது கழிவை அல்லது கழிக்கப்பட்டதை அல்லது மீளவும் பாவிப்பதை பிரதேச சபை எல்லைக்குள் காலத்துக்கு காலம் பிரதேச சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு கட்டணத்தை வழங்குவதன் மூலம் ஒப்படைப்பதற்கு உடன்படுகின்றவராகவும்,

(எ) பிரதேசசபையால் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுக்கப்பட்டால் அல்லது நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

(ஏ) செயலாளர் அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவுகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி, ஏனைய நிபந்தனைகளைக் குறிப்பிட முடியும்.

(ஐ) செயலாளர் வழங்கியஅனுமதிப்பத்திரத்தை இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i)ன் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் இந்தத் துணைவிதியின் கீழ் மீளப்பெறலாம்.

*24. **கழிவை அழிக்கும் பகுதிகள்**.*- (i) அதிகாரமற்ற நபர் எவரும் பிரதேச சபையால் கழிவகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து ஏதாவது பொருளை, மூலங்களை அல்லது குப்பையை அகற்ற அல்லது அப்பகுதியுள் நுழைய, அலைந்து திரிய, பொருட்களை வைக்க, குழப்ப முடியாது. அந்த நோக்கத்திற்காக குறித்த சில நிபந்தனைகளுக்கிணங்க பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தேவைப்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட குப்பையை வைத்திருக்க முடியாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அங்கீகாரத்தின் ஏதாவது நிபந்தனைகளுக்கு இணங்கக்கூடிய வகையில் எந்தவொரு நபரும் ஏதாவது காணியைப் பயன்படுத்த அல்லது வழங்குவதற்கு, செயற்படுத்த அல்லது அந்தக் காணிக்கு வெளியே ஒரு இடத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவை வைத்திருப்பதற்கான வசதியை அல்லது பிரதேசசபை எல்லைக்குள்ளான வசதிகளைபெற முடியாது.

*25. **ஏனையவை**.*- (i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரத்திலும் இந்தத் துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் தேவைப்படுத்தப்படும் தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் இந்தத் துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் தடை செய்ய முடியாது.

(iv) இந்தத் துணைவிதிகளை அமுல்படுத்தும் மற்றும் செயற்படுத்தும் எவராவது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உதவியாளர் ஆகியோருக்கு காலத்திற்குக் காலம் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட முடியும்.

(v) இந்தத் துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக நடக்கும் எவரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவார்.

*26. **மீறல்களும் தண்டனைகளும்.**- (i) இப்பிரதேச சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத் துணைவிதிகளில் 3 தொடக்கம் 20 வரையான மற்றும் 23 தொடக்கம் 25 வரையான ஏற்பாடுகள் எதனையாவது மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்துமூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்:-*

*(அ) ஏதாவது ஒரு அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக ரூபா எழுநூற்றி ஐம்பது (ரூபா 750.00) தண்டப்பணம்*

*(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணம் ரூபா இருநூற்றி ஐம்பது (ரூபா 250.00)*

*27. **பொருள் கோடல்.**- இந்தத் துணை விதிகளின் நோக்கத்திற்காக, இந்தக் கைநூல் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி-*

*"அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவை சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர் என்பதாகும்.*

*"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர் என்பதாகும்.*

*"வாளி அல்லது வேறு கொள்கலன்கள்" என்பதன் கருத்து இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றைக் குறிப்பதாகும்.*

*"உயிரியல் சேதனக் கழிவு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிப்பதாகும்.*

*"சேகரிப்பு" என்பதன் கருத்து கொண்டு செல்லுதல், மீள்பாவனை, பயன்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிகளுக்காக பிரதேச சபை கழிவு சேகரிப்பவரால் அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் வைத்திருக்கப்படும் அனுமதியாகும்.*

*"கூட்டெரு" என்பதன் கருத்து நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளம்படுத்தும் ஒரு பசளையாகும்.*

*"அகற்றல்" என்பதன் கருத்து ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது பிரதேச சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.*

*"அழித்தல்" என்பதன் கருத்து நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.*

*"கட்டணம்" என்பதன் கருத்து பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.*

*"உணவுக் கழிவு" என்பதன் கருத்து நுகர முடியாத அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.*

*"தோட்டக் கழிவு" என்பதன் கருத்து செடிகள் அல்லது மரங்களிலிருந்து அகற்றப்பட்டவை, வீட்டுத் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டவை.*

*"தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு" என்பதன் கருத்து நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்படுத்தக்கூடிய கழிவு.*

*"தொற்றை ஏற்படுத்தும் கழிவு" என்பதன் கருத்து உபகரணங்கள் கருவிகள் குடுவைகள் மற்றும் நோய் கடத்தும், அழிக்க வேண்டிய பொருட்களைக் குறிப்பதாகும்.*

*"விசேட கழிவு" என்பதன் கருத்து பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் என கொள்ளப்படும்.*

"உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்" என்பது வளவின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக அட்டோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர் என்பதற்குள் அடங்காத வாடகையாளர் ஆகியோரைக் குறிக்கும்.

"பிரதேசசபை" என்பது காரைதீவு பிரதேச சபையைக் குறிக்கும்.

"பிரதேச சபை பகுதி" என்பது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி.

"பிரதேச சபை கழிவு சேகரிப்பவர்" என்பது பிரதேச சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.

"பொது இடம்" என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.

"சுழற்சிக்கழிவு" என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.

"பயன்பாடற்ற கழிவு" என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை/ சுழற்சிக் கழிவாகக் கருதப்படாதவையாகும்.

"மீள்பாவனைக்கழிவு" என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீழ்பாவனை செய்யக் கூடியது.

"சுத்திகரிப்பு நிலக்குழி" என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதார மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.

"செயலாளர்" என்பது பிரதேசசபைக்காக 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபையின் கீழ் உருவாக்கப்பட்ட பிரதேசசபையின் செயலாளரைக் குறிக்கும் என்பதுடன் பிரதேசசபையின் செயலாளராக அல்லது அத்தகைய உத்தியோகத்தராக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட எந்வொரு நபரும் இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் ஒரு செயலாளரின் அதிகாரம், கடமை, செயற்பாடுகளை பிரயோகிக்க, பயன்படுத்த எவ்வளவு தூரம் அனுமதிக்கப்பபடுகிறதோ அவ்வளவிற்கு பயன்படுத்த அதிகாரமுடையோர்.

"வகைப்படுத்தல்" என்பது இத்துணைவிதிகளின் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.

"சேவைக் கட்டணம்" என்பது பிரதேச சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.

"திண்மக் கழிவு" என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.

"வீட்டுக் கழிவு" என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.

"களஞ்சியப்படுத்தல்" என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.

"இடமாற்றல் நிலையம்" என்பது பிரதேச சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.

"போக்குவரத்து" என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.

"பரிகரித்தல்" என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.

அட்டவணை 01

**சேவைக் கட்டணங்கள் :**

| சேவைக்கட்டண விபரம் | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை | | | உபவிதிகள் 10, 11,12,13, 15,18 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் வகை |
|---|---|---|---|---|
| | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உபவிதிகள் 8 மற்றும் 9 களின் கீழ் சமுர்த்தி (ரூபா) | |
| ஒரு மாதத்திற்கான சேவைக்கட்டணம் | 50 | 75 | 30 | *- |
| ஒரு வருடத்திற்கான சேவைக்கட்டணம் | 600 | 900 | 360 | *- |
| வருடத்தின் மாசி மாதத்திற்கு 28 ஆம் திகதிகது முன் செலுத்தப்படும் சேவைக் கட்டணம் 10% கழிவுடன் | 540 | 810 | 325 | *- |

*-வெளியேற்றப்படும் கழிவின் அளவைக் கருத்திற்கொண்டு சராசரி அடிப்படையில் பிரதேச சபை காலத்திற்குக் காலம் சேவைக்கட்டணத்தைத் தீர்மானிக்கும்.

வேறுவகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி, இத்துணைவிதியின் நோக்கத்திற்காக:

"சமுர்த்தி" என்பது அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் உதவியளிக்கப்படும் மற்றும் உரிய பிரதேச செயலாளர் பிரிவினால் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுமான குடும்பங்களை உள்ளடக்கி அர்த்தப்படுத்தப்படும்.

7-644/ 4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.